# சுதேசமித்திரன்

## வாரப்பதிப்பு

Vol 13 Nc. 13 26-4-'42 Price 2 Annas










குழந்தைப்பருவத்தில்
முக்கியமான சுகத்தைத் தரும்
வுட்வார்ட் வைத்தியனின்
"கிரைப் வாட்டர்"
என்னும் மருந்துத் திராவகம்
குழந்தைக்கு
ஆரோக்யத்லதத் தரும்.

**WOODWARD'S GRIPE WATER**

W. WOODWARD LTD., LONDON, ENGLAND

யில் ஆஸ்திரேலிய கனடா, நியூஸீலந்தின் அபிப்பிராயங்களைக் கேட்டுக் கொள்வோம். அந்நாடுகளின் பாதுகாப்பிற்காக பிரிட்டிஷ், யுனைடெட் ஸ்டேட்ஸ் சர்க்கார்கள் உதவி அனுப்ப முயன்று வருகின்றன, பஸிபிக் யுத்தத்தை நாம் இரண்டாம் பக்ஷமாகக் கருதவில்லை.''

சர்ச்சில் சர்க்காரிடம் நம்பிக்கையிருக்கிற தென்ற தீர்மானம் காமன்ஸ் சபையில் நிறைவேறிற்று. சாதகமாக 464 ஓட்டுகள்; பாதகமாக மிஸ்டர் ஜேம்ஸ் மாக்ஸ்டன் என்பவர் மாத்திரம் ஓட் செய்தார்.

விவாதத்துக்குப் பதிலளிக்கையில் மிஸ்டர் சர்ச்சில் கூறியதாவது:—

"அமெரிக்கத் துருப்புகள் வட அயர்லாந்திற்கு வந்துவிட்டதால் இனி பிரிட்டனிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கும் நியூஸீலாந்துக்கும் துருப்புகள் அனுப்ப முடியும்''

'ஜேஹோர் போரும், சிங்கப்பூர் தீவின் மீது நடக்கும் தாக்குதலும் எவ்வாறு முடியுமென்று என்னால் சொல்ல முடியாது. ஆனால் சென்ற சிலவாரங்களாக விடாமல் உதவியனுப்பி வருகிறோம்,

"பிரின்ஸ் ஆப் வேல்ஸ், ரிபல்ஸ், கப்பல்களுடன் அனுப்ப அப்போது விமானம் ஏற்றிச் செல்லும் பிரிட்டிஷ் கப்பல்களில்லை."

* * * *

### ஹிட்லர் பயமுறுத்தல்

ஹிட்லர் அதிகாரத்துக்கு வந்த தினத்தின் 9-வது ஆண்டு விழா சென்றமாதம் 30-ம் தேதி நடைபெற்றபோது, அவர் ஒரு ரேடியோ பிரசங்கம் செய்தார்.

பழைய நிகழ்ச்சிகளை மற்றோர் முறை மதிப்பிட்டு, தங்கள் வளர்ச்சிக்கும், வெற்றிக்குமான காரணங்களைப்பற்றி ஆலோசிப்பது உசிதமென்று அவர் குறிப்பிட்டார்.

"தற்போதைய யுத்தமும், இதற்கு முந்திய யுத்தமும் ஒன்றென்ற முறையில் சிலர் பேசுகிறார்கள். ஆனால் இந்த யுத்தமும் அரசியல் அமைப்பைப் பற்றியதன்று. இதற்குக் காரணங்கள் வேறு. இவைகளுக்கு பிரிட்டனே முக்கியப் பொறுப்பாளி" என்று ஹிட்லர் தெரிவித்தார்.

ஹிட்லர் பேசியதன் சாரம்:— ஐரோப்பாவில் பிளவுகள் இருந்துவர வேண்டுமென்பதே பிரிட்டனின் ஆவல். சுயநலத்தை முன்னிட்டுத்தான் அந்நாடு ஜெர்மனியுடன் போர் துவக்கியது. ஆங்கிலேயர்கள் ஆண்டிகளாயிருந்து திடீரென்று செல்வந்தர்களானவர்கள். ஜெர்மனி மிகச் சக்தி வாய்ந்த ஒரு சாம்ராஜ்யமாக விளங்கியபோது இங்கிலாந்து புல்மயமான ஒரு சிறு தீவாகவே இருந்தது.

ஜெர்மனியர் தங்களுடைய தவறுகளாலேயே சென்ற யுத்தத்தில் தோற்றனர். பிரிட்டிஷார் தங்களுடைய அபாரயோக்யதையால் வெற்றிபெற்றுவிடவில்லை.

நான் யுத்தத்தைப் பற்றி அதிகம் பேசப்போவதில்லை. அதைச் சரித்திரம் விளக்கும். நான் இங்கிலாந்து, இத்தாலி, ஜெர்மனி இந்நாடுகளுடன் ஒரு ஒப்பந்தத்துக்கு வர முயன்றேன், இங்கிலாந்து விஷயத்தில் நான் செய்த ஒவ்வொரு முயற்சியும் உருப்படாதொழிந்தது.

இத்தாலியுடன் நாம் ஒப்பந்தத்திற்கு வந்தது பற்றி நான் மிகவும் மகிழ்ச்சி யுற்றேன்.

ரஷ்யப் போராட்டம் பற்றி ஹிட்லர் குறிப்பிடுகையில் பின் வருமாறு தெரிவித்தார்:—

ஜெர்மன் படைகள் முன்னேறித் தாக்குவதைக் கைவிட்டு, இருந்தவிடத்திலேயே நின்று கொண்டு போராடுவதற்குக் காரணம் சோவியத் ராணுவத்தின் தாக்குதலல்ல, 30-35-45 டிக்ரியுள்ள கடும்பனி வீச்சே இதற்குக் காரணம். குளிர் காலமான நான்கு மாதங்கள் சீக்கிரத்தில் முடிந்து விடும். பனிக்கட்டி சீக்கிரத்தில் உருக ஆரம்பித்து நமது துருப்புகள் அழுத்தமான தரையில் முன்னேற வசதி ஏற்படும். பல ஸ்தலங்களைத் திரும்ப பிடித்துவிட்டோம் என்று ரஷ்யர் சொல்லலாம். ஆனால் அந்த ஸ்தலங்கள் அனைத்தும் அடியோடு பாழானவை.

இப்போது உலகிலேயே மிகச் சக்திவாய்ந்த ராணுவம் நம்மிடம் இருக்கிறது மகத்தான பலமுள்ள விமானப்படையும் நம்மிடம்தான் இருக்கிறது. எதிரிகளிடம் அதிகத் துருப்புகள் இருக்கலாம். ஆனால் மார்ச்சு அல்லது ஏப்ரல் மாதத்தில் நம்மிடம் அவர்களுக்குச் சமமான துருப்புகளாவது இருக்குமென்பது திண்ணம். தீவிரமாகப் போராடி வெற்றி பெறுவதைத் தவிர நமக்கு வேறு ஒரு வழியும் கிடையாது. அது சிரமமாயிருக்கலாம்.

யுத்தம் இவ்வருஷத்தில் முடிந்துவிடுமா வென்று நான் சொல்வதற்கில்லை. ஆனால் ஒன்றுமட்டும் நான் சொல்வேன். நமக்கும் எதிரிக்கும் எந்த இடத்தில் போர் நடந்தாலும், அவர்கள் முறியடிக்கப்படுவது நிச்சயம். இவ்வருஷமும் நமக்கு மகத்தான வெற்றி ஏற்படும். நமது சப்மரீன்களின் தொகை மிக்க அதிகரித்திருக்கிறது. இனி எல்லா சமுத்திரங்களிலும் நமது சப்மரீன்கள் எவ்வாறு வேலை செய்கின்றன வென்பதை எதிரிக் கப்பல் கூட்டங்கள் உணரும்.

இன்னும் அதிகமான தளவாடங்கள் உற்பத்தி செய்யுமாறு ஹிட்லர் தொழிலாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

* * * *

### தூரக்கிழக்கில் சங்கடம்

"நமக்கு இப்போது ஏற்பட்டுள்ள கஷ்டங்களுக்கெல்லாம் 1930-ம் வருஷத்திய லண்டன் கடற்படை ஒப்பந்தமே காரணம்'' என பிரிட்டிஷ் கடற்படைத் தலைவராயிருந்த ஸர் ரோஜர் கீஸ் பிவர்ஷாமில் ஒரு கூட்டத்தில் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:—

கடற்படையைச் சேர்ந்த நிபுணர்களின் ஆலோசனைக்கு விரோதமாக அவ்வொப்பந்தத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் கையெழுத்திட்டனர். இது காரணமாக நாம் முக்கியமாகத் தூரக்கிழக்கில் துன்பத்திற்குள்ளாக நேர்ந்திருக்கிறது. ஜப்பானியர் அப்பகுதியில் ஆதிக்கம் பெற்றுத் தங்கள் இஷ்டம் போல் எங்கு வேண்டுமாயினும் துருப்புகளையும் விமானங்களையும் கொண்டு போகின்றனர். அவர்களுக்குச் சமமான கடற்படையும் விமானங்களும் நம்மிடம் இல்லாததே இந்நிலைக்குக் காரணம்.

சென்ற யுத்தத்தின் இறுதியில் நமது கடற்படை எல்லா வகையிலும் ஜப்பானியக் கடற்படையைப்போல் நான்கு மடங்காயிருந்தது. ஆனால் லண்டன் ஒப்பந்தத்தின்படி 1937-ம் ஆண்டு வரை புதிய கப்பல்களைக் கட்ட நாம் அனுமதிக்கப்படவில்லை எனவே நாம மிகவும் கோளாறான நிலைமையில் யுத்தத்தில் ஈடுபடவேண்டியதாயிற்று.

ஜப்பான் இவ்வளவு துருப்புகளை இஷ்டம்போல் பல்வேறு முனைகளுக்குக் கொண்டுபோக முடிவதற்குக் காரணம், கடலில் யாரும் எதிர்க்க முடியாதபடி அவ்வளவு பலம் ஜப்பானுக்கு இருப்பதுதான்.

* * * *

### சிங்கப்பூர் யுத்தம்

ஜோஹோருக்கும், சிங்கப்பூர் தீவுக்கும் நடுவேயுள்ள பாலத்தைப் பிரிட்டிஷார் உடைத்து விட்டனர்.

தென் ஜோஹோரில்போராடி வந்த பிரிட்டிஷ் படைகள் வெற்றிகரமாகச் சிங்கப்பூர் தீவுக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டன.

ஜெனரல்போனல் வெளியிட்டுள்ள ஒரு செய்தியில், "மலேயாவில் சிங்கப்பூரைத் தவிர மற்ற பகுதிகளில் நடந்து வந்த யுத்தம் முடிந்து விட்டது. இப்போது சிங்கப்பூரைக் காப்பதற்கான யுத்தம் ஆரம்பமாகி விட்டது" எனத் தெரிவிக்கிறார்.

* * * *

### ஜப்பானின் ஐந்து முனைப் போர்

ஜாவாவுக்காக நடக்கவிருக்கும் போர் தான் பஸிபிக் யுத்தத்தில் முக்கிய சட்டம். இந்தப் போர் துவங்கும் சமயம் கிட்டி விட்டது.

ஐந்து முனைகளில் போரிட்டுக்கொண்டு ஜப்பான் தென் சமுத்திரத்தில் முன்னேறி வருகிறது. அந்த ஐந்து முனைகளாவன:—

(1) சிங்கப்பூரை நோக்கி நடைபெற்றுவரும் முன்னேற்றம். இங்கு தான் பிரிட்டிஷார் மிகக் கஷ்டத்துடன் இறுதியாகச் சண்டையிட்டு வருகின்றனர்.

(2) மேற்குப் போர்னியோவிலுள்ள பெமன் காட்டில் ஜப்பானியப் படை இறங்கியதும் ஸரவக் எல்லை வழியாக ஏற்பட்டுள்ள தாக்குதலும்.

(3) மகாஸர் ஜலஸந்தியின் வழியாக ஊடுருவிச் செல்ல செய்துவரும் முயற்சி இந்த முயற்சி போர்னியோ கிழக்குப் பக்கத்திலுள்ள பாலிகாப்பன் என்ற விடத்தில் தாற்காலிகமாகத் தடைபட்டிருக்கிறது,

(4) ஸெலிபஸ் தீவின் வடக்குப் பக்கத்திலுள்ள மினஹாஸாவைக் கைப்பற்றிய பின் அத்தீவின் தென்கிழக்குக் கரையோரத்திலுள்ள கெண்டாரி மீது துவக்கப்பட்டிருக்கும் தாக்குதல்;

(5) நியூ கினியையும் ஆஸ்திரேலியாவையும் நோக்கி முன்னேற்றம். இப்பொழுது அம்பாய்னா மீது நடைபெற்றுவரும் தாக்குதல் மேற்படி முன்னேற்

(28-ம் பக்கம் பார்க்க)

* * *

### எதிர்பாருங்கள் !

# ஜஹ்னர்

அல்லது

# இழந்த காதல்

★

மஹாராஷ்டிர வீரராக விளங்கிய சிவாஜி சத்ரபதியின் சரித்திரத்தில் ஒரு பகுதி இந்தப் புதிய நாடகம். பல ரசங்களும் அமைந்த கதை. ஔரங்கஜீப்பின் புத்திரி மஹாராஷ்டிர வீரரைக் காதலித்தாள்: காதல் எல்லா வரம்பையும் மீறியது: தியாகத்திற்கும் துணிந்தது: தன் உயிரையும் த்ருணமாகவே மதித்தாள்; தான் மனதில் வரித்த புருஷனுக்கு ஒரு தீங்கும் நேரிடக்கூடாது என்று ஜஹ்னர் நடந்து கொண்டவிதம் ஆச்சர்யகரமானது !

இந்த புதிய நாடகத்தைப் படிக்கப் படிக்க மேலும் ருசி பிறக்கும். நம் 'மித்திரன்' வாரப்பதிப்பில் வெளியாகும் தேதியை எதிர்பாருங்கள் ! !

வாரப் பதிப்பு சுதேசமித்திரன் 26 - 4 - 1942

# சென்றவார நிகழ்ச்சிகள்

### டோக்கியோ மீது குண்டுவீச்சு

இம்மாதம் 18-ந்தேதி டோக்கியோ, யோகஹாமா பிரதேசம் தாக்கப்பட்டதாகடாமி ஏஜென்ஸி தெரிவிக்கிறது.

டோக்கியோவில் வெளியிடப்பட்ட அறிக்கை எதிரி விமானங்கள் பல திசைகளிலிருந்து வந்ததாகக் கூறுகிறது. ஜப்பானிய ரேடியோ சேதமேற்பட்டதாகவும் அறிவித்திருக்கிறது.

"டோக்கியோ, யோகஹாமா பகுதிகள் மீது 18-ந்தேதி குண்டு வீசிய விமானங்கள் யுனைடெட்ஸ்டேட்ஸைச் சேர்ந்தவையே என்பதில் சந்தேகமில்லை'' என ஜப்பானிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

* * * *

### ஜப்பானிய மன்னருடன் பேட்டி

ஜப்பானியப் பிரதம மந்திரி ஜெனரல் டோஜோவும் கடற்படை மந்திரி ஷிமாடாவும், வெளிநாட்டு மந்திரி டோகோவும், சென்ற 18-ந் தேதி ஜப்பானியச் சக்கிரவர்த்தியை பேட்டி கண்டனர். டோக்கியோவில் நேர்ந்த குண்டு வீச்சைப் பற்றித் தெரிவிக்கவும், ஜப்பானியச் சக்கிரவர்த்தியின் தேக சௌக்யத்தைப் பற்றி விசாரிக்கவுமே இவர்களுடைய விஜயம் என்பதாக டோக்கியோ ரேடியோ கூறுகிறது. ஜப்பானியச் சக்கிரவர்த்தி விமானத்தாக்குதலைப் பற்றி வருத்தம் கொண்டிருந்தாராம்.

* * * *

### இதர இடங்களில் குண்டுவீச்சு

கின்மி சுகோகு பகுதிகளிலும் விமானப் படையெடுப்பு எச்சரிக்கை செய்யப்பட்டது.

ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் அறிவிப்பதாவது;—17-ம் தேதி யோகஹாமா மீதும் குண்டு வீசப்பட்டது. அன்று பகல் 12-30க்கு எதிரி விமானங்கள் டோக்கியோவுக்கு மேலே காணப்பட்டன. உடனே ஜப்பானிய யுத்த விமானங்களும், விமான எதிர்ப்பு பீரங்கிகளும் எதிரி விமானங்களை எதிர்க்கலாயின.

மூன்று எதிரி விமானங்கள் நகோயா கோபி நகரங்கள் மீது படையெடுத்ததாக ஒஸாகாவிலிருந்து வந்த ஒரு செய்தி கூறுகிறது.

அபாய எச்சரிக்கை மொத்தம் ஏழுமணிநேரம் அமுலிலிருந்தது.

* * * *

### மிஸ்டர் சர்ச்சில் அறிக்கை

'டார்ஸெட்ஷயர்' 'கார்ன்வால்' மூழ்கடிக்கப்பட்டது பற்றி மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸில் கூறியதாவது:—

ஏப்ரல் 4-ந்தேதி யன்று பெருத்த ஜப்பானியக் கடற்படை இலங்கையை நோக்கிச் சென்றது. 16 அங்குல பீரங்கிகள் கொண்ட நவீன யுத்தக் கப்பலொன்றுள்பட, குறைந்தது 3 யுத்தக் கப்பல்களும், 5 விமான மேற்றிக் கப்பல்களும், பல்வேறு க்ரூய்ஸர்களும், நாசகாரிகளும் சேர்ந்து சென்றன. கொழும்பு திரிகோணமலைத் துறைமுகங்களைக் கடுமையாகத் தாக்கின. ஆனால் தாக்கிய விமானங்களில் அநேகம் ஏற்கனவே கூறியது போல் நஷ்டமாயின. நமக்கு விமானச் சேதம் எதிரியவ்வளவில்லையானாலும் அது நம் நிலையில் கடுமையானது. துறைமுகத்திற்கும் துறைமுகத்திலிருந்த சில கப்பல்களுக்கும் சேதமேற்பட்டது. இவை தவிர துறைமுகத்திலிருந்து தாக்குதலுக்கு முன் கிளம்பிச் சென்ற 'டார்ஸெட்ஷயரும்' 'கார்ன்வா'லும், 'ஹெர்மிஸு'ம் எதிரி விமானங்களால் மூழ்கடிக்கப்பட்டன.

இந்த எதிரித் தாக்குதலையெதிர்த்தவர் ஸர் ஜேம்ஸ் ஸாமர்வில். இவர் மத்தியதரைக் கடல் முதலிய இடங்களில் நவீன யுத்த முறைகளில் நல்ல அனுபவம் பெற்றவர்.

* * * *

### லவாலுக்கு அதிகாரம்

மார்ஷல் பிடெய்ன் சென்ற 14-ம்தேதி அட்மிரல் டார்லானுடனும் லவானுடனும் கலந்து பேசி விச்சி சர்க்காரைப் "புதிய முறையில்" திருத்தியமைப்பதென முடிவு செய்தார். மிஸ்டர் லவால் அட்மிரல் டார்லானைப் பலமுறை சந்தித்துப் பேசினர். அந்த சம்பாஷணைகளின் பலனாகவே மேற்கூறிய முடிவு ஏற்பட்டது.

மிஸ்டர் லவால் "ராஜாங்கத் தலைவர்'' என்ற பட்டத்துடன் உத்தியோகம் வகிப்பாரென்றும் மந்திரி சபைக் கவுன்ஸிலின் தலைவர், உபதலைவர் போன்ற பதவிகள் கைவிடப்படுமென்றும், விச்சி விளம்பர மந்திரி மிஸ்டர் மேரியன் அறிவிப்பதாக ஜெர்மன் ரேடியோ கூறுகிறது.

* * * *

### ஜெர்மனிக்கு பிரஞ்சுக் கப்பல்கள்

ஸோவியத் செய்தி ஸ்தாபனத்துக்கு வந்துள்ள ஜினிவா செய்தி:—

மூன்று யுத்தக் கப்பல்களையும் ஒரு விமானமேற்றிக் கப்பலையும் மற்றும் 15 கப்பல்களையும் விச்சி சர்க்கார் ஜெர்மனிக்கு மாற்ற, ஜெர்மனிக்கும் விச்சி சர்க்காருக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் 14-ம்தேதியிலிருந்து அமுலுக்கு வந்துவிட்டது.

இவ்வொப்பந்தத்தின்படி 10 நாசகாரிகளும், பல சேதமடைந்த கப்பல்களும் டூலன் மால் ஸேல்ஸ் துறைமுகங்களில் ரிப்பேர் செய்யப்படும்.

### அமெரிக்க விமானங்கள் ரங்கூனைத் தாக்கின

இந்தியாவிலுள்ள அமெரிக்க விமானப்படை தலைமை ஸ்தல அறிக்கை ஒன்று கூறுவதாவது:—

பெரிய வெடிகுண்டெறியும் அமெரிக்க விமானங்கள் 16-ந் தேதி இரவு ரங்கூனைத் தாக்கின. படகுத் துறையிலும், துறைமுகத்திலும் கடும் குண்டு வீச்சு நடந்தது.

விமான எதிர்ப்பு பீரங்கிகள் மும்முரமாக வேலை செய்தனவாயினும் நமது விமானங்களுக்கோ விமானிகளுக்கோ ஒரு சேதமும் ஏற்படவில்லை.

* * * *

### புதிய பிரிட்டிஷ் வரவு செலவு திட்டம்

பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரி ஸர் கிங்ஸ்லிவுட் காமன்ஸ் சபையில் வரவு செலவு திட்டத்தைச் சமர்ப்பித்தார்.

அவர் பேசியதாவது:—பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து பிரிட்டனுக்கு வரும் புகையிலைக்கு சுங்க வரிச் சலுகை மேலும் ஒரு வருஷத்திற்கும், சர்க்கரைக்கு இரண்டு வருஷத்திற்கும் நீடிக்கப்படும்.

சர்க்கார் சேகரித்து வைக்கும் முக்கியமான உணவுப்பொருள் அதிகமாயிருக்கிறது. தனிப்பட்டவர்களிடம் உள்ள உணவுப் பொருள்கள் மிகவும் குறைந்து விடவில்லையானாலும் ஸப்ளைகள் வருவது குறைந்து வருகின்றன.

பிரிட்டனுக்கு மாதா மாதம் யு எஸ்ஸிலிருந்து 10 கோடி ஸடர்லிங் பெறுமான தளவாட இரவல் உதவி வருகிறது.

1941-42-ல் 20,740 லக்ஷம் பவுன் வருமானம்; இது எதிர்பார்த்ததைவிட 2,880 லக்ஷம் அதிகம்; செலவு 47,760 லக்ஷம் பவுன். இது எதிர்பார்த்ததைவிட 2,760 லக்ஷம் அதிகம்.

எதிரிகள் நம் நாட்டின் வாயிலிலிருக்கின்ற போதிலும் நம் பொருளாதார நிலை பாதிக்கப்படவில்லை.

1942-43-ல் மொத்தச் செலவு 52,860 லக்ஷம் இருக்குமென மதிப்பிடுகிறேன். இது சென்ற வருஷச் செலவைவிட 5,100 லக்ஷம் அதிகம். எல்லா இனங்களிலுமாகச் சேர்ந்து 65,000 லக்ஷம்கிடைக்கும். இதில் 45,000 லக்ஷம் பிரிட்டனில் மட்டும் கிடைக்க வேண்டும். வரி கொடுப்போரே அதிக உதவி செய்ய வேண்டிவரும்.

சர்க்காரின் பொருளாதாரக் கட்டுப்பாடுகளும் பங்கீடு திட்டங்களும் அதிகரித்து வரப்படும். சாராயங்கள், ஒயின்கள், புகையிலை, ஸிகரெட்டுகள் தமாஷ்கள் முதலியவற்றின் மீதுள்ள வரிகள் அதிகரிக்கப்படும்.

ஸினிமாக்களில் வருஷா வருஷம் மொத்தம் 14000 லக்ஷம் டிக்கட்டுகள் விற்கப்படுகின்றன. 7 பென்ஸுக்கு அதிகமான டிக்கட்டுகளுக்கு இப்போதுள்ள தமாஷா வரி இரட்டிக்கப்படும்.

ஆடம்பரச் சாமான்கள், முக்கிய மற்ற சாமான்கள்-இவற்றிற்கான செலவு மிகக் கட்டுப்படுத்தப்படும்.

மேற்கூறிய புகையிலை முதலான எல்லா வரிகளிலிருந்தும் 1,500 லக்ஷம் கிடைக்கும்.

* * * *

### யு. எஸ். யுத்த மந்திரி அறிக்கை

"எவ்வளவு கஷ்டமாயிருப்பினும் நாமே தாக்க ஆரம்பிக்கக் கூடிய நிலைமையை அணுகுகிறோம். சரியான முறையில் இது சம்பந்தமான காரியங்கள் நடக்கின்றன'' என்று யு. எஸ். யுத்த மந்திரி மிஸ்டர் ஸ்டிம்ஸன் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

'எவ்வளவு சீக்கிரம் சந்தர்ப்பம் நேருகிறதோ அவ்வளவு சீக்கிரமாக நாம் திருப்பித் தாக்கப்போகிறோம். நம்சாதனங்களையும் தொழிற்சாலைகளையும் முதலில் நாம் பெருக்கவேண்டும். உலக முழுதும் சம்பந்தப்பட்டுள்ள இந்த யுத்தத்தில் நாம் பாதுகாக்க வேண்டிய இடங்கள் எவ்வளவோ தூரத்தில் உலகின் பல பாகங்களில் இருக்கின்றன. நமக்கு முக்கியமான இடங்கள் சிலவற்றை சில நேச நாடுகள் காக்கின்றன' என்றார் அவர்.

* * * *

### நாஸி தளபதி நீக்கம்

ரஷ்ய அரங்கத்தின் வடபகுதியிலுள்ள ஜெர்மன் சேனையின் தலைமையிலிருந்து ஜெனரல் வான் லீப் விலக்கப்பட்டிருக்கிறார்; இப்பதவியை ஜெனரல் வான் குச்லர் ஏற்றுக்கொண்டிருக்கிறாரென லண்டனில் அதிகாரிகள் கூறுகின்றனர்.

* * * *

### ரஷ்ய யுத்தம்

ஆஸாவ் கடலில் டாகன்ராகிலுள்ள ஜெர்மன் அரண்களின் மீது நான்கு ஸோவியத் நாசகாரிகள் பீரங்கிப் பிரயோகம் செய்தன.

கெர்ச் தீபகற்பத்தில் ஜெர்மன் வரிசைகளின் வலப்புறத்தின்மீது மற்றும் சில ஸோவியத் யுத்தக் கப்பல்கள் பீரங்கிப் பிரயோகம் செய்தன. இப்பகுதியில் ஜெர்மன் ருமேனிய வரிசைகளுக்கிடையே ரஷ்யத் துருப்புகளை இறக்க பெரிய ரஷ்ய குரூஸரொன்று முயன்றது.

பின்னிஷ் முனையில் ரஷ்யத் துருப்புகள் எதிரி வரிசைகளுக்குள் ஊடுருவி பல மைல்கள் முன்னேறின; 1000 பின்னிஷ் காரர் கொல்லப்பட்டனர்.

# 'அந்த உருப்படாத திட்டம்'

## மஹாத்மா காந்தி



### மூன்று முக்கியஸ்தர்கள்

இந்திய ஸேனாபதி ஸர் ஆர்ச்சிபால்ட் வேவல் அமெரிக்க ஜனாதிபதி தூதர் கர்னல் லூயி ஜான்ஸன், ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ் மூவரும் சம்பாஷிக்கின்றனர். ஸர் க்ரிப்ஸ் டில்லியை விட்டுக்கிளம்புமுன் எடுத்த படம்.

பிரிட்டிஷ் சம்பந்தத்திலிருந்து விலகிவிடுவதற்கான உரிமை அளிக்கப்பட்டிருந்தபோதிலும், குடியேற்ற நாட்டந்தை காங்கிரஸ் (மற்றக் கக்ஷிகள் ஆதரிப்பினும்) ஆதரிக்காது என்பதை அவர் அறிந்திருக்கவேண்டும். தவிர மேற்படி யோசனையில் இந்தியாவை மூன்று பாகங்களாகப் பிரிக்க உத்தேசிக்கப்பட்டிருந்ததை அவர் அறிவார். மூன்று பிரதேசங்களின் !ஆக்ஷி முறையும் வெவ்வேருக இருந்தது: சர்க்கார் யோசனையில் பாகிஸ்தான் உத்தேசமிருந்தது; ஆனல் அது முஸ்லிம் லீக்கோரும் பாகிஸ்தான் அல்ல. இன்னெரு கோளாறு யாதெனில் பாதுகாப்பு பொறுப்பு வாய்ந்த மந்திரிகளின் அதிகாரத்துக்கு விடப்படவில்லை.

### நம் விஷயத்தில் கவனம்

உண்மை இதுதான்! ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ் ஏகாதிபத்தியக் கொள்கையை அமுல் நடத்திவரும் ஒரு கோஷ்டியைச் சேர்ந்தவர்; ஆகவே அதன் சுழலில் அவர் சிக்கி விட்டார்! இந்தியாவிலும் இதே மாதிரி நடப்பதை நாம் கண்டி

### திட்டத்தின் கோளாறுகள்

"யாராலும் ஏற்க முடியாத மிக்க கேவலமான ஒரு யோசனையை, இந்திய அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்காகப் பிரிட்டிஷ் சர்க்கார் வெளியிட்டது ரொம்பவும் பரிதபிக்கத்தக்கதாகும். போதாக்குறைக்கு தீவிரவாதிகளுள் தீவிரவாதியாகவும், இந்தியாவின் அன்பரென்றும் கொண்டாடப்படும் ஸர் ஸ்டாபோர்ட் மேற்படி யோசனையைச் சுமந்துகொண்டு வந்தது துர்ப்பாக்கியமாகும். ஸர் ஸ்டாபோர்டின் நல்லெண்ணத்தில் எனக்குச் சந்தேகமே கிடையாது. தம்மைக் காட்டிலும் வேறு யாரும் இதைவிட நல்ல யோசனையை இந்தியாவுக்குக் கொண்டு வந்திருக்க முடியாதென்று அவர் நம்புகிருர்.

### "சௌக்யமாய்ப் போய்வாருங்கள்"

ஸர் ஸ்டார்போர்டு கிரிப்ஸ் டில்லியிலிருந்து விமானத்தில் புறப்பட்டபோது அவரை வழியனுப்ப சமஷ்டி பிரதம நீதிபதி ஸர். மாரிஸ் க்வயர் கர்னல் லூயி ஜான்ஸன், இந்திய தளபதி ஸர் ஆர்ச்பால்ட் வேவல் ஆகியவர் 'வந்திருந்தனர்.



### 'விடை தாருங்கள்'

ஸர் கரிப்ஸ் விமானத்தில் ஏறிக் கிளம்புமுன்பு அமெரிக்காவிலிருந்து வந்த கர்னல் லூயி ஜான்ஸனிடம் கை குலுக்கி விடை பெற்றுக் கொள்கிருர்.



ருக்கிருேம். அதிகார வர்க்கத்துடன் சேருபவர்கள் தங்களுடைய சொந்த சிந்தனு சக்தியை இழந்துவிடுவது மட்டுமன்றி 'தங்களுடைய சகாக்களைப் போலவே, ஏகாதிபத்தியத்துக்குப் பக்தி சிரத்தையுடன் ஸேவை புரியக் கிளம்பி விடுகிருர்கள். ஸர் ஸ்டாபோர்ட் ஏகாதிபத்தியத்துடன் சம்பந்தப்படாமலிருந்திருந்தால் இந்தியாவிலுள்ள தீவிர வாதிகளான தம்முடைய நண்பர்களுடன் கலந்து பேசி, அவர்களுடைய பாராட்டைப் பெற்றிருப்பார். ஆனல் ஏகாதிபத்தியத்துடன் ஒன்றிவிட்டதால் அதற்கு அவர் வசியமாகி விட்டார். ஆகவே வேறுவிதமாக எதுவும் செய்ய அவுரால் இயலாது. எனினும் பிரிட்டிஷாரின் பழைய தவறுகளைப் பற்றியெல்லாம் சிந்தித்துக் கவலைப்படுவதில் பிரயோஜனமில்லை. ஆத்மசோதனையில் இறங்குவதே நல்லது; அதனல் பலனுண்டு. நம் விஷயத்தில் நாம் கவனம் செலுத்தினுல் பிரிட்டிஷார் தங்கள் விஷயத்தைக் கவனித்துக் கொள்வர். நம்முடைய தவறுகள்—குறைபாடுகள் என்றும் சொல்லலாம்—அனந்தம். நம்மிடமே குறைகளிருக்கும் பொழுது பிரிட்டிஷாரைக் குறைகூறுவானேன்?

### வகுப்புப் பிணக்கு

வகுப்புப் பிணக்கைத் தீர்க்காமல் நாம் சுயேச்சையைப் பெற முடியாது. வெட்ட வெளிச்சமான இவ் விஷயத்தில் நாம் கண்ணை மூடிக்கொண்டிருப்பதற்கில்லை. பிரச்னையைத் தீர்ப்பது எப்படி என்பது வேறு விஷயம். பிணக்கு தீராமலேயே சுயேச்சை கிடைக்கும் அல்லது கிடைக்கக்கூடும் என்று இரு தரப்பினரில் ஒரு சாரரோ அல்லது இரு சாராருமோ எண்ணும் வரையில் பிரச்னையை நாம் ஒரு நாளும் தீர்க்க மாட்டோம். தீர்க்கவே முடியாது போல் தோன்றும் பிரச்னையைத் தீர்க்க இரண்டு வழிகளிருக்கின்றன. அஹிம்ஸை ஒரு வழி; இது தான் சிறந்தது; இன்னென்று ஹிம்ஸை அல்லது பலாத்காரம். முதல் கூறப்பட்ட வழியைக் கையாளுவதில் இன்னெரு தரப்பின் சம்பிரதாயமான சம்மதத்தையோ ஒத்துழைப்பையோ பெற வேண்டிய அவசியமில்லை. ஒரு ஆப்பிள் சம்பந்தமாக இரண்டு பையன்களுக்கிடையே சச்சரவு ஏற்படுகிறதென்று வைத்துக்கொள்ளுவோம். அஹிம்ஸா பூர்வமாக சச்சரவைத் தீர்ப்பதாயின், ஆப்பிளை இன்னெருவர் எடுத்துக் கொள்ளட்டும் என்று விட்டுவிடுவது தான். சரி இம்மாதிரி விட்டுக்கொடுப்பவர் ஒத்துழையாமையை அனுஷ்டிக்கிருர் என்பது மற்றவருக்கு நன்குதெரிந்துவிடும். இரண்டாவதுவழி சகஜமானபலாத்கார வழி. இதைக் கையாளுவதில் இருவரும் பலமாகச் சண்டையிடுகின்றனர்: தற்காலிகமாக யாராவது ஒருவர் வீழ்த்தப்படுகிருர். சுதந்திரத்தில் பிரியமுள்ளவர்கள் அனைவரும் எந்த வழியைக் கையாளுவதென்று முடிவு செய்துகொள்ள வேண்டும். முக்கியமானவர்கள் ஏற்கனவே முடிவு செய்து விட்டார்கள். ஆனல் அவர்களைப் பின்பற்றுபவர் இன்னும் சந்தேகத்தில் தான் இருக்கின்றனர். சாத்தியப்பட்டால் அவர்கள் தாங்களாகவே யோசித்து, ஒற்றுமையை முன்னிட்டு அஹிம்ஸா வழியை அனுஷ்டிக்க வேண்டியதவசியமாகும்.



### இப்போது சண்டை எதற்கு?

ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்று பட்டு வாழவேண்டும். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தனி ஜாதியினரென்பதிலும் வகுப்பு முறையில் நாட்டைப் பிரிக்க வேண்டுமென்பதிலும் நம்பிக்கை கொண்டவர்கள் ஒற்றுமையாகவும், சிநேகபான்மையுடனும் வாழமுடியுமா என்பது எனக்குத் தெரியாது. முஸ்லிம்களில் பெரும்பாலோர் தங்களைத் தனித்த ஜாதியாகவும், ஹிந்துக்களுக்கும் மற்றவர்களுக்கும் தங்களுக்குமிடையே பொதுவான அம்சம் எதுவுமில்லை யென்றும் எண்ணினுல் அவர்களுடைய அபிப்பிராயத்தை யாராலும் மாற்ற முடியாது. இந்த ஆதாரத்தின் பேரில் இந்தியாவைத் துண்டாட வேண்டுமெனும் பக்ஷத்தில், ஹிந்துக்கள் எதிர்த்துப் போரிட விரும்பினுலொழிய முஸ்லிம்கள் பிரிவினையை அடைய வேண்டியதே. என்னைப் பொறுத்தமட்டில் இருதரப்பினர் சார்பிலும் மெதுவாகப் பிரிவினை நடந்து வருவதை நான் காண்கிறேன். இது தற்கொலையில் தான் போய் முடியும், அநேகமாக ஒவ்வொரு தரப்பினரும் பிரிட்டிஷாரின் உதவியையோ அல்லது மற்ற வெளிநாட்டினரின் உதவியையோ கோருவர். அப்போழுது சுயேச்சைக்காகப் போராட்டம் நடக்காது; இதர விஷயங்களுக்காகவே நடக்கும். அதன் விளைவு என்னவாகும் என என்னுல் நினைக்கக்கூட முடியவில்லை. அதைக் கண்ணுல் காணவும் நான் விரும்பவில்லை. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சுயேச்சைக்காக ஒன்று சேர்ந்து போராடுவதைப் பார்க்கவே எனக்கு ஆவல். சுயேச்சையைப் பெறுவதற்கான முயற்சியில் நம்முடைய சொந்த சண்டை சச்சரவுகளை நாம் மறந்து விட்டாலும் விடலாம்: அப்படியே மறக்காமல் போனுலும் சண்டை பிடிப்பதற்கு அவசியமிருந்தால் பிற்பாடு சண்டையிடலாம்.—("ஹரிஜன்")

### "போய் வருகிறேன்"

தமது சம்பாஷணைகள் முடிந்து விட்டதும் புது டில்லி வில்லிங்டன் விமான நிலயத்திலிருந்து விமானத்தில் கிளம்ப ஸர் க்ரிப்ஸ் தயாராயிருக்கிருர்.



ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் 1937-ல் நாகபுரியில் நடந்த அகில இந்திய ஸ்திரீகள் மஹா நாட்டில் கலந்துகொண்டார். படத்தில் ஸ்ரீமதி பண்டிட்டும் ஸ்ரீமதி அனுஸூயா பாய் காளேயும் இருக்கின்றனர்.

# நாடு நலம்பெற வழி ★

★ ★ ஸ்ரீமதி **விஜயலக்ஷ்மி பண்டிட்** எழுதியது

### தேசம் முன்னேற்றம்

இப்போது நான் பிரஸ்தாபிக்கப்போகும் விஷயம் புதிதல்ல: பல தடவை விவாதிக்கப்பட்டது: பல வியாஸங்களில் இடம் பெற்றிருக்கிறது. எந்த தேசத்தின் உயர்வும், அதில் இருக்கும் ஸ்திரீகளையே தழுவியிருக்கிறது என்பதே நான் இப்போது எடுத்துக்கொண்டிருக்கும் விஷயத்தின் அம்சமாகும். நான் இதை புது மாதிரியில் ஆராயப்போகிறேன்: இந்த சமயத்தில் இது தான் ஏற்றது என்பது என் கருத்து; ஒரு நாட்டின் மேன்மைக்கு அதன் ஸ்திரீகளோ புருஷர்களோ தனித் தனியாக உதவுவதில்லை: ஆனால் அவ்விருபாலரும் சேர்ந்து செய்யும் முயற்சி தான் பலன் தருகிறது: எந்த நாட்டிலும் ஒரு பாதி மக்கள் செய்யும் முயற்சியினால் பூரண பலன் கிடைத்து விடாது. ப்ளேடோ (Plato) தாம் எழுதிய "குடியரசு" என்ற புத்தகத்தில் ஒரு தேசத்து மக்களில் பாதிக்கு மேல் அறியாமையில் ஆழ்ந்திருந்தால் அந்த தேசம் முன்னேற முடியாது என்கிறார். கல்வித் துறை மட்டுமின்றி, இதர துறைகளும் இதே மாதிரி பாதிக்கப்படுகின்றன. ஒரு தேசத்தில் ஸ்திரீகள் புருஷர்களைக் காட்டிலும் அதிகம் பிற்போக்கடைந்திருந்தால், அந்தப் பிரதேசத்தில் நாகரீகம் நன்கு நிலவுவதற்கான முக்கியாம்சங்கள் காணப்படமாட்டா: நம் நாட்டில் முன்பு இருந்ததும் இப்போது இருந்துவருவதுமான நிலைமையைப் பரிசீலிப்போம்.

### காரணம் என்ன ?

இந்தியா முன்பு உலக முன்னணியில் இருந்ததாகக் கூறப்படுகிறது. உலகத்தில் கலாபிவிருத்திக்கு முன்னர் காரணமாயிருந்த நம் நாடு, பிற தேசங்களிடமிருந்து ஸ்வீகரிக்க தற்சமயம் தயாராயிருப்பதுடன், தானும் உலகுக்கு அரிய செய்தியை அளிக்க வேண்டியிருக்கிறது என்பதை இப்போது அறவே மறந்திருக்கிறது. நாம் இவ்விதம் முற்போக்கு அடையாமல் இருந்து வருவதற்கு நம் ஸ்திரீகளது நிலைமைதான் காரணம் என்பது என் அபிப்பிராயம்: நீங்கள் பொறுமையுடனிருந்தால் நான் இதற்குக் காரணம் காட்ட முடியும்.

### இந்திய ஸ்திரீகள்

இந்திய ஸ்திரீ நம் க்ரஹ லக்ஷ்மி. பிறவி முதல் அவளை அன்புடனும் ஆதரவுடனும் வளர்த்து வருகின்றனர்: புருஷர்கள் அவளை ஒரு புனிதமான பொக்கிஷம் போல் பாதுகாக்கின்றனர். அவளுடைய அழகைக் கெடுக்கக் கூடாதென்று அவளை மறைத்து வைக்கின்றனர்: ஒரு கடுஞ்சொல் அவளது வாழ்நாளை விரயமாக்கக்கூடாதென்பதும் இதன் கருத்து. 'பிரதிதினமும் ஏழைகள் அவஸ்தைப்படும் இந்த உலகத்தில் ஸ்திரீகளுக்கு மட்டும் கஷ்டமோ கடுமையோ கூடாது என்கின்றனர். ஊன்றிக் கவனித்தால் ஸ்திரீ மிகவும் அத்ருஷ்டசாலி. பஞ்சு மெத்தையில் உட்கார்ந்து, நூலைப் பின்னிக் கொண்டு, சுகமாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் கதா நாயகியின் ஞாபகம்தான் நமக்கு வருகிறது. ஒருவருக்கு அதிக நன்மையே நீடித்திருக்கலாம். ஸ்திரீகளிடம் இவ்வளவு சிரத்தையும் பரிவும் காட்டப்பட்டு வருகிறபோதிலும், அவர்கள் இவற்றை உதறித் தள்ளத் துணிந்துவிட்டனர், ஒரு நிலையான சுகம் திருப்தி தருவதாயில்லை! எப்பொழுதும் நல்ல உணவு கிடைத்து வருவதால் ருசியும் தவறிப்போகிறதல்லவா?

### வாழ்க்கை வசதி அதிகரித்த பின்

உலகின் ஆரம்ப தசையில், நாகரீகம் உருப்பெருத நாளில் பெண் ஜாதியினர் வீட்டிலேயே தங்கி குழந்தைகளையும் சாப்பாட்டு சௌகரியத்தையும் கவனித்துவந்தனர்: புருஷர்கள்



வெளியே வேட்டைக்குப்போய் விடுவார்கள். மனுஷ்ய வாழ்க்கை பெருக பெருக. விவசாயத்தில் நாட்டம் சென்றது: இருந்தும் ஸ்திரீகளது தொழில் தங்களது வீடு மட்டும்தான் இருந்தது. உணவுப் பொருள்களின்மீது ஆதிக்கம் ஏற்படவாரம்பித்த பின், புருஷர்களிடையே சொத்துரிமையில் ஆசை வளர்ந்தது. தனது ஆடு மாடுகளைப் பாதுகாத்து வந்த அவன், தன் மனைவி மக்களும தனது சொத்துதான் என்று எண்ணலானான். பலவானே தலை தூக்கி நின்றான்: ஒரு ஜாதியாரின் தலைவனுடைய அதிகாரம் எப்பொது அடங்கியதோ, அப்போதே அவனையும் அவனுடைய சொத்துக்களையும் அவனது இளைய விரோதிகள் தங்களது பலத்தின் மிகுதியால் கைப்பற்றலானார்கள். ஆகவே, ஸ்திரீகளும் சிறுவர் சிறுமிகளும், தலைவனின் அதிகாரத்திற்கு அடங்கி நடப்பதைக் கட்டாயப் படுத்தவேண்டியதாயிற்று.

### பெண் கல்வித் திட்டம்

ஒவ்வொரு தேசத்திலும் பலஹீனர்களைப் பல கட்டுப்பாடுகளால் அடக்கி வைக்கவேண்டியதாயிற்று. மேனாட்டு ஸ்திரீகள் இத்தகைய பந்தங்களிலிருந்து விடுபட பாடுபடுகின்றனர். ஆனால் கீழ் தேசத்தில் இருக்கும் நாம் மட்டும் இன்னும் பலதரப்பட்ட தடைகளுக்குட்பட்டு வாழ்க்கையை நடத்திவருகிறோம். ஸ்திரீகள் சில விதிகளுக்கு அடங்கி நடந்தால் தான் அவர்களுக்கு அவசியமான பாதுகாப்பு அளிக்கப்படும் என்பதை வற்புறுத்தவே பெண் கல்வித் திட்டம் அமைக்கப்பட்டது.

### புராதன நாளில்

எந்த நாளிலும் ஸ்திரீகளுக்கு சுதந்திரம் இருந்தது கிடையாது. பண்டைய கிரீஸ தேசத்தில், பால்ய தசையில் பிதாவும், பருவமடைந்த பின் பதியும், வயது முதிர்ந்த பின் புரோஹிதரும் ஸ்திரீகளது வாழ்க்கையைப் பாதித்து வந்தனர். இதிலிருந்து ஒரு தேசத்தில் மட்டும் ஸ்திரீகள் அடிமைப் படுத்தப் படவில்லை என்பதும், நாகரீகமும் அறிவும் முதிர்ந்த புராதன கிரேக்கர்களும், ஸ்திரீகள் சுதந்திரமற்றவர்களாதல்பற்றி அவர்களைப்பிறர் பாதுகாத்துவரவேண்டும் எனக் கருதி வந்தனர் என்பதும் தெளிவாகும்.

### ஆச்சார்ய விஸ்வாசம்

நம் நாட்டில் கூட பிரசித்த தர்மசாஸ்திரகர்த்தாவான மனு இதேமாதிரி கருத்தைக் கூறியிருக்கிறார். ஒரு ஸ்திரீயை அவளது இளமைப் பிராயத்தில் அவளது தகப்பனும், யுவதியான பின் அவளது கணவனும், கிழவியானதும் அவளது குமாரனும் பாதுகாத்து வரவேண்டும் என மனு விதித்திருக்கிறார். ஆசார்யனது தொடர்பு தான் எக்காலமும் நீடித்திருக்கிறது எனக்கூறலாம் என்று எனக்குத் தோன்றுகிறது: ஏனெனில் இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலும் ஸ்திரீகளைப்போல் தங்களையுமறிமாமல் மதகுருவிடம் அதிக பக்தி கொண்டவர்கள் கிடையாது.

### கட்டுப்பாடு நீடிக்கும் விதம்

தன் வீட்டிற்கு வெளியே என்ன நடக்கிறது என்பதைக் கூட அறிய விடாமல் வளர்க்கப்பட்டுவரும் இந்தியப் பெண், அவளது பிதாவின் சொத்து போல் பாவிக்கப்பட்டு, வேறு ஒருவரிடம் ஒப்படைக்கப்படுகிறாள்: இதற்கப்புறம் அவள் தனது பர்த்தாவின் சொத்தாகமாறி விடுகிறாள். பிறகு அவள் தன்து வாழ்க்கையை வினயத்துடனும் பக்தியுடனும் நடத்தி பதிக்கு சேவை செய்கிறாள். அவளுக்கு விதவையாகும் துரத்ருஷ்டம் நேர்ந்துவிட்டால் அவள் தன்பிள்ளைகளுக்கு கீழ்ப்படிந்து நிற்க நேரிடுகிறது. மதம் ஜாதி,சமூகம் — இவை ஸ்திரீகளின் பாதுகாப்புக்காகவும், அவளது பர்த்தாவின் குடும்பத்தார் சுகமாகவும், சந்தோஷத்துடனும் வாழ்வதற்காகவும்சிலவிதிகளை நிர்ணயித்து வைத்திருக்கின்றன. இந்த விதிகளிலிருந்து அவள் வழுவினல் அவள் ப்ரஷ்டமாக்கப் படுகிறாள். இம்மாதிரி அவளை வற்புறுத்துவது புருஷர் தான். ஆனால் தங்கள் வாழ்க்கைப் பூராவையும் பராதீனமாகவே போக்கி வந்த விருத்த ஸ்திரீகள் தங்களது பேத்திமாரும் தங்களைப் போலவே வாழவேண்டும் என்ற எண்ணத்துடன் இந்த விதிகளை மிகக் கடுமையாக அமுலாக்குகின்றனர்: கட்டுப்பாடு நீடிப்பது இவ்விதம் அடிமை புத்தி கொண்டவர்களால் தான். அநேக தலை முறைகளாகவே கண்மூடித் தனமாய் அடங்கி நடந்து வந்ததால் ஸ்திரீகள் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். விவேகத்துடன் விவாதிக்கும் சக்தி அவளிடம் இப்போது கிடையாது: இந்த பொறுப்பை இதரர்களிடம் விட்டுவிட அவள் தயார்: இம்மாதிரி இந்திய ஸ்திரீகள் வளர்க்கப்பட்டு வந்திருப்பதால், இவ்விதம் அவர்களை வளர்க்க விரும்பியவர்களின் நோக்கம் நிறைவேறியிருக்கிறது: அவள் சோபையற்ற பிம்பமாகவே இப்போது காண்கிறாள்: சுயமாக அபிப்பிராயம் கூற அவளுக்கு அருகதை கிடையாது: அவள் தனது புருஷனுக்குச் செய்யும் கடமை தான் அவள் தனது வாழ்க்கையில் கொள்ளும் கடமையாக இருக்கிறது. குழந்தைகளைப் பெற்றெடுப்பதே அந்தக் கடமை: அதிலும் ஸ்திரீகளின் வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது ஆண் பிள்ளைப் பெற்றெடுப்பது தான். இவ்விதம் புருஷ ப்ரஜை குழந்தையைப் பெறுவதுதான் பிரதானம் என்ற எண்ணம், பல அறியாத ஸ்திரீகளுக்கு ஏற்பட்டிருப்பதால், அவர்கள் தங்கள் குருக்களின் சூழ்ச்சிக்குள் அகப்பட்டுக்கொள்கின்றனர். அநேக காலமாகவே ஸ்திரீகள் எந்த விஷயத்தைப் பற்றியுமே சிந்தனை கொள்ளாமல் நடந்து வந்ததால், அவளைக் கட்டி வைக்கும் தாள்கள் வலுத்துவிட்டன: புதிய சுதந்திர வாழ்க்கை இப்போது தங்கள் முன்பு உதயமாகும் போதும், அவர்கள்முன் வரத் தயங்குகின்றனர்.



ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்டும் அவரது சகோதரர் பண்டித ஜவஹர்லால் நேருவும் ஒரு காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் கலந்து கொண்ட பின்பு வெளியே வருகின்றனர். அவர்களைச் சுற்றி பத்திரிகா நிருபர்கள் இருக்கின்றனர்.

இந்தக் கட்டுரையில் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் ஸ்திரீ புருஷர் சமபாவத்தைப் பற்றியும், ஆரம்பத்தில் ஸ்திரீகள் எந்த நிலையில் இருந்தனர் என்பதைப் பற்றியும், நாடு நலம் பெறுவதற்கு ஸ்திரீ புருஷர் ஒத்துழைப்பு எவ்விதம் அவசியமானது என்பதைப் பற்றியும் விவரித்திருக்கிறார். ஒவ்வொரு ஸ்திரீபுருஷரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய பல விஷயங்களை அவர் இதில் வெளியிட்டிருக்கிறார். "புருஷரும் பெண்டிரும் சமபாவம் கொள்ளாவிட்டால் நாகரீகம் எப்படி நிலவ முடியும்? இருவருடைய கூட்டுறவினால் தான் அநேக தேசங்கள் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. இருவரும் ஒன்று சேர்ந்து ஒத்துழைத்திரா விட்டால் ஒற்றுமை தோன்றியிராது: இவ்விரு இனத்தாரும் அணி வகுத்து முன்னேரு விட்டால் சுதந்திரத்தை அடைவது துர்லபம்: பல்லாண்டுகளாகப் பலர் பின்பற்றி வந்திருக்கும் பழக்கத்தைப் பார்த்து பேசாதிருப்பது பிசகு……நம் இந்தியாவில் ஒற்றுமை ஏற்பட்டு நாம் அனைவரும் முன்னேற முயல்வது முதற் கடமையாகும். நாம் உண்மையாகவே தேச நிர்மாணம் செய்ய வேண்டுமானல் குருட்டு நம்பிக்கையையும் குறுகிய மனோபாவத்தையும் விட்டொழிக்க வேண்டும்." என்கிறார் அவர்.

## தலை கால் தெரியாத நிலைமை

ஆனால் உலகம் ஒரே நிலையில் நிற்பதில்லை: ' காலச் சக்கிரம் சுழல்கிறது: முந்திய தலை முறையிலிருந்த ஸ்திரீகளுக்கும் இந்த தலை முறையிலிருக்கும் ஸ்திரீகளுக்கும் அதிக வேற்றுமைகள் காணப்படுகின்றன. தற்கால ஸ்திரீ எதற்கும் முன் வருகிறாள் என்று முறையிடுகின்றனர் பலர் என்னிடம். இது உண்மையா என்பது எனக்கு சந்தேகம். இது வாஸ்தமாயின் இதற்குக் காரணம் உண்டு: அவளுடைய துணிவுக்கு இத்தனை காலம் அவள் தயக்கம் காட்டி வந்ததே தூண்டுதலாகும். முதன்முதல் சுதந்திரத்தை ருசி பார்க்கும்போது தலை கால் தெரிவதில்லை: மானிடவர்க்கத்தின் சரித்திரத்திலேயே இப்போது தான் முதன் முதலாக ஸ்திரீகளுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்போது தடுமாற்றம் தோன்றியிருப்பது சிறிது காலத்திற்குத தான் இருக்கும்: பிறகு ஸ்திரமாகி அவள் நன்கு ஊன்றிக்கொள்வாள்.

## இப்போது போட்டி

இப்போது நாம் வாழும் காலம் நிலையற்றது: எங்கு பார்த்தாலும் எந்தத் துறையிலும் ஒரே கலவரம் தான் தோன்றுகிறது, பொருளாதர நிலையில் மாறுதல், புதிய கருத்துகள், இது வரை நமக்குப் புலப்படாத சக்திகள்-ஆகியவை பொதுவாக மனிதனுக்கும், முக்கியமாக ஸ்திரீகளுக்கும், எதிராகக் கிளம்பியிருக்கின்றன. ஸ்திரீகளுக்குக் கல்வி கிடைத்த பின் அவர்களது வாழ்க்கை புது விதமாகியிருக்கிறது. நம் சரித்திரத்தில், தற்சமயம். நாகரீகம் புருஷர் மயமாகவே இருக்கிறது: ஸ்திரீகள் தங்களது வீடுகளில் சமயல் செய்வதை விட்டு விட்டு, சமூகத்தில் ஓர் ஆபரணம் போல் விளங்கவே வெளிக் கிளம்பி யிருக்கின்றனர். அவள் அதிக காலம் ஆபரணம் போல் அமைதியுடன் இருக்க மாட்டாள். நாகரீகம் நிலை பெறுவதற்கு, புருஷர் போல் அவளும் முக்கியமானவள். தாகூர் கூறியது போல், "வாழ்க்கையை அநுபவிக்கவும், நாகரீகத்தை நிர்வகிக்கவும், புருஷன் கொள்ளும் ஏகபோக உரிமையிலும் பங்கெடுத்துக்கொள்ள" ஸ்திரீ போட்டியிடுகிறாள் இப்போது: புருஷரும் பெண்டிரும் சமபாவம் கொள்ளாவிட்டால் நாகரீகம் எப்படி நிலவ முடியும்? இருவரது கூட்டுறவினால் தான் அநேக தேசங்கள் அபிவிருத்தியடைந்திருக்கின்றன. இருவரும் ஒன்று சேர்ந்து உழைக்கா விட்டால் ஒற்றுமை தோன்றியிராது: இவ்விரு இனத்தாரும் அணிவகுத்து முன்னேறாவிட்டால் சுதந்திரத்தை அடைவது துர்லபம்: இதிலிருந்து நீடித்த காலமாக நிலவி வரும் வழக்கம் ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல என்பது புலனாகும்: பல்லாண்டுகளாக பலர் பின் பற்றி வந்த பழக்கத்தைப் பார்த்து பேசாதிருப்பது பிசகு. இதைப் படித்த பின்பாவது இதில் கூறப்பட்டிருக்கும் விஷயங்களை மனதில் இருத்தி நன்கு சிந்தனை செய்வது அவசியமாம்: நம் இந்தியாவில் ஒற்றுமை ஏற்பட்டு நாம் அனைவரும் முன்னேற முயல்வது தான் முதற்கடமையாகும்: இது மிகவும் அவசரமானது என்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள். நாம் உண்மையாகவே தேச நிர்மாணம் செய்ய வேண்டுமானால், குருட்டு நம்பிக்கையையும் குறுகிய மனோபாவத்தையும் விட்டொழிக்க வேண்டும், நம் புருஷர்களுக்கு சமமாக நாமும் முன் சென்று, அந்நியோந்நியத்துடனும், ஒத்துழைப்புடனும், நம்பிக்கையுடனும் நம் நாட்டு சரித்திரத்தைச் சிறப்பிக்க வேண்டும்.: அன்று தான் நம் இந்தியாவில் ஒற்றுமையும் முற்போக்கும் நிலைபெற்று தேசத்தை உத்தாரணம் செய்ததன் பெருமை நமக்கு வாய்க்கும்.

Vijaya Lakshmi Pandit

★

அடுத்த வார இதழில் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் லக்ஷிய கிராமம் எத்தகையவிதம் அமைந்திருக்க வேண்டும் என்பது பற்றி எழுதியுள்ள முக்கியமான வியாஸம் வெளிவரும்.

★



இவ்வருஷாரம்பத்தில் அகில இந்திய ஸ்திரீகள் மஹாநாட்டில் தலைமை வகித்த ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட், சென்னைக்கு வந்தபோது சென்னை ஸ்திரீகள் கூட்டத்தில் ஒரு பிரசங்கம் புரிந்தார்.



# அன்னையின் அன்பு

★

## சிறு கதை - "நியாயவாதி"

பணத்தாசை புரியாத பாதகம் கிடையாது. அதற்கு இந்த சிறு கதை ஒரு உதாஹரணம். கற்பனு சக்தியினுல் ஸ்ருஷ்டிக்கப்பட்ட இந்தக் கட்டுக் கதையில் தாயிடம் இருந்த சொத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன், அவளைத் தன் புத்திரனிடம் விரோதபாவம் காட்டும்படிச் செய்த புத்ரியைப் பற்றியும், தாயின் அன்பு எத்தகையது என்பதையும் உள்ளத்தில் ஏற்பட்ட வேதனையையும் படிப்பீர்கள்..

"அம்மாவுக்கு அபாயம். உடனே புறப்பட்டு வரவும். சுந்தரி"-தந்தியைக் கண்ணுற்ற ராஜம் செயலற்று நின்றான். இடிமேல் இடியைப்போல் துக்ககரமான சம்பவங்கள் நிகழுமாயின் அவற்றை யார் தான் சகிக்கக்கூடும்.

ஒரு வருஷத்துக்கு முன்னர் தான் ராஜம் தனது உயிருக்குயிரான மனைவியைப்பறி கொடுக்கும்படி நேரிட்டது. அழகிலும் குணத்திலும் சிறந்த தனது வாழ்க்கைத் துணைவியை காலன் கவர்ந்து சென்றதால் மனம் புண்ணாகி ஏங்கி வாடிய அவன் நோயுடன் கிடந்த தனது தாய்க்கு சிச்ரூஷை செய்ய இயலாது சங்கடப்பட்டபின் அச்சமயம் இன்னொரு ஊரில் இருந்த அவனது தங்கை சுந்தரி தாயை தன்னிடம் அனுப்பும்படி கேட்டுக் கொண்டாள்.

"அண்ணா,மன்னி இருந்தவரையில் அம்மாவின் சம்ரக்ஷணையைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அவள் அவளை தன் கண்ணின் மணியாக பாதுகாத்து வந்தாள். இனி அம்மாவை கவனிக்கும் பொறுப்பு எனக்கு வந்துவிட்டது. நீ ஒண்டிக்காரன் உன்னால் அவளுக்கு பணிவிடை செய்ய இயலாது. அவளைப்பற்றி நீ கவலைப்படாதே. நான் அவளைப் பாதுகாப்பேன். அவளை என்னிடம் அனுப்பு" என்றாள். தங்கையின் விருப்பத்துக்கு இணங்கி ராஜம் தனது தாயை அவளிடம் அனுப்பினான்.

சுந்தரி நல்லவள் தான். தனது சகோதரன் மீது அவள் உண்மையான வாத்ஸல்யத்தைக் கொண்டவள். எனினும் தரித்திரத்தின் கொடுமை அவளது நல்லெண்ணத்தைக் கெடுத்தது. தனது சகோதரனுக்கு துரோகம் செய்யும்படி அவளைத் தூண்டி விட்டது.

நோயுடன் படுத்த படுக்கையாய்க் கிடந்த தாய்க்கு கொஞ்சம் மஞ்சள் காணி இருந்தது. மகனுடன் இருக்கும் வரையில் அவள் அதன நிர்வாகத்தை அவனிடமே விட்டிருந்தாள். அதன் வரும்படியை அவன் தாயிடமே கொடுத்து வந்தான். சிரமப்பட்டு உழைத்து அந்த சொத்தை விருத்தியும் செய்து வந்தான்.

ஒரு காலத்தில் நல்ல ஸ்திதியில் இருந்த தனது பெண் சுந்தரி தரித்திரத்தால் வருந்துவது தாய்க்குத் தெரிந்த விஷயமே, எனினும் அது அவளது கோபத்தை எழுப்பியது. சுந்தரியின் கணவன் துர் விஷயங்களில் சொத்தை விரயம் செய்தது ஒரு பக்க மிருக்க, சுந்தரியே செட்டுக் குடித் தனம் எப்படிச் செய்வது என்பதை யறியாமல் பண்டத்தையும் வீணாக்கியது. அவனது தாய்க்கு ஆத்திரத்தை அளித்தது. தன்னால் ஸ்ரீதனமாக கொடுக்கப்பட்ட பாத்திரங்களையும் நகைகளையும் தனது மகள் ஒவ்வொன்றாய் விற்று விற்று செலவு செய்ததைக் கண்ட அவள் துக்கமும் சினமும் ஒருங்கே யடைந்தாள். "ஊதாரித் தனம் கொண்ட சுந்தரிக்கு நான் ஒரு செப்புக் காசும் கொடுக்க மாட்டேன்" என்று அவள் தீர்மானித்தாள். ஆனால ராஜம் தனது சகோதரியின் நிலைமைக்கு இரங்கினான். தன்னாலான பண உதவியை அவன செய்து வந்ததுடன், தனது தாயிடம் அவன், "அம்மா! என்ன இருந்தாலும் சுந்தரி உன் குழந்தை தானே! அவள்மீது நீ க்ஷாத்திரம் கொள்ளலாகாது. ஏதோ போதாத காலம் அவன் சொத்துக்களை இழந்தான். அதற்காக நாம் அவள் மீது இன்னும் அதிக அன்பும் ஆதரவும் காட்ட வேண்டுமேயன்றி அவளிடம் பராமுகமாக இருக்கக்கூடாது" என்று ஹித வார்த்தைகள் கூறுவான்.

ராஜத்தின் மனைவி உயிருடன் இருந்தவரையில் அவள் தனது மாமியாருக்கு பயபக்தியுடனும், ஒப்பற்ற அன்புடனும் பணிவிடைகள் செய்து வந்தாள். சுந்தரி அடிக்கடி தாயிடம் வருவாள். தன் வீட்டுக்கு வரும்படி அவளை அழைப்பாள். ஆனால் தாய் அவளிடம் முகம் கொடுத்துப் பேசுவதில்லை. அவளுடன் போகவும் அவள் சம்மதிக்கவில்லை.

நாட்டுப் பெண் இறந்தபின் அவளது நிலைமையில் மாறுதல் தோன்றியது. பத்தினி சோகத்துடன் தவித்த தனது மகனுக்கு தான் பாரமாகஇருக்கக்கூடாது என்று அவள் நினைத்தாள். அச்சமயம் தன்னைப் பரிவுடன் அழைத்த சுந்தரியின் வார்த்தைகளுக்கு அவள் மறு வார்த்தை கூறுவாளோ? தாய் மகளது குடும்பத்துடன் வசிக்கத் தொடங்கினாள்.

மகளுக்கு தாயிடத்தில் உண்மையன்பு இல்லை என்று நாம் சொல்ல வரவில்லை. ஆனால் அவளது ஆர்வம் தனது தாயின் சொத்தை அவளுக்குப்பின் அடைய வேண்டும் என்பதே என்று கூறுவது பிசகாகாது. தானும் தனது குழந்தைகளுமே அந்த செல்வத்துக்கு உரியவர்கள் என்று அவள் எண்ணினாள். தனது சகோதரனுக்கு துரோகம் செய்யவும் அவள் தயாரானாள்.

தாயின் சொத்தை அவளது காலகதிக்குப்பின் தானும் தனது தங்கையும் இரு பங்குகளாகப் பிரித்து எடுத்துக்கொள்வது என்பதே ராஜத்தின் உத்தேசம். ஆனால் அவனது தங்கையின் எண்ணம் அதற்கு முற்றிலும் மாறாக இருந்தது. இது அவனுக்குத் தெரியாது. நோய் வாய்ப்பட்டு தனது நியாய புத்தியையும் நிதானத்தையும் கொஞ்சம் கொஞ்சமாய் இழந்து கொண்டிருந்த தாயின் மனத்தை மாற்றுவதற்காக சுந்தரி எடுத்துக் கொண்ட சிரமம் இவ்வளவு அவ்வளவன்று. அவளும் அவளது குழந்தைகளும் கிழவி காலால் இட்ட வேலையை தலையால் செய்யலாயினர். இரவும் பகலும் குற்றேவல்கள் புரிந்தனர். அவள் விரும்பிய ஆகாராதிகளையும் பானங்களையும் கொடுத்தனர். அவள் பேச்சுகளை வேத வாக்குகளாகப் பாவித்தனர்.

அவர்களது அன்புப் பணி அவளுடன் நின்றிருந்ததால் நன்றாய் இருந்திருக்கும். அது தான் இல்லை, மெதுவாய் அவர்கள் ராஜத்தின் மீது குறைகள் கூற ஆரம்பித்தனர். பொய்யான அவதூறுகளை அவன் மீது சுமத்தினர். இறந்து போன அவனது மனைவியையும் பற்றி அவர்கள் சாமர்த்தியமாய் பிரஸ்தாபிக்கலாயினர். மகனும் நாட்டுப் பெண்ணும் தன்னுடைய சொத்துக்களினமீது குறியாய் இருந்தனர் என்று தாய் நினைக்கும்படி அவர்கள் செய்து விட்டனர்.

கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையுமன்றோ? தாயின் மனம் மாறிவிட்டது. ராஜம் தன் சொத்தின் மீது கண் வைத்திருப்பதாயும் தான் சாகப் போவதை எதிர் பார்த்துக் கொண்டிருப்பதாயும் அவள் நினைத்தாள். மகளிடமுள்ள வாஞ்சை நாளுக்கு நாள் அதிகரித்தது, பேரப்பிள்ளைகளின் பணிவிடைகள் அவளது மனதைக் கவர்ந்தன. அவர்களிடையே தனது எஞ்சிய ஆயுளைக் கழிக்க அவள் தீர்மானித்தாள்.

பத்தினி சோகத்தால் மெலிந்து வாடிய ராஜம் தனது தாயைப் பற்றி கவலை கொள்ள காரணமில்லை. அவளைக் கவனித்து கொள்ளும் பொறுப்பை தங்கை சுந்தரி ஏற்றுக்கொண்டு விட்டதால் அதைப்பற்றி தனக்கு யாதொரு விசாரமுமில்லை யென்று அவன் நினைத்தான், அவனது சொந்த விசாரமே அவனுக்கு பெரிதாய் இருந்தது.

41 வருடம் அனுபவம் உள்ளது; ஞாபகம் இருக்கட்டும்.

**சூதக வயிற்றுவலி இருக்கும்வரை கெற்பம் தரிக்காது.**

ஷெ வயிற்று வலியை எடுத்து 6 வித மலட்டையும் நீக்கி **புத்திரசந்தானம்** உண்டாகவேண்டுமானல் **R.M.K.**

**கெற்ப சஞ்சீவி எண்ணெயை. சாப்பிடுங்கள்.**

ஸ்திரீகளுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்தக்ஷணமே நிறுத்தும். எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்ட சூதக வயிற்று வலியும் இதில் அவசியம் தீரும். சூதகம் கண்டும் காணாமலும், துப்பரவாகாமலும் டயப்படி ஆகாமலுமுள்ள சூதகபந்தமானலுஞ்சரி, இதில் சுகமாகிவிடும். காலா காலத்தில கிரமப்படி பஹிஷ்டை ஆகும். இன்னும் கெற்பநோய் சம்மந்தமான சகல வியாதிகளும் தீர்ந்து கெற்பம் தரித்துவிடும்! குணம் இல்லையேல் பணம் வாபீஸ்.

**1 புட்டி ரூ. 2.** ஒரு நபருக்கு 3 புட்டி வேண்டும்.
செலவு வேறு. ஒரே தடவையில் **3 புட்டி ரூ. 5.**

வைத்திய ஆசிரியர் **ஆர். எம். கே. வேலுசாமி,**

சித்த வைத்திய சாலை, பழனி. **PALNI.** (S. I. R.)

பிராஞ்சுகள் :— 16, திருவல்லிக்கேணி ஹைரோடு, மதராஸ்,
,, :— 68, செட்டியார் தெரு, கொழும்பு.

வீதிகளிலும் நம்பிக்கையற்ற கடைகளிலும் வாங்காதீர்கள்

**நஞ்சன்கூடு பல்பொடி**

பல வியாதிகளைத் தடுக்கவும், குணப்படுத்தவும்

ஊக்கம், உற்சாகம் ஊட்ட | **ஜிஞ்சர்** | அஜீரண, பித்த சமனி
உஷ்ண சமனி | **கூலாயில்** | ஸ்நான தைலம்

கவனிக்க போலிகளால் பற்களுக்கே அபாயம்

சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்
(உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி) (தபால் மூலம் சிகிச்சை பெறுக)

இரவும் பகலும் பத்தினிசோகத்தில் அவன் மூழ்கித் தத்தளித்தான்.

அந்த ஸமயத்தில்தான் தாய்க்கு தனது மஞ்சள் காணியை விற்றுவிட வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. நிலத்தின் வருமானம் சொற்பம் தான், அதை கிரயம் செய்துவிட்டு கிரயப் பணத்தை வட்டிக்கு விட்டால் தனது வருமானம் அதிகமாகும் என்று அவள் நினைத்தாள். இந்த யோசனையை அவளுக்கு கற்பித்தது அவளது மகளே.

உடனே அவள் ராஜத்துக்கு அது விஷயத்தைத் தெரிவித்தாள். ஆனால் அவன் அவளது விருப்பத்தை ஆமோதிக்கவில்லை. அச்சமயம் நிலத்தை விற்று பணமாக்குவது உசிதமல்லவென்று நினைத்தான். பணத்தை பாங்கில் கட்டுவதும் வட்டிக்குப் போடுவதும் அவனுக்கு திருப்திகரமானதாகத் தோன்றவில்லை. தனது அபிப்பிராயத்தை எழுதினான்.

"என் நிலத்தை அனுபவிக்க நீ விரும்புகிறாய், அது எனக்கு வேண்டியதில்லை. நீ கெட்ட எண்ணக்காரன்" என்று தாயிடமிருந்து அவனுக்கு பதில் கிடைத்தது. தாயாயிருப்பினும் என்ன? நியாயமின்றி மகனை அபாண்டமாய் ஏசுவதை அவன் பொறுப்பானா? ராஜம் தனது மானத்தை உயிரினும் அரிதாய் மதிப்பவன். அன்னையின் கொடிய மொழிகள் அவனது உள்ளத்தைக், கூரம்புகளைப் போல் துளைத்தன.

"அம்மா! நீ என் மீது அக்கிரமமான பழியை சுமத்தியிருக்கிறாய். உன் நிலத்தின் மீது எனக்கு ஆசையில்லை. எனக்கு அது வேண்டாம்" என்று அவன் எழுதினான்.

கடிதத்தைப் படித்தவுடன் பார்க்க வேண்டுமே கிழவியின் கோபத்தை! மகன் தன்னை வேண்டுமென்றே அவமதித்தாக எண்ணினாள். தனது நிலத்தை உடனே விற்று பணமாக்கி அப்பணத்தை தனது பேரப்பிள்ளைகளுக்கு வைக்க முடிவு செய்தாள். அப்படியே ஏற்பாடு செய்து முடித்தாள். சுந்தரியின் மனோரதம் ஈடேறியது.

நாட்கள் பல சென்றன. தாயின் உள்ளத்தில் மகன்பால் அன்பு சுரந்தது. தான் செய்த அநீதத்தை நினைத்து நினைத்து வருந்தலானாள். தனது மகன் தன்னிடம் வருவான் என்றும், அவன் வந்தபின்தான் செய்த அநீதியை சரிசெய்ய வேண்டும் என்றும் நினைத்தாள். ஆனால் ராஜம் அவளிடம் வரவில்லை.

மகனுக்கு இழைத்த கொடுமையே அவளது மன நோயாக மாறியது. ஆனால், தனது தவறை பஹிரங்கமாய் ஒப்புக்கொண்டு தனது உயிலை மாற்ற அவளுக்கு தைரியமில்லை. அப்படிச் செய்தால் 'தனக்கு சிசுரூஷைகள் செய்து வந்த மகளும் பேரப்பிள்ளைகளும் என்ன சொல்லுவார்களோ என்ற பயம் ஒரு பக்கம் அவளை வதைத்தது. இப்படி வேதனையுடன் உழன்ற அவள் தனது மன நிம்மதியை இழந்துவிட்டாள். மனோவியாதியே அவளது மரண வியாதியாய் முடிந்தது.

வைத்தியர்களால் கைவிடப்பட்டு பேச இயலாமல் மெதுவாய் ஸ்மரணையை இழந்து கொண்டிருந்த அவள் தனது சிசுரூஷையில் மும்முரமாய் இருந்த மகளை பரிதாபத்துடன் நோக்கினாள். "ராஜத்தை நான் பார்க்கவேணுமே! ஐயோ! நான் கண் மூடுவதற்குள் அவன் வருவானோ?" என்றாள். அவளது கண்களில் நீர் அருவியாய்ப் பெருகியது.

"அண்ணுவுக்கு தந்தி கொடுத்திருக்கிறேன். நாளை வருவான்" என்றாள் மகள். மறு நாளை கிழவி எட்டிப்பார்க்கமாட்டாள் என்பது சுந்தரியின் நம்பிக்கை. அன்னை இறந்த பின் மகன் வந்தால் அதனால் அவளுக்கு என்ன நஷ்டம்?

கிழவி மனதுக்குள் வேண்டிக்கொண்டது இதுதான். "பகவானே! நான் மகா பாவி. ராஜத்தைப் பார்க்க எனக்கு வரம் அளிப்பீரோ? அவனது மன்னிப்பைப் பெறுவேனோ?" இப்படி எண்ணி எண்ணி ஏங்கி அவளுக்கு ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகம் போல் கழிந்தது.

இரவு எப்படி கழிந்ததோ அவளுக்கே தெரியாது. ஆனால் அவள் பட்ட வேதனை எழுத்தில் அடங்காது. பயம் ஒரு புறம் அவளை வாட்டியது. மகன் வருவதற்குள் உணர்வையும் நினைவையும் இழந்து விட்டால்...! அந்தோ பரிதாபம்!

பொழுது புலர்ந்தது. வாசலில் வண்டி வரும் சப்தம் அவளது செவியில் பட்டது. அரைமயக்கத்திலிருந்த அவள் தனது புத்தியையும் நிதானத்தையும் மீட்டுக் கொண்டாள். ஆனால் கொடுமையிலும் கொடுமை! அவள் பேசும் சக்தியை இழந்து விட்டாள்.

ஆம்! அவள் முன்பு நின்றது அவளது அருமை மகன் ராஜம் தான்! அவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு அவளை சோகத்துடன் பார்க்கிறான் அவன்! அவன் அருகே நின்ற சுந்தரி, "அண்ணு, திடீரென்று அம்மாவுக்கு இப்படி வந்து விட்டதே!" என்று அழுதாள்.

மகன் அன்னையின் கால்களை அன்புடன் பற்றுகிறான். "அம்மா! என்னைப் பார்! நான் வந்திருக்கிறேன் தெரிகிறதா?" என்று அன்பும் அழுகையும் கசிந்த குரலில் வினவுகிறான்.

கிழவி தலையை மெதுவாய் அசைக்கிறாள். "ரா—ஜ—ம்" என்ற த்வனி; அதற்கு மேல் பேச்சு இல்லை.

அவள் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகபெருகுகிறது. மகனுக்கு இழைத்த அநீதியை வகை செய்ய அவள் விரும்புகிறாள். ஆனால் அவள் வாய் அடைத்து விட்டதே! என்ன செய்வது?

கெஞ்சும் பாவனையில் அவள் மகனை நோக்குகிறாள். தனது மனத்தில் உள்ளதை அவன் அறிந்து கொள்ள வேண்டும் என்பது அவளது ஆசை. தனது சொத்தில் பாதி தனது மகனுக்கு சேரவேண்டும் என்பது அவளது விருப்பம். ஆனால் அதை வெளியிடும் சக்தி அவளுக்கு இல்லையே! என் செய்வாள்?

தாயின் குறிப்பை மகள் அறிந்து கொண்டாளோ இல்லையோ அன்னையையும் மகனையும் தனியே விட்டுவிட்டு அவள் சமயலறைக்குச் சென்றாள். அண்ணனுக்கு காப்பி தயார் செய்வதில் அவள் காட்டிய ஊக்கம் தான் என்னே!

மாதாவின் கண்களிலிருந்து பெருகிய கண்ணீரையும் அவள் தன்னை பரிதாபகரமாய் நோக்குவதையும் கண்டான் மகன்; அவளது மன நிலையை உணர்ந்து கொண்டான்.

"அவளது கரங்களை மெதுவாயும் அன்புடனும் வருடினான். அம்மா! அழாதே! உன் சொத்தைப் பேரப் பிள்ளைகளுக்கு வைத்ததைப்பற்றி எனக்கு உன் மீது வருத்தமில்லை. அவர்கள் என் குழந்தைகள். உன் பணத்தில் பங்கும் எனக்கு வேண்டாம். எனக்கு நவநிதிகளிலும் சிறந்த ஐஸ்வரியம் கிடைத்து விட்டது. அதுதான் உன் அன்பு" என்று தழுதழுத்த குரலில் மொழிந்தான். அவளது கரங்களை எடுத்து தனது கண்களில் ஒற்றிக்கொண்டான்.

அன்னையின் முகத்தில் சாந்தி நிலவியது. அவளது கண்கள் மூடின. அவளது மூச்சும் நின்றது.

அதே ஸமயம் சுந்தரி காப்பியுடன் பிரஸன்னமானாள்.


# பயஸ்யா

தாய்மார்களே!

குழந்தைகளுக்கு தாய்ப்பால் தவிர மற்ற எந்த உணவும் ஏற்றதல்ல.

உங்கள் பாலை விருத்தி செய்து கொண்டு குழந்தைகளை நீங்களே ஆரோக்கியமாய் வளருங்கள்.

தாய்ப்பாலினால் வளர்ப்பது ஆரோக்கியம் மட்டுமல்ல. மிகச் சிக்கனம்கூட.

பயஸ்யா (Regd)

தாய்ப்பாலை மிகுதியாய் உண்டு பண்ணும் உத்தம ரஸாயனம்.

விலை ரூ. 2—8—0

(Packing & Postage Extra.)

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

அல்லது நேரில்:—

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ், தென்னூர்ரோடு, திருச்சினுப்பள்ளி.

Prop. V. B. Nataraja Sastri, Ayurvedacharya.

(தாய்மாருக்கு உபயோகமுள்ள பயஸ்யா புஸ்தகம் இனும்.)



## நினைவிருக்கட்டும்

தேகாரோக்கியம் கெடாமலிருப்பதற்கு எப்படி கலப்பற்ற சுத்தமான உணவு உட்கொள்ளுகிறோமோ அதுபோலவே, கண்களுக்கும், மூளைக்கும் கெடுதல் நேரிடாது. ஞாபக சக்தியும் சுறு சுறுப்பும் அடைவதற்கு கலப்பீற்ற பொடியே அவசியமென்பதை பொடி உபயோகிக்கும் சகோதரர்கள் அறிதல் வேண்டும். இவ்வித கலப்பற்ற பொடிக்கு மதராஸ் ஸ்ரீ அம்பாள் அண்டு கம்பெனி, யார் 35 ஆண்டுகளாக புகழ் பெற்றவர்களென்பது யாவரும் அறிந்ததே. பொடி வாங்கும் போது ஸ்ரீ அம்பாள் பட்டணம் பொடியையே கவனித்து வாங்க நினைவிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.



# ஆனந்த பற்பொடி

☞ இந்த லேபிலைப்பார்த்து வாங்குங்கள்.

இதுதான் மார்க்கட்டில் சிறந்தது எங்கும் கிடைக்கும்.

Certified by Rt. Hon. V. S. Srinivasa Sastri, P.C.
Hon. Sir R. K. Shanmukham Chetty, K.C.I.E.
Hon. Sir Md. Habibulla Sahib Bahadur, K.C.S.I.
Hon. Sir K. V. Reddi, Kt. Sir B. N. Sarma, K.C.S.I.
Hon. Sir P. S. Sivaswami Aiyar, K.C.S.I., C.I.E.
Hon. Sir C. P. Ramaswamy Aiyar, K.C.I.E.
Hon. Sir M. Krishnan Nair, Kt. Sir A. P. Patro, Kt.
Hon. A. T. Pannirselvam, Dr. P. Subbaroyan
Hon. Justice K. Sundaram Chetti, Hon. P. T. Rajan

ANANDA TOOTH POWDER
TRADE MARK
REGISTERED

Hon. Justice Sir C. V. Kumaraswami Sastri, Kt.
Hon. Justice Sir V. Ramesam, Kt.
Hon. Justice Sir C. V. Ananthakrishna Aiyar, Kt.
" C Madhavan Nair, Sir M. D. Devadose, Kt.
" M. Venkatasubba Rao, Raja of Sivaganga.
Rajas of Kollengode, Bobbili, Ramnad, Mandasa.
Gold medals from Mysore, Pudukkottai, Etc. States

MANUFACTURED BY—VAIDYARATNA PANDIT U. RAMANATHA SASTRI, MADRAS, 2.



வைத்திய ஸித்தாச்ரமம், 25B, யதோத்காரி கீழமாடவீதி, சின்ன காஞ்சீவரம்.




நாடகம்

# காதலா? சாதலா?

தே. வீரராகவன் எழுதியது

நடிகர்கள்:- அகில் கான், அசாத், சைபுனிஸா நூர் ஔரங்கசீப்.

## முதல் காட்சி

### அகில்கானும், அஸாதும்

அசாத்:—என்ன அகில்! புத்தகம் திறந்து கிடக்கிறது! நீ பாட்டுக்குத் தூங்குகிறாயே! கண்ணில் வேறு தண்ணீர் வடிகிறது.

அகில்கான்:—என்ன அசாத்? போ! குட்டிச்சுவராக்கிவிட்டாயே விஷயத்தை!

அசாத்:—உனக்கு ஏதாவது சித்தப்பிரமையா? புத்தகத்தைத் திறந்துவைத்துக்கொண்டு தூங்குகிறாயே என்று கேட்டால் குட்டிச் சுவராக்கி விட்டேன் என்று பழிபோடுகிறாயே.

அகில்:—மறுபடியும் சொல்லுகிறேன். குட்டிச் சுவராகத்தான் அடித்துவிட்டாய். இன்பக் கண்ணீர் சொரிந்து, கவிதா உலகில் கவலையற்று உல்லாசமாய்ப்பறந்துகொண்டிருந்த என் மனதை இந்தப் பாழும் உலகுக்குக் கொண்டுவந்துவிட்டாயே.

அசாத்;—ஓ ஹோ! மன்னிக்கவும்...இறக்கையிருந்தால் அளவோடு பறந்திருப்பாய்! அதில்லாததாலே எங்கு வேண்டுமானாலும் பறக்கமாட்டாயா? எதையாவது கேட்டால் கவி, கவிதை. இன்பம் என்று அர்த்தம் தெரியாத சில வார்த்தைகளைச் சொல்லி உலகை ஏமாற்றிவரும் உன் போன்ற ஆஸாமிகள் தினமும் அதிகமாகிக்கொண்டே வருகிறார்கள். அவர்களை அடியோடு துலைத்தால்தான் உலகு உருப்படும்.

அகில்:— போடா! பைத்தியமே! எட்டு ஜன்மங்கள் எடுத்தாலும் கவியை முகர்ந்து பார்க்கும் அதிர்ஷ்டம்கூட உனக்குக் கிட்டாதடா! ஹிருதயம் ஹிருதயத்தைத் தொடும் உணர்ச்சி வந்தால்தான் கவியை ரஸிக்க முடியும்.

அசாத்:- அப்படி......எந்த... ஹிருதயம்...உன் ஹிருதயத்தை இப்பொழுது தீண்டிவிட்டதப்பா!

அகில்:—இதோ...இக்கவிகளைப் படித்துப் பார்...இவைகளை எழுதிய கவியரசி, இப்பொழுது என்னெதிரில் இருந்தால் என்ன செய்வேன் தெரியுமா?

அசாத்:—பேஷாய்த் தெரியுமே! "என்னை, வாழ்விக்க வந்த வனக்குயிலே; மகிழ்விக்க வந்த மடமயிலே; கவி மழை பொழியும் கலைப்புயலே; கனவிலும் உன்தாள் கனதையலே" என்று அர்ச்சனை செய்து ஒரே தாவாகத் தாவி, அவளைக் கட்டிக்கொள்வாய்!

அகில்:—சீச்சி! பிதற்றாதே! அவள் கலைக்குச் சிஷ்யனாகி, குருகுல வாசம் செய்வேனடா!

அசாத்:—பெரிய பதங்களைப் பிரயோகித்து. என்னைத் திணர அடித்து விடலாமென்று நினைக்காதே. ஏன் ஜம்பம்? அந்தப் பெண்ணுக்கு அடிமையாவேனென்று சொல்லேன்.

அகில்:—பெண்ணுக்கல்ல! வேண்டுமானால் பெண்மைக்கு என்று சொல்...ஒத்துக்கொள்கிறேன்.

அசாத்:-பெண் வேறு; பெண்மை வேறா?

அகில்:—தெரியாது போனால் மரியாதையாய்க்கேள்! சொல்கிறேன். ஆண்மை மரத்தில் பழுக்கும் பழம் தான் பெண்மையாகும்.

அசாத்:—சரி! அப்படி இப்பொழுது எந்தப் பழம் பழுத்து நீ புசிக்கத் தயாராயிருக்கிறது?

அகில்:—அவள் யாரென்று சொல்லத் தடையில்லை. சொன்னால் நீ ஒருவேளை.........

அசாத்:—இல்லை! இல்லை! தவறாக நினைத்துக்கொள்ளமாட்டேன்; வெளி விடவும்மாட்டேன். வாழ்க்கை என்னும் மரத்தில் இயற்கையில் காய்க்கும் காய்தானே காதல். அது பருவம் வந்தால் பழுப்பதும் நியாயம் தானே. ஒருவன், ஒன்று முற்றும் துறந்த சந்நியாசியாக இருக்க வேண்டும், அல்லது சித்த ஸ்வாதீனமில்லாத சுத்த பைத்தியமாக இருக்க வேண்டும். இந்த இரண்டுமில்லாத மனித வர்க்கத்தைச் சேர்ந்த ஒவ்வொருவனும் காதலுக்கு அடிமைப்பட்டேதான் தீர வேண்டும். அது ஸ்ருஷ்டியின் கட்டளை...நீ ஒருத்தியிடம் காதல் கொள்வதில் என்ன தவறு? காதலென்னும் தெய்வீகச் சுடரொளியைக் கடவுள் ஏற்படுத்தியிராதிருந்தால், வாழ்க்கைப் புகைப்படலம் சூழ்ந்த வானமாகவல்லவா இருக்கும். ...காதலில்லாவிட்டால் வாழ எவர்தான் விரும்புவார். உன் அந்தஸ்துக்கும், யோக்யதைக்கும் உன் கண் பார்வை விழக்கூடாத இடமேயில்லை.

அகில்;—நீ உண்மையாகத்தான் இவ்வளவு பேசுகிறாயா?

அசாத்:—நிச்சயமாக,

அகில்:–உம்....வெளியிடமாட்டாயே?

அசாத்:-அடா பைத்தியமே... உன் அந்தரங்க நண்பன் என்னிடம் கூடவா அவநம்பிக்கை.

அகில்:—விஷயம் அடிப்பட்டதப்பா!

அசாத்:—தைரியமாகச்சொல். வேண்டுமானால் என்னாலியன்ற உதவியையும் செய்கிறேன். வாடும் மனத்துக்குச் சாந்தி தருவது பெரும் புண்ணியமல்லவா?

அகில்:—அசாத்...உன் ஆறுதல் வார்த்தை என்னிடம் நம்பிக்கையை உண்டுபண்ணுகிறது. இதோ பார்! இந்தப்படத்தை.! இந்த மாதரசியின் கடைக்கண் பார்வையில் தான் என் உயிர் இப்பொழுது ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

அசாத்:—அப்படிச் சொல்!... அடாடா! ஏதேது? நோக்கம் பெரிய இடத்திலே போயிடுத்து, அவுரங்கசீப் மகாசக்ரவர்த்தியின் மகள் சைபுன் இஸ்ஸா அல்லவா இவள்?

அகில்:-ஆமாம், அவளே தான்.

அசாத்:—போயும் போயும் அவுரங்கசீப் இடமா மாட்டிக் கொள்வது? நீங்கள் இரண்டு பேரும் சம்மதித்தாலும், அந்த முசடு, ரஸ உணர்ச்சியே இல்லாத மலடு, வழிவிடவேண்டுமே? மகா கோபிஷ்டன், சந்தேகப் பேர்வழியாச்சே அவன்.

அகில்:—அதற்குத்தான் உன் உதவி தேவை. நீ மனது வைத்தால் அவளை நான் அடைவது நிச்சயம்.

அசாத்:—இந்த விஷயத்தில் நான் எப்படி உதவி செய்ய முடியும்? அவுரங்கசீப்பை நினைக்கும் பொழுதே என் குடல் நடுங்குகிறது,

அகில்;—பயப்படாதே. வழி நான் சொல்லுகிறேன். நாளைக்கு அவுரங்கசீப், உடம்பைத் தேற்றிக் கொள்ள நம்மூருக்கு வந்து சிலகாலம் தங்கப் போகிறாராம். உன்மனைவி நூர் ரொம்ப சாமர்த்தியசாலியாயிற்றே அவளை சைபுனின் அந்தரங்கத்தோழியாக அமர்த்தி அவளைக்கொண்டு இளவரசியின் பார்வையை என் மீது விழச்செய்ய யோசனை. நீ இதற்குத் துணைசெய்ய வேண்டும்.

அசாத்:—ஏனப்பா அகில்! நாங்களிருவரும் புருஷன் மனைவியாக உலகில் வாழ்வதில் உனக்கு இஷ்டமில்லையா?

அகில்:—முன் என்னமோ, எனக்கு வேண்டிய உதவி செய்வதாகப் பிதற்றினையே...போடா போ! உங்கள் உயிர் என் உயிர். எந்த ஆபத்துவரினும் நான் தூலை கொடுக்கிறேன். லாகூர் கவர்னர் நானிருக்கும்போது பயப்படாதே! இளவரசியின் தோழியாக நூரை ஏற்படுத்தியிருப்பதாக நான் அரசரிடம் தெரிவித்து விடுகிறேன். நூர் அதன் பிறகு தாராளமாய் அந்தப்புரத்தில் பழகலாம்.

அசாத்:—ஆண்டவன் சித்தம்.

## இரண்டாம் காட்சி

### ஸைபுன் இஸ்ஸாவும் நூர் ஜஹானும். சில நாட்களுக்குப் பிறகு.

ஸைபுன்:—நூர்! நீ ரொம்ப கெட்டிக்காரி. நம்பிக்கைக்குப் பாத்திரமானவள்... என்னமோ உன்னிடம் அவ்வளவு அன்பு ஏற்பட்டுவிட்டது எனக்கு. உனக்கு இப்பொழுது வயதென்ன?

நூர்:—முப்பதுக்கு மேலாகிற தம்மா.

சைபு:—எத்தனை வருஷமாய் அகில்கான் மாளிகையில் வேலை பார்த்து வருகிறாய்?

நூர்:—சுமார் பத்து வருஷத்துக்கு மேலாக.

சைபு:—அப்பொழுது அவர் உனக்கு நன்றாகத்தெரியுமென்று சொல்.

"ஒருவன் முற்றும் துறந்த சந்யாசியாக இருக்க வேண்டும், அல்லது சித்த ஸ்வாதீனமில்லாத சுத்த பைத்தியமாக இருக்க வேண்டும். இந்த இரண்டுமில்லாத மனித வர்க்கத்தைச் சேர்ந்த ஒவ்வொருவனும் காதலுக்கு அடிமைப்பட்டே தான் தீர வேண்டும். அது ஸ்ருஷ்டியின் கட்டளை! நீ ஒருத்தியிடம் காதல் கொள்வதில் என்ன தவறு? காதல் எனும் தெய்வீகச் சுடரொளியைக் கடவுள் ஏற்படுத்தியிராதிருந்தால், வாழ்க்கை புகைப் படலம் சூழ்ந்த வானமாக வல்லவா இருக்கும்! காதலில்லாவிட்டால் வாழ எவர் தான் விரும்புவார்?" என்கிறன் அஸாத் அகில்கானிடம். இந்தசிறுநாடகம் இருகாதலர்களது சந்திப்பைத் தழுவியது. ஔரங்கசீப் பெண்ணான ஸைபுன்னிஸ்ஸாவை அகில்கான் காதலித்தான்: இருவரும் சந்தித்தனர்: காதல் சாதலில் முடிந்தது. என் ?

நூர்:—வெகு நன்ருகத் தெரியும்.

சைபு:—அவர் குணம், மனப்போக்கு இதெல்லாம் கூடத் தெரியுமென்று சொல்.

நூர்:—அவர் தாயார் போனதிலிருந்து என்னைச் சகோதரி மாதிரி பாவித்து வருகிருர். நானறியாது எந்தக்காரியமும் அரண்மனையிலோ அரசாங்கத்திலோ நடக்கவே நடக்காது.

சைபு:—ஒகோ அப்படியா? அவர் பெரிய கவியாமே!

நூர்:—கவிச் சோலையில் பழுக்கும் கவிதைப் பழங்களையே புசித்து உயிர் வாழும் கற்பனைக்கிளி அவர். உலகமே கவி மயம் அவருக்கு. பேசுவதும் கவிப்பேச்சே; ஏசுவதும் கவியேச்சே; வீசுவதும் கவிக்காற்றே; பூசுவதும் கவிப் பூச்சே.

சைபு:—ஏதேது? நீ கூடக் கவிபாடுவாய் போலிருக்கே?

நூர்:—அகில்கான் வீட்டு அடுப்பங்கரைப் பூனை கூடக் கவி பாடும்.

சைபு:—அப்படிப்பட்டமேதாவியுடன் பழகும் நீங்கள் புண்ணிய சாலிகள். அந்தப் பாக்கியம் எனக்குக்கிடைக்குமா?

நூர்:—நீங்களும் ஒரு கவியரசியாமே.

சைபு:—நான்? உனக்கு யார் சொன்னது?

நூர்:—அவர் தான். ஒரு நாள் உங்கள் பாடல்களைப்பற்றிப் பிரமாதமாகப் பேசிக் கொண்டும் பாடிக் கொண்டும் இருந்தார்.

சைபு:—நிஜமாகவா?

நூர்:—என்னம்மா! இப்படிக் கேட்கிறீர்கள்? நிஜமாகத்தான்.

சைபு:—நூர்! சில நாள்களாகவே உன்னிடம் ஒரு ரகஸ்யத்தைச் சொல்லலாமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

நூர்:—நன்ருய்ச் சொல்லுங்கள்: உயிர் போனுலும் வெளியிட மாட்டேன்.

சைபு:—அகில்கானைப்பற்றியது தான் அந்த ரகஸ்யம்.

நூர்:—அப்படியானுல் மிகவும் ஜாக்கிரதையாய் வைத்துக் கொள்ளுகிறேன்.

சைபு:—சில நாட்களாகவே அவரைக்காண வேண்டுமென்ற ஆவல். எனக்கும் கவிப் பைத்தியம் உண்டென்று உனக்குத் தெரியுமே.

நூர்:—பால் தேனுடன் கலக்க விரும்புவது இயற்கை தானே. ஆனுல்......

சைபு:—ஆனுல்...என்ன?

நூர்:—அவர் மனத்தில் கவிக்குத் தவிர வேருென்றுக்கும் இடமில்லை. 'பெண்' என்ருலே அவர் அந்தத் திக்கைக் கூடப் பார்ப்பதில்லை. அவர்கள் காதல் வலையில் வீழ்ந்தால் கவிதைக்கு முத்திரை வைத்துவிட வேண்டியது தான் என்று எத்தனையோ முறை என்னிடம் சொல்லியிருக்கிருர். அதனுலேயே அவர் இன்னும் கலியாணம் கூடச் செய்து கொள்ளவில்லை.

சைபு:—வாழ்வைக் கடக்கக் கவிதையும் காதலும் வேண்டுமே. அவரிடம் ஒரே ஒரு சிறகு தானே இருக்கிறது. இரண்டாவது சிறகை நான் தருகிறேன் என்று தான் சொல்கிறேன்......அவரிடம் காதல் உணர்ச்சி இல்லையென்றும் சொல்வதற்கில்லை...அவர் பாடல்களிலுள்ள ஒவ்வொரு எழுத்திலும் காதல் ரஸம் துளும்புவதை நான் அனுபவித்திருக்கிறேனே.

நூர்:—அதெல்லாம் வெறும் கற்பனைக் காதல். அதைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள்.

சைபு:—சட்டியில் இல்லாவிட்டால் அகப்பையில் வருமா? நீ சொல்வதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது.

நூர்:—சரி! அவர் மனதில் காதல் நிறைந்திருப்பதாகவே வைத்துக் கொண்டாலும் அவரை உங்களுடன் அணைவிப்பது எப்படி? உங்கள் தகப்பனுர் மனப் போக்கு தான் தெரிந்ததாயிற்றே. காதல் என்ருல் தூக்கிலிடு என்பார்; சங்கீதம் என்ருல் குழிதோண்டிப் புதை என்பார்; கவிதை என்ருல் கொளுத்து என்பாரே! மனித சுபாவத்தின் குற்றங்களைப் பொறுக்காதவராயிற்றே அவர்!

சைபு:—நூர், நீ ஒரு பெண் தான்; ஆயினும் பெண்ணின் மனுேதர்மத்தை நீ இன்னும் அறிந்து கொள்ளவில்லை. பெண்கள் மனது வைக்கும் காரியம் அத்தனையும் வெற்றி. இல்லாவிட்டால் பிராணத் தியாகம் தான், ஆகவே, அவுரங்கசீப் இல்லை, வேறு யாராயினும் சரி, என் காதலுக்கும் கவிதைக்கும் இடையே வந்தால், அவமானமும் தோல்வியும் அடைய வேண்டியதுதான்.

நூர்:—நானும் அப்படித்தான். வெற்றி கிடைக்காததில் தலையிட மாட்டேன்; ஜயம் வராத வரையில் விட மாட்டேன்.

சைபு:—நம் பெருமையை அப்புறம் பரிமாறிக்கொள்ளலாம். அவரை நான் சந்திக்க வேண்டும். அதற்கு வழி சொல்.

நூர்:—வெறும் வார்த்தைகளைக் கொண்டு ஒரு உலகையே ஸ்ருஷ்டித்து விடும் உங்களுக்கு நானு யோசனை சொல்கிறது? நீங்களே சொல்லுங்கள்.

சைபு:— சரி! அப்படியானுல் நான் சொல்லுகிறபடிச் செய்! நான் இவ்வூருக்கு வந்த ஞாபகத்துக்காக நந்தவனத்தில் ஒரு சிங்கார மாளிகை கட்டி வருகிறேன். மாலை ஏழு மணிக்கு மேல், வேலைக்காரர்கள் போன பிறகு நான் தினமும் வேலை எவ்வளவு முடிந்திருக்கிறதென்று பார்த்து வர அங்குப் போவேன் அப்பொழுது மகாராஜாவும், மஜீத்துக்குத் தொழப் போய் விடுவார். அரண்மனையில் நான் ஒருத்தியே இருப்பேன். அப்பொழுது அவரை இங்கு வரும்படி நீ ஏற்பாடு செய்ய வேண்டும்! தெரிகிறதா? விஷயம் பரமரகசியம்...அவர் என்ன சொல்கிருர் என்பதைக் கேட்டு வந்து என்னிடம் சொல்.

நூர்:—அரசகுலத்துக்குத் தகுந்த மேலான யுக்தி. கடவுள் துணை செய்ய வேண்டும்!

### மூன்ரும் காட்சி

அகில் கான், சைபுன், அவுரங்கசீப்: சில தினங்களுக்குப் பிறகு.

சைபு:—இன்னும் வரவில்லையே என்று துடியாய்த் துடித்தேன். என் இஷ்டதெய்வம் போல் எதிரே நிற்கிறீர்கள்.

அகில்:— உன் ஹிருதயமே நானுயிருக்கும்பொழுது உன் துடிப்பு என் காதில் படாதா? அது கேட்டுத் தான் ஓடோடியும் வந்தேன்.

சைபு:—கற்பனை உலகில் சஞ்சரிப்போர்களுக்கு பேசக் கற்றுக் கொடுக்க வேண்டுமா?

அகில்:—நான் வெறும் கவி மாளிகை கட்டுகிறவன். நீயோ கவிமாளிகை, இதோ இந்த அற்புதப் புவிமாளிகை இரண்டையும் கட்டுவதில் சாமர்த்திய சாலி. உன் மேதைக்கு இந்தப் பாடல்கள் போதுமே. பரம்பரைக் கவியின் வாக்கில்கூட இவ்வளவு நளினம், இன்பம், ஜீவன் இவைகளைக் காண முடியாதே! உன் பாடல்கள் இன்பக் களஞ்சியம்; அமிர்தக்குன்று! "தேன்படிக்கும் அமுதாம் உன் திருப்பாட்டைத் தினந்தோறும், நான் படிக்கும் போதறியேன் நாவொன்ருே; ஊன்படிக்கும் உயிர்படிக்கும்; உயிர்க்குயிராய் நின்ற அது தான் படிக்கும்".

சைபு:— ஏதேது? காற்று, இடி, மின்னல் ஒன்றுமில்லாமலேயே அகில்கான் என்ற மேகம் கவி மழை பொழிய ஆரம்பித்துவிட்டதே. எங்கு உங்கள் கவி வெள்ளத்தில் அமிழ்ந்து விடுவேனே என்று பயமாயிருக்கிறது!

அகில்:— நீ கட்டியிருக்கிற இந்தப் புவிமாளிகையின் மேல் நிலையிலிருக்கும் உன்னை பாதாளத்தில் ஓடும் என் கவிவெள்ளம் ஒன்றும் செய்யாது. என்னைப் பரிகாசம் செய்யாதே!

சைபு:—அப்பா! இம்மாதிரி நாம் உல்லாசமாக ஸல்லாபம் செய்யும் காலம் வருமா என்று அல்லாவைவேண்டிக்கொண்டே இருந்தேன். அல்லாஹு அக்பர்!

அகில்:—உறுதியின் ப்ரதிபிம்பம் பெண்களாயிற்றே. அவர்கள் மனது வைத்தால் மூன்று லோகங்களையும் வளைத்துவிடுவார்களே. ஸைபுன்! உன் சாமர்த்தியத்தால் அல்லவா நான் இவ்வளவு நிம்மதியாய் இந்த இன்பத் தேனைப் பருக முடிகிறது! உன் வார்த்தையில் அவநம்பிக்கை கொள்ளாது மகாராஜாவும் போய்விட்டார் பார்! அது நம் அதிர்ஷ்டம் தான்.

சைபு:—இறைவன் நம்மை இணைத்து வைக்க விரும்பும் பொழுது யார் குறுக்கே நிற்க முடியும்?

அகில்:-சைபுன்! விண்ணெளி போல் வீசும் உன் சிரிப்பும், வீணைத் தந்தி அதிர்வதுபோன்ற உன் மொழியும் இவ்வளவு ருசியாக என்றுமே இருந்ததில்லை. இப்பொழுது...மகாராஜா...

சைபு;— எனக்கென்னவோ, நீங்கள் மகாராஜா என்றதும். மனதைச் சம்மட்டி கொண்டு அடித்தமாதிரி ஆகிறது. ரத்தம் குளிர்ந்து ஓட்டம் தடைப்படுகிறது. புதுப்பயம் மனதைக் கவ்வுகிறது.

அகில்:—அதெல்லாம் ஒன்றுமில்லை. உன் மனப்பிரமை! இன்பம் அளவு கடந்துவிட்டால் திகட்டும்...இதோ பார்! இந்தப் பூர்ண சந்திரனும், பூந்தென்றலும், கபடமற்ற பறவைகளும் நம் காதலைப் பாராட்டுகின்றன...ஏன்?...தலையைப் பிடித்துக்கொள்ளுகிருய்! ......என்ன. தலை நோவா?...எனது துடையில் தலையை வைத்துக்கொள்... மெள்ளத் தலையைப் பிடிக்கிறேன். (சைபுன் துடையில் தலையை வைத்துப் படுத்துக்கொள்ளுகிருள்.)

அவுரங்கசீப் ஒரு ஜவானுடன் திடீரென்று தோன்றுகிருர்.

அவுரங்க:—அடே! துரோகி! திட்டிய மரத்தில் கூர் பாய்ச்சுகிருய். யோக்யன் மாதிரி நடித்து என்னை ஏமாற்றிவிட்டாய்! யாரையும் நம்பாத என்னையும் நம்ப வைத்தாய்! அதனுலன்ருே இவளை இங்கே விட்டுச் சென்றேன், இந்த அநாமதேயக்கடிதம் எனக்கு வராவிட்டால், இன்னும் என்ன சதி செய்திருப்பீர்களோ! அடே ஜவான்! இவன் வாயில் துணியை அடைத்துக் கைகால்களைக் கட்டு! ஹும்...

சைபு:—பா! ... எங்களை மன்னிக்கவும்...உமது...

அவு,—சுப்கரோ!

சைபு:-அவர்மீது குற்றமில்லை என் கவிகளும் நானும்தான் அவரைக் குற்றவாளியாக்கினேம்!

அவு:—சீ! துஷ்டை! விபசாரி! என் சீரிய ஒழுக்கத்தையும் உயர்ந்த பதவியையும் பாழ்படுத்திய பதரே! கட்டிட வேலை முடியவில்லை. முடிந்ததும் வருகிறேன் என்று நீ சொன்னதை நம்பி அல்லவா நான் சென்றேன். இந்தக் காதல் கட்டிட வேலைதானு அது! பெண்கள் இல்லாவிட்டால் நரகமே இல்லை என்பது உண்மைதான்...

சைபு:—மகராஜ்! தயவு செய்து அவரை ஒன்றும் செய்யாதீர்! வேண்டுமானுல் என்னை...

அவு:—சீ! பேசாதே! முதலில் லாகூர் கவர்னருக்கு விடை கொடுத்து விட்டுப் பிறகு உன்னிடமும் வருகிறேன். டே! ஜவான்! கண்ணை மூடிக் கொண்டு இவனை இந்த நிலையிலிருந்து கீழே தள்ளு! துளிச் சதை கூடக் கிடைக்கக்கூடாது! சீக்கிரம்.

அகில்:—சைபுன்! சைபுன்! உன் மரகத வடிவத்தைக் காண முடியவில்லையே! இவ்வளவு விரைவிலா நம் இன்ப உலகில் உதித்த சூரியன் அஸ்தமித்து விட்டான்?

அவு:—சண்டாளா! பிதற்ருதே.

சைபு:—ஐயோ! நாதா!நாதா! ஹும்...உம் உடல் தரையைச் சததிக்குமுன் என் ரத்த வெள்ளத்தில் உம் ப்ரேதம் மிதக்கும். நம் உடலைப் பிரிக்கும் இவர்களால் நம் உயிரைப் பிரிக்கவே முடியாது. காதல் உலகில் தடையற்று உலவலாம்! சாவிலே சாந்தியும் பெறலாம். அல்லா! அல்லா!


**கர்ப்பத்தைத்தடுக்க "ரஹாத்"**

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவருமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.






ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் சமீபத்தில் காகிநாடாவில் ஒரு கூட்டத்தில் பிரசங்கம் செய்யும் காட்சி.

# பிரசங்க அனுபவம் ★ ★

## ★ ★ ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்

எழுதியது

**பொதுக் கூட்டங்களில் முன் வந்து பேசுவது அனைவருக்கும் சாத்தியமல்ல. கூட்டத்தைப் பார்த்தவுடனேயே சிலருக்குக் கூச்சம் பிறந்துவிடும்: மற்றும் சிலருக்கு மனுேதிடமிருந்தாலும் எதைப்பற்றிப் பேசுவது என்பது தெரிவதில்லை: ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் தமது அனுபவங்களை விஸ்தரித்திருக்கிருர்.**

### மாயப்பிரபஞ்சம்

ஒவ்வொரு சிறுமியும், அவளது இளமைப் பருவத்தில். ஓரோர் சமயம் தனது கற்பனை யுலகில் களித்திருந்திருக்க வேண்டும். தனது சிந்தா சக்தியால் உருப்பெற்ற அந்த மாயப் பிரபஞ்சத்தின் நாயகி, தான் தான் என்ற எண்ணமும் அச்சமயம் அவளுக்கு ஏற்பட்டிருந்திருக்கவேண்டும். இந்தமாதிரி அனுபவம் எனக்கும் நேர்ந்ததுண்டு; எனக்கு ஏதாவது வருத்தமோ அல்லது வெறுப்போ தோன்றினுல் உடனே நான் இந்த மாயப் பிரபஞ்சத்தில் புகுந்து, அங்கு நான் தான் ராணி என்றும், நான் செய்யும் பல ஆச்சரியகரமான காரியங்களை என்னைச் சுற்றியிருப்பவர் பாராட்டுவதாகவும் எண்ணிக்கொண்டே, பல மணி நேரத்தைப் போக்குவது வழக்கம். எனது பால்ய தசை கடந்த பின்பு புத்தகப் படிப்பு என்னுடைய சிந்தா சக்தியை மேலும் வளர்த்தது. நான் ஷேக்ஸ்பியர் (Shakespeare) நாடகங்களைப் படித்தேன்; அக்காலத்தில் அவரது நாடகங்களில் வரும் இரண்டு பிரசித்தி பெற்ற கதாநாயகிகளான ராஸலிண்ட் (Rosalind) அல்லது போர்ஷியா (Portia) நான்தான் என்று எண்ணிக்கொள்வேன். அவர்களது வாசகங்கள் எனக்கு மனப்பாடம்: நாடகத்தில் அவர்களுக்குரிய ஸ்தானங்களை நான் மிகுந்த சிரத்தையுடன் கவனித்தேன், கடைசியில் அவர்களுக்கும் எனக்கும் ஒருவித வித்யாசம் கூட கிடையாது என்ற நிலைமை ஏற்பட்டது. சரித்திரத்தையும் நான் படித்தேன்; அப்போது துரதிருஷ்டவதியான மேரி அன்டாய்னெட் (Marie Antoinette) டோ அல்லது மமதை மிகுந்த எலிஸபெத் ராணி (Elizabeth)யோ நான்தான் என்றும் நான் நினைத்ததுண்டு. குதிரை சவாரி செய்யும் சமயத்தில், பிரிட்டிஷ் படைகளை ஊடுருவிப் பாயும் ஜான்ஸி ராணி லக்ஷ்மிபாய் என்ருே அல்லது புதிய உலகங்களைக் கைப்பற்ற கர்வத்துடன் கிளம்பும் ஒரு வீர ஸ்திரீ என்ருே என்னைப்பற்றி நான் பெருமையாகப் பாவிப்பதுண்டு.

### இரண்டு பிரபல ஸ்திரீகள்

உலக ஞானம் எனக்கு ஏற்பட்ட கொஞ்ச காலத்திற்குள்ளேயே நான் அன்னி பெஸண்டையும் சரோஜினி நாயுடுவையும் சந்தித்தேன். மிஸஸ் பெஸண்டின் பிரசங்கத்தை நான் முதன் முதல் கேட்டதை எந்நாளும் மறக்கமாட்டேன். அவர் வாயிலிருந்து என்ன வரப்போகிறது என்று ஆவலுடன் எதிர்பார்த்தேன்; நான் வேறு உலகில் சஞ்சரிப்பதாகவும் தோன்றியது; இம்மாதிரி பிரசங்கம் புரியும் அபூர்வ சக்தி எனக்கும் ஒரு நாள் கிடைக்கவேண்டும் என்ற ஆசை என் உள்ளத்தில் ஊன்றி நின்றது. கேட்பவர்களது மனதை மாற்றும் சக்தியையும் நான் மிகவும் அபேக்ஷித்தேன்! சரோஜினி நாயுடு—சிறுமைப் பிராயத்தில் எனக்கு லக்ஷியமாக விளங்கியவர் அவர் தான்! அவருடைய உன்னத நிலையை நான் எட்டுவேன் என்று அப்போது நான் கனவிலும் கருதியதில்லை; அவரது வாக்ஜாலமும். அவர் பிரயோகித்த பதங்களின் சோபையும் எனக்கு திருப்தி தந்தன; அவர் இந்தியாவைச் சேர்ந்தவர் என்று பெருமைப்படுவதும் எனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஒருவருக்கொருவர் மிகவும் வேறுபட்ட இந்த ஸ்திரீகள், என்னுடைய சிறு வயதில், எக்காரணம் பற்றியோ, என்னை வசீகரித்து விட்டனர்.

# நாசவேலைக் கொள்கை

★

## முன்பு ஹைதர் அனுஷ்டித்த முறை

★

தி. நா. சுப்ரமணியம்

எழுதியது

★

ருஷ்யாவில் நாஸிப் படை பிரவேசித்த போது அங்கு எதிரிகளுக்குப் பயன்படக்கூடியவை யாவும் நாசமாக்கப்பட்டன. இதனால் எதிரி பலம் மிகவும் தளர்ந்தது. இதே மாதிரி பிரிட்டிஷ் படையும் மலேயாவில் செய்தது: மலேயாவில் இருந்த ரப்பர் தொழிற்சாலைகள் நாசமாக்கப்பட்டன. இந்தியாவில் இந்தக் கொள்கையை அனுஷ்டிக்கக் கூடாதென்று மஹாத்மாஜி தமது 'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதியிருக்கிறார்: இதற்கு அவர் தக்க ஆதாரங்களையும் அளித்திருக்கிறார். இப்போது பிரசுரமாகும் கட்டுரையில் ஹைதர் அலி காலத்தில் தென்னிந்தியாவில் நாச வேலை நடந்ததைப் பற்றியும், அது எவ்வாறு செய்யப்பட்டது என்பதையும், அதனால் மக்களுக்கு எவ்விதம் கஷ்டம் ஏற்படாமல் இருந்தது என்பதையும் படித்தல் அவசியமாகும்.

★

### 'பொட்டல்' கொள்கை

ஜப்பானியர் கீழ்த் திசையில் ஆதிக்கம் பெற்று அரசு புரிய ஆவல் கொண்டு போர்க் கோலத்துடன் வெளிக் கிளம்பிய நாள் முதலாகப் "பொட்டல் கொள்கை" என்பதைப் பற்றி நாம் அதிகமாக அடிக்கடி கேள்விப் படுகிறோம். ஒரு நாட்டையோ ஓர் இடத்தையோ அவர்கள் கைப்பற்றி உள் நுழையும் பொழுது அங்கிருந்து வெளியேறுபவர்கள் அந்த இடத்தில் உள்ள ஜீவாதாரமான ஸ்தாபனங்களை அழித்துத் தரை மட்டமாக்கி விட வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அவ்விதம் செய்வதால், ஆக்ரமித்து வரும் எதிரிகள் அந்த ஸாதனங்களை நமக்கே விரோதமாக உபயோகிக்க முடியாதபடி செய்து விடலாம் என்றும் கூறுகிறார்கள்.

யுத்தம் நம்நாட்டுக்கு நெருங்க நெருங்க, இத்தகைய நாசவேலையை இங்கேயும் செய்ய வேண்டுமா என்ற பிரச்னை எழுந்திருக்கிறது. அரும்பாடுபட்டு நாம் நிறுவிய ஸ்தாபனங்களை நம் கையாலேயே அழித்துவிடுவதா?

அவ்விதம் அழித்து விட்டால் அத்தகைய ஸ்தாபனங்களில் தங்கள் முதலைப் போட்டிருப்பவர்கள் கதி என்ன? அவற்றையே நம்பி நிற்கும் ஏழைமக்கள் எப்படி உயிர் வாழ்வது? இப்படிப்பட்ட கேள்விகளைப் பலரும் கேட்கிறார்கள்.

### முன்பு நடந்தது

போர் நிகழும் காலங்களில் நாட்டின் நிர்மாண வேலைகள் தடைப்பட்டு, முக்கியமான ஸ்தாபனங்கள் அழிந்து. நாடு பாழாகி விடுவது சகஜமே. அவ்விதமான சம்பவங்கள் பல நம் நாட்டில் முன்னர் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால் அந்தக் காலத்தில் நாடு இருந்த நிலைமை மக்கள் நடத்திய வாழ்க்கை முதலியவற்றுக்கும் தற்காலத்தில் உள்ளவற்றுக்கும் மிகுந்த வேறுபாடுகள் உண்டு.

நூற்றெழுபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் ஒரு தரம் நம் நாடு இவ்விதம் பாழாக்கப்பட்டதைப் பற்றிய விவரங்கள் கிடைக்கின்றன. அவற்றைக் கீழே கொடுப்போம்.

அது கி. பி. 1767-ம் ஆண்டில் நடந்தது. அந்தக்காலத்தில் தென்னாட்டின் பெரும் பகுதியை ஹைதர் அலி ஆண்டு வந்தான். ஆயினும் ராஜ்யத்தில் அமைதி நிலவி இருக்கவில்லை. மஹாராஷ்டிரர்கள் மைசூர்மீது படையெடுத்து வந்து நாட்டினுள்ளே புகுந்துவிட்டார்கள். எல்லைப் புறத்தே காவல் இருந்த தன் மைத்துனன் மீது ஹைதர் அதிக நம்பிக்கை வைத்திருந்தான். ஆனால் அவன் சமயத்தில் மஹாராஷ்டிரர்களுடன் சேர்ந்துகொண்டு அவர்களுக்கு வழி விட்டு விட்டான்.



**மலேயாவில் நடந்த நாசகாரியம்**

மலேயாவில் பிரிட்டிஷ் படைகள், பல்லாயிரக் கணக்கான ரப்பர் பேல்களை தீக்கிரையாக்கின. ரப்பர் தொழிற்சாலைகளும் யந்திரங்களும் பஸ்மீகரமாகும்போது எடுத்த படம்: நெருப்பு ஜ்வாலை வானத்தைக் கவிந்து கொண்டது. (இ. என. பி.)

### படையெடுப்பை சமாளிக்க

மஹாராஷ்டிர வீரர்கள் நாட்டின் நாலு பக்கங்களிலும் புகுந்து கொள்ளையடித்து வந்தனர். அவர்கள் சென்ற வழி முழுதும் சூரையாடி வந்தனர். எங்கே பார்த்தாலும் பிணக் குவியல்களும் சாம்பல் முட்டுகளுமே தோற்றம் அளித்தன.

ஹைதர் அவர்களை எதிர்த்து நின்று போர் புரிய விரும்பவில்லை. அவ்விதம் செய்வதால், தன்னுடைய படையை வீணாகப் பலியிடுவதைத் தவிர வேறு விதமாக முடியாது என்பதை நன்கு உணர்ந்திருந்தான். ஹைதர் ஸ்ரீரங்கப் பட்டணத்தில் வாழ்ந்து கொண்டு இருந்தான்: அது மலைப் பக்கத்தே இருந்தாலும் மஹாராஷ்டிரர்கள் அதை நோக்கிவந்த வழியில் ஒரு குன்றும் கிடையாது. அது ஒரே சமவெளியாக வாய்ந்திருந்தது. மஹாராஷ்டிரர்களுடைய குதிரைப் படை மிக்க பிரஸித்தி பெற்றது. அதற்கு ஈடாக அந்தக் காலத்தே ஒன்றையும் கூறமுடியாது.

ஆயினும் அவர்கள் நாட்டில் பரப்பி வரும் கொடுமைகளைப் பார்த்துக்கொண்டு ஹைதரால் சும்மா இருக்க முடியவில்லை. எப்படியாவது அவர்களை வஞ்சகமாக வதைத்து மேலே படையை நடத்தி முன்னேற முடியாமல் தடுத்துத் திரும்பி அனுப்பிவிட எண்ணினான் அவன்.

'படையுடன் முன்னேறி வரும் வழியில் அவர்களுக்கு எதிர்ப்பு இல்லா விட்டாலும் அவர்களை உயிர் வாழ முடியாமல் செய்து விட்டால் அவர்கள் எவ்விதம் வர முடியும்?'—இவ்விதம் எண்ணினான் ஹைதர். நெருக்கடியான காலத்திலே தான் உண்மை வீரனுடைய அபாரமான சாமர்த்தியம் வெளிப்படும் என்று சொல்லுவார்கள். ஹைதரும் இந்தச் சமயத்தில் சாகஸமான காரியத்தைச்செய்து முடித்தான் என்றே சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

### ஹைதரின் எண்ணம்

உண்ணச் சோறும்குடிக்கத் தண்ணீரும் கிடைக்காவிட்டால் புதிய இடத்தில் மஹாராஷ்டிரர்கள் என்ன செய்யக்



**வியாபாரிகளுக்கு பாதுகாப்பு**



இப்போது கடலில் சஞ்சரிக்கும் பிரிட்டிஷ் வியாபாரக் கப்பல்களுக்குத்தகுந்த பாதுகாப்பு வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது பலூன்கள் தான் இத்தகைய பாதுகாப்புகள். படத்தில் பலூன்களைக் காணலாம்.

கூடும்? அவதிப்பட்டு இறந்தவர்கள் போக, எஞ்சியவர்கள் எப்படியும் உயிருக்குத் தப்பிப் பிழைக்க ஓடி விடுவார்கள். அதனால் அவர்கள் வரும் வழியில் உள்ள கிராமங்களினின்றும் மஹாராஷ்டிரர்களுக்கு ஒன்றும் கிட்டாதவாறு செய்ய விரும்பினான் ஹைதர்.

நவாப் தன் படையைப் பல பகுதிகளாகப் பிரித்து அவற்றை நாட்டில் பல இடங்களுக்கும் அனுப்பி வைத்தான். அவர்களிடம் அந்த அந்தப் பிரதேசத்து அதிகாரிகளுக்குத் தாக்கீதும் கொடுத்திருந்தான். பெரிய நகரம் என்றாவது சிறிய பட்டிக்காடு என்றாவது வேற்றுமை பாராட்டாமல் எல்லாக் குடிமக்களும் தங்கள் உடைமைகளை அழித்து விட வேண்டும் என்று ஆணையிட்டிருந்தான் நவாப்.

"ஏரி குளங்களின் கரைகளை உடைத்துத் தண்ணீரை வடிய விட்டுக் 'கட்டாந்தரை'யாக ஆக்கிவிட வேண்டியது. கிணறுகளில் கொடிக்கள்ளி முதலிய விஷச்செடிகளை வெட்டிப் போட்டுத் தண்ணீரைப் பாழாக்கி விட வேண்டும். புல், வைக்கோல் ஒன்றையும் சேர்த்து வைக்கக் கூடாது. வீட்டுக் கூரைகளில் வேய்ந்திருக்கும் வைக்கோல் உள்பட எல்லாவற்றையும் கொளுத்திவிட வேண்டும்."

### ஆணையை நிறைவேற்றினர்.

அதிகாரிகளும் குடிகளும் அவற்றை அப்படியே நிறைவேற்றி வைத்தனர். அதைச் சிக்கிரமாக முடித்துவைப்பதில் யாருக்கு வேகம் அதிகமாக இருந்தது என்பதைக் கூறமுடியாது என்று ஓர் ஆசிரியர் கூறுகிறார்.

தன்னுடைய சொத்தை அப்படியே அழித்து விடுவதற்கு ஒருவன் இஷ்டப்படுவானா என்று சிலர் சந்தேகிக்கலாம். ஆயினும் அவன் இருந்த நிலையைக் கவனித்தால் அத்தகைய சந்தேகம் நமக்குத் தோன்றாது.

குடிமக்கள் எல்லோரும் தம் வீடு வாசல்களைத் துறந்து ஸ்ரீரங்கப்பட்டணம் வந்துவிட வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தான் நவாப். அவர்கள் புறப்பட்டு வரும்போது அவர்கள் வாழ்க்கைக்கு அத்யாவசியமான பொருள்களை முடிந்த வரையில் எடுத்துவரும்படியும் தெரிவித்திருந்தான்.

இவ்விதம் நாட்டைத் துறந்து சென்ற யாரும் கையை வீசிக் கொண்டு செல்லவில்லை. அவரவர் சக்திக்கேற்பத் தங்கள் சொத்துக்களைத் தூக்கிச் சென்றனர். சிறு பிள்ளைகளும் சிறிய மூட்டைகளைச் சுமந்து சென்றனர். அவ்விதம் சென்றவர்கள் யாவரும் சந்தோஷத்துடன் காணப்பட்டனர் என்றும், ஒருவர் முகத்திலும் வருத்தத்தின் குறி தோன்றவில்லை என்றும் அந்த காலத்தில் வாழ்ந்திருந்தவர் ஒருவர் எழுதுகிறார்.

### விட்டுச்சென்ற பொருள்கள்.

இவ்விதம் ஒரு கிராமம் காலி செய்யப்பட்டவுடன் நவாபின் படை அந்த ஊரைக் கைக்கொள்ளும். குடிமக்கள் எடுத்துச்செல்ல முடியாமையாலோ வேறு காரணத்தாலோ விட்டுச் சென்ற பொருள்களுள் உபயோகப்படக்கூடியவை இருந்தால் அவற்றை அந்தப் படைவீரர்களும், அவர்களுடன் சென்ற சிப்பந்திகளும் கைக்கொள்வர்.

அந்தப் படையைச் சேர்ந்தவர் ஊரை விட்டுப்போனவுடனே மற்றொரு பகுதியினர் வருவர். இவ்விதம் ஒருவர் பின் மற்றொருவராக இரண்டு மூன்று படையதிகாரிகள் வந்து கிராமங்களைப் பார்வையிட்டு உபயோகமுள்ளவற்றை எடுத்துக்கொள்வர். கடைசியாகக் கிராமத்தைத் தீக்கிரையாக்கி விடுவார்கள்.

போர்வீரர்கள் இவ்விதம் கைப்பற்றும்பொருள்களை அவர்களே 'எடுத்துக்கொள்ளக் கூடாது, அவை யாவற்றையும் பட்டியல்படி ஸ்ரீரங்கப் பட்டணத்தில் அரசாங்கத்தார் வசம் ஒப்பித்து விடவேண்டும். அவை பக்கங்களில் விற்கப்படும் விலைகளுக்கு அதிகமாகவே மதிப்பிடப்பட்டு அரசாங்கத்தாரால் வாங்கிக் கொள்ளப்படும். இவ்விதம் கொடுக்கப்படும் தொகையில் அந்தச் சாமான்களை எடுத்துச் சென்றவனுக்கும் ஒரு பங்கு உண்டு.

அரசாங்கத்தார் இவ்விதம் நாட்டைப் பொட்டல் ஆக்கிவிடுவார்கள்என்பதும்மஹாராஷ்டிரர்களுக்கும் தெரிந்த விஷயம்தான். குடிக்கத் தண்ணீர் கிடைக்காவிட்டால், மழைக்காலத்தில் தண்ணீர் புரண்டு அருவிகளாக ஓடக்கூடிய படுக்கைகளைத் தேடி அவ்விடங்களில் பள்ளம் தோண்டி அங்கே பெருக்கெடுத்து வரும் ஊற்றுத் தண்ணீரைக்கொண்டு பொழுது போக்குவார்கள்.

மலை நாட்டுக் குதிரைகளுக்கோ அருகம்புல்லிலும் சம்பா வைக்கோலும் வேண்டியதே இல்லை. கூரையில் பேய்ந்தவைக்கோல் கிடைக்காவிட்டாலும் செடி கொடிகளின் வேர்க்கட்டைகள் இருந்தாலே போதும்.

சாதாரண காலங்களில் படை வருவதைக் கண்டு ஊரைவிட்டு ஓடி ஒளிந்துகொள்ளும் ஜனங்கள் தங்கள் ஆகாரத்துக்கு வேண்டிய தானியங்களைத் திரும்பிவந்த பிறகு அதை எடுத்துக் கொள்ளலாம் என்னும் எண்ணத்துடன் பள்ளம் தோண்டி புதைத்து வைத்து விட்டுப் போவார்கள். அதை அறிந்த மஹாராஷ்டிரப் போர்வீரர்கள் கிராமங்களில் புகுந்து குடி மக்கள் அவ்விதம் புதைத்து வைத்திருக்கக்கூடிய இடங்களை எல்லாம் சல்லடை போட்டுச் சலித்துப் பார்ப்பார்கள். பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கடப்பாறையைப் பூமிக்குள் செலுத்தும் போது உண்மை வெளிப்பட்டு விடும். சப்தம், மண்ணின் 'சரிவு, கடைசியாகக் கடப்பாறையைத் திரும்பிப் பிடுங்கும் போது உண்டாகும் வாசனை, ஆகியவை அதைக் காட்டிக் கொடுத்துவிடும்.

### நவாப் செய்த ஏற்பாடு

ஆகையால் ஹைதர் இந்த முறைத் தானியங்களை ஸ்ரீரங்கப் பட்டிணத்துக்கே கொண்டு வந்துவிட வேண்டும் என்று கூறி விட்டான்: நெல், கம்பு, கேழ்வரகு முதலிய தானியங்களும் தலை நகரத்துக்கு வந்து விட்டன.

குடி மக்கள் போர் வீரர் இவர்களில் யாரும் தலை நகரத்துக்கு வெறும் கையோடு வரவில்லை. அவர்கள் கொணர்ந்த சாமான்களுக்கும் கணக்கு இல்லை: வீட்டு ஜன்னல், வாசற்கால், கட்டில் முதலிய பலவும் வந்திருந்தன, அரசாங்கம் அவை எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டன.

நாட்டுப் புறங்களிலிருந்து தலை நகரத்துக்கு வந்த ஜனங்கள் எவ்வளவு காலம் அவ்விடம் தங்கி இருக்க முடியும்? ஹைதர் அவர்களைப் பத்திரமான இடங்களுக்கு அனுப்பி அங்கே குடியேறச் செய்தான், பெரும்பாலோர் கோயம்புத்தூர் பக்கம் சென்றார்கள்.

### ஸௌகர்யம் செய்து கொடுக்கப்பட்டது.

நாட்டைத் துறந்து புதிய இடங்களுக்குச் சென்ற அவர்கள் புதிதாக வாழ்க்கை ஆரம்பிப்பதில் கஷ்டங்கள் தோன்றாதவாறு வேண்டிய ஸௌகரியங்களையும் அரசன் செய்து கொடுத்தான். தானியங்களைக் குறைந்த விலைக்கு விற்கச் செய்தான். பல சமயங்களில் அவர்கள் சிறிது காலத்துக்கு முன்னர் ஸ்ரீரங்கப்பட்டிணத்தில் விற்ற விலைக்குக்குறைவாகவே தானியங்களை வாங்கினர்.

அந்தக் காலத்திலே அரசாங்கத்தார் தீர்வையை ரொக்கமாக அன்றித் தானியங்களாகவும் வசூலித்து வந்தனர். அவ்விதம் வசூல் செய்த தானியங்களை அங்கங்கே சேமித்து வைத்திருந்தனர். தவிர, நாட்டைத்துறந்து வெளியேறியவர்கள் விற்ற தானியங்களையும் அப்படியே அரசாங்கம் வாங்கிக்கொண்டது. அதனாலே தான் அரசாங்கம் தானியத்தைக் குறைந்த விலைக்குக் குடிமக்களுக்கு விற்க முடிந்தது.

தலை நகரத்துக்கு வந்த எல்லோரையுமே வெளியூர்களுக்கு அனுப்ப முடியவில்லை. பலவேறு காரணங்களால் ஒரு பகுதியினர் ஸ்ரீரங்கப் பட்டணத்திலும், அதைச்சுற்றிய இடங்களிலும் தங்கும்படி நேரிட்டது. அவர்களுக்கு வேண்டிய ஆகார வசதிகளை அரசாங்கமே செய்து கொடுத்தது.

### அக்காலத்திய நிலைமை.

அந்தக் காலத்தில் குடிமக்கள் மிகவும் எளிய வாழ்க்கையை நடத்தி வந்தனர். அதிகமான ஆடம்பரம் கிடையாது.

கோட்டை கொத்தளங்களைப் போன்ற கட்டிடங்களைத் தவிர குடிமக்கள் வாழ்ந்து வந்த வீடுகள் யாவும் மண்சுவர் எழுப்பிக் கட்டப்பட்டனவே. அவை அழிந்து விட்டால் அதனால் யாருக்கும் அதிக நஷ்டமுமில்லை. அவற்றைத் திரும்பவும் கட்டி விடுவதில் கஷ்டமுமில்லை.

அன்றி, நாட்டைத் துறந்த மக்களின் ஜீவனோபாயத்துக்குக் கஷ்டமின்றி அரசாங்கம் வேண்டிய உதவியையும் பாதுகாப்பையும் அளித்து வந்தது. அதனால் அந்தக் காலத்தில் குடிமக்கள் அவ்விதம் தங்கள் உடைமைகளை அழிக்கும் வேலையை லாபகரமானதாகவே கருதித் தடை பேசாமல் செய்து முடித்ததில் ஆச்சரியம் இல்லை!

நமது தொடர் கதை

# ஸ்ரீகாந்தன்

சரத்சந்திரர் எழுதியது.

(ஸ்ரீ.கு.ப.ராஜகோபாலன் மொழிபெயர்த்தது)

## முன் கதைச் சுருக்கம்

சிறுபிராயத்தில் இந்திரநாதனுடன் சேர்ந்து ஸ்ரீ காந்தன் தனது இளமைப் பருவத்தை மிகவும் துணிகாமாகவும் நிர்ப்பயமாகவும் கழித்ததுடன் சமூகத்தை விரோதிக்கும் விதமாகவும் நடந்து கொள்கிறான். இதற்கப்புறம் ஸ்ரீகாந்தன் ஓர் நாள் தனது பழைய நண்பனான ஜமீன்தாரின் வீட்டில் பியாரியைச் சந்திக்கிறான். பியாரிக்கு ஸ்ரீ காந்தனிடம் விசேஷ ப்ரீதி: பிறகு அவன் வேறு இடம் கிளம்பி வழியில் ஒரு சந்யாஸியை அடைந்து சில் காலம் தங்கி விட்டு அவரிடமிருந்து பிரிகிறான். ஸ்ரீ காந்தனுக்கு தேக அசௌக்யம் ஏற்படுகிறது. இந்தச் செய்தியை யறிந்து பியாரி அவனது உதவிக்கு வருகிறாள். பியாரி வீட்டிற்குப் போன அவன் அங்கு குதூஹலத்தைப் பார்க்கிறான். பிறகு அவன் பியாரிடம் தன் விவாகம், ரங்கூன் பிரயாணம் இவற்றைப் பற்றி சம்பாஷித்து விடை பெற்று கப்பலேறிக் கிளம்புகிறான். கப்பலில் அவனுக்குப் பலருடன் பழக்க மேற்படுகிறது. ரங்கூன் போய்ச் சேர்ந்ததும் அவனுக்கு ஏற்படும் அனுபவம் விநோதமாக இருக்கிறது. அங்கு அவன் உத்யோகத்திற்காக அலைந்த பின் அதை சம்பாதிக்கிறான். இதனுடன் தான் கப்பலில் சந்தித்த அபயாவின் புருஷனைக் கண்டு பிடித்து, அவன் அபயாவை ஏற்கும்படி வழி தேடுகிறான். பிறகு அபயாவை ஸ்ரீகாந்தன் சந்தித்தபோது அவள் அவனிடம் பல சீரிய கருத்துகளை வெளியிடுகிறாள். ராஜலக்ஷ்மியிடமிருந்து ஒரு கடிதம் வர ஸ்ரீகாந்தன் ரங்கூனைவிட்டு புறப்பட்டு அவளிடமே வந்து சேருகிறான். சில தினங்களுக்கப்பால் இருவரும் யாத்திரை கிளம்புகின்றனர். ஸ்ரீகாந்தன் மனோநிலை வேறுபடுகிறது. ஸ்ரீகாந்தன் தனியே புறப்பட்டுப் போய், ஊரில் தேக அசௌக்கியமடைகிறான். அந்நிலையில் அவன் ராஜலக்ஷ்மிக்குக் கடிதம் எழுத, அவள் அவனுக்கு சகாயம் புரிய உடனே அங்கு வந்து சேருகிறாள். ராஜலக்ஷ்மி அவனிடம் காட்டும் ப்ரீதி மிகவும் அபாரமானது. ஒருநாள் தன்னையே தான் அவனுக்கு அளித்து விட்டிருப்பதாகவும் அவள் சொல்கிறாள். இருவரும் இதற்கப்புறம் கங்காமாடி கிராமத்திற்குப் போக, வழியில் ஒரு சாதுவை சந்தித்து அவரையும் தங்களுடன் அழைத்துப்போகின்றனர். பிறகு அவர் பிரிந்து போகிறார் பின்பு இவர்கள் தங்கள் கிராமத்திற்கு வருகின்றனர். அங்கு ஒரு ஏழைக் குடும்பத்தில் விவாகம் நடக்கும் முறையும் குசாரி மஹாசயர் மனைவி கூறிய விருத்தாந்தமும் விநோதமாயிருக்கின்றன.

சிறிது நேரத்திற்கெல்லாம் அவள் வீட்டு விவகாரங்களைப்பற்றிப் பேச ஆரம்பித்தாள். அவர்கள் மெதுவான குரலில் பேசிக்கொண்டிருந்தது என் காதில் முற்றிலும் விழவுமில்லை, நான் காது கொடுத்துக் கேட்கவும் முயலவில்லை. தர்க்காலங்காரருடைய ஹுக்காவில் அஜேயன் நிரப்பிக்கொண்டு வந்து கொடுத்த உபயோகமற்ற புகையிலையைச் சாம்பலாக்குவதில் ஈடுபடலானேன்.

அவ்விரு பெண்களும் காதில் சரியாகப்படாத மெதுவான குரலில் வாழ்க்கையைப்பற்றிய எந்தச் சிக்கலான பிரச்னைகளை ஆராய்ந்துகொண்டிருந்தார்களோ அது அவர்களுக்குத்தான் தெரியும்! ஆனால் அவர்கள் அருகில் ஹுக்காவும் கையுமாக மௌனமாக உட்கார்ந்திருந்த எனக்கு அப்பொழுது திடீரென்று ஒரு கடினமான பிரச்னைக்கு முடிவு கிடைத்துவிட்டதாகத் தோன்றியது. நம்மிடத்தில் ஒரு பெரிய களங்கம் இருக்கிறது! நாம் நம்முடைய பெண்களை ஈனமாக்கி வைத்திருக்கிறோம்! இந்த வெறுக்கத் தகுந்த வேலையை எவ்வாறு செய்தோம்? இதற்கு எங்கே பரிகாரமிருக்கிறது?—என்ற விஷயத்தைப் பற்றி நான் பலவகையாக யோசித்துப் பார்த்திருக்கிறேன். ஆனால் இன்று சுநந்தையை என் கண் முன்னால் பார்த்திராவிட்டால் என் முயற்சி இன்னும் வெகு காலமானாலும் பலன் அடைந்திருக்காது. பெண் விடுதலை ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு விதமாக இருப்பதை நான் கண்டிருக்கிறேன். நான் முதல் முதல் பர்மாவில் காலெடுத்து வைத்தபொழுது எந்த ரகம் என் கண்ணில் பட்டதோ அதை நான் எப்படி மறப்பது? மூன்று பர்மியப் பெண்மணிகள் பகிரங்கமாக ராஜவீதியில்ஒரு வயதுவந்த புருஷனை நய்யப் புடைத்ததைக் கண்டு நான் நடுநடுங்கிப் போனேன். அபயா அன்பு நிறைந்த பார்வையுடன் பார்த்துக் கொண்டு, 'ஸ்ரீகாந்த பாபு நம்முடைய வங்காளிப் பெண்கள் இந்தமாதிரி யிருந்தால்—' என்றாள். என்னுடைய சிறிய தகப்பனார் ஒரு தடவை இரண்டு மார்வாடிப் பெண்களின் மேல் கம்பளைண்ட் கொடுக்கப் போனார். அந்தப் பெண்கள் சித்தப்பாவின் மூக்கையும் காதையும் ரயில் வண்டியில் 'உண்டோ இல்லையோ, என்று செய்துவிட்டார்கள். அதைக் கேட்டு எங்கள் சிறிய தாயார் என்னைப் பார்த்து 'நம்ம வங்காளிகள் வீட்டில் இந்த மாதிரி கோலம் நடைபெறுமா?' என்றாள். நடந்தால் எங்கள் சிறிய தகப்பனார் பெரிய ரகளை செய்து விடுவார் ஆனால் இதிலிருந்து ஸ்திரீ ஜாதிகளுடைய ஈனமான நிலைமை மாறிவிடுமா என்றால் அதுவும் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. இது எங்கே, எப்பொழுது, எந்தமாதிரி-முடிவு பெறும் என்பதைப்பற்றி நான் அப்பொழுது சுநந்தையினுடைய பாழடைந்த வீட்டில் கிழிந்த ஆசனத்தின் மேல் உட்கார்ந்துகொண்டு மௌனமாக, ஆலோசித்துக்கொண்டிருந்தேன் 'உட்காருங்கள்' என்று சொன்னதைத் தவிர வேறு விதமாக அவள் என்னுடன் இரண்டாவது வார்த்தை கூடப் பேசவில்லை. ராஜலக்ஷ்மியுடனாவது அவள் ஒரு பெரிய பிரச்னையைப்பற்றிச் சர்ச்சை செய்தாளா என்றால் அதுவுமில்லை. ஆனால் அவள் அஜேயன் பொய்ஆடம்பரமாகப் பேசியதற்குப் பதிலாக சிரித்த முகத்துடன் வீட்டில் வெற்றிலை இல்லையென்றும், வாங்குவதற்கு வழியுமில்லை யென்றும் சொன்னாள். அந்த இடத்தில் அவள் எவ்வளவு துர்லபமான வஸ்து! அவள் பேசின பேச்சின் நடுவில் எல்லாம் இநத வார்த்தை தான் என் காதில் ஒலித்துக்கொண்டிருந்தது அவள் சங்கோசம் கொஞ்சம்கூட இல்லாமல் பரிகாசமாக வறுமையினுடைய வெட்கம் பூராவையும் முகத்திலிருந்து அப்புறப்படுத்திக் கொண்டு நின்றாள். அது ஒரு பொழுதும் அவள் முகத்தில் தென்படவில்லை

அந்தப் பாழடைந்த வீடு, அதன் ஜீர்ணமான தோற்றம் அந்த துக்கம்நிறைந்த வாழ்க்கை, அவற்றின் நடுவே ஆபரணமற்ற அந்தப் பெண் மிகவும் உயர்ந்து நின்றாள். பண்டிதரான தகப்பனார் அவளுக்கு சிரமப்பட்டு தர்மத்தையும் கல்வியையும் புகட்டி, புருஷன் வீட்டிற்கு அனுப்பியிருந்தார். அதற்குப் பிறகு அவள் மலினமான ஆடை உடுத்தி முக்காட்டை விலக்கி வெளியே வருவாள், அல்லது அநியாயத்தை ஆட்சேபித்து அதன் பலனாகப் புருஷனுடனும் பிள்ளையுடனும இடிந்த வீட்டில் குடியிருப்பாள். அங்கே அவல் வருப்பாள். யோகவாஸிஷ்டம் சொல்





பிரிட்டிஷ் பாரச்சூட் துருப்புகள்



பாரச்சூட் மூலம் எதிரி நாட்டில் படையை இறக்க பிரிட்டன் ஏற்பாடு செய்து வருகிறது. இநத பாரச்சூட் வீரர்கள் விமானத்தின் அடி பாகத்தில் குழிபோன்ற இடத்தின்மீது தயாராக உட்கார்ந்து கொள்கினறனர். 'தயார் சமிக்ஞை' கிடைத்ததும் அவர்கள் கீழே அந்தக் குறியின் வழியாக குதிக்கின்றனர். கீழே அவர்கள் இறங்குகையில் பாரச்சூட் ஒரு குடை மாதிரி அகன்று அவர்கள் சௌக்யமாக இறங்க முடிகிறது.

லிக் கொடுப்பாள் என்ற நினைப்பு உபயோகமில்லை.பெண்களையெல்லாம் ஈனப்படுத்தி யிருக்கிறோமா இல்லையா? அதனுடைய பலன் தடுக்க முடியாதது.

அஜேயனுடைய உற்பத்திப் பிரகரணப் பேச்சுக் கிளம்பியிரா விட்டால் சுநந்தையினுடைய கல்வி அறிவைப்பற்றி எங்களுக்கு ஒன்றுமே தெரிந்திருக்காது. அவள் அவல் வருப்பதிலிருந்து தமாஷாகப் பேசினது வரை, யோகவாஸிஷ்டம் சொல்லிக் கொடுக்கும் திறமை அவளிடம் இருக்கிறது என்பதை ஒன்றுமே காட்டவில்லை; புருஷன் இல்லாத பொழுது அறிமுகமாகாத அதிதிகளை வரவேற்பதிலும் அவள் ஒருவிதமான சங்கடமும் அறியவில்லை. தன்னந்தனியாக அந்த வீட்டில் ஏழெட்டு வயது பையன் ஒருவனுடன் அவள் அவ்வளவு இயற்கையாகவும்பொழுதுபோக்காகவும்இருந்ததற்காக அவளுடைய புருஷன் ஒருபோதும் சந்தேகம் கொண்டு அவளுக்கு எந்தவிதமான நிர்ப்பந்தமும் ஏற்படுத்தியதில்லை. ஆனால் ஒவ்வொரு வீட்டில் இந்த விதமான பெண்களுக்கு எவ்வளவு பந்தோபஸ்து ஏற்படுத்துகிறார்கள்.

தர்க்காலங்கார மகாசயர் பிள்ளையைக் கூடக் கூப்பிட்டுக் கொண்டு கடைக்குப் போனார். எப்படி யிருக்கிறது என்று பார்ப்பதற்காகக் கூடப் போகவேண்டும் என்பது எனக்கு ஆசை. ஆனால் நேரமாகி விட்டது. அந்த ஏழைப் பெண்ணுக்கு இன்னும் எவ்வளவு காரியம் பாக்கியிருக்கிறதோ என்று எண்ணி "போய் விட்டு வருகிறேன் அம்மா. எங்களிடம் வெறுப்பு ஏற்படவில்லை என்றால் மறுபடியும் வருகிறோம்" என்றாள் ராஜலக்ஷ்மி.

நானும் எழுந்து நின்று கொண்டு "எங்களுக்கும் பேசுகிறதற்கும் யாரும் இல்லை. நீங்கள் இஷ்டப்பட்டால் அடிக்கடி வருகிறேன்" என்றேன்.

சுநந்தை வாயால் ஒன்றும் சொல்லாமல் சிரித்துக்கொண்டே தலையை ஆட்டினாள்.

வீட்டுக்குப் போகும் வழியில் ராஜலக்ஷ்மி என்னிடம் "பெண் ரொம்பக் கெட்டிக்காரி. புருஷன் போலவே இருக்கிறாள். பகவான் சரியாகவே படைத்திருக்கிறார்" என்றாள்

"ஆமாம்!" என்றேன் நான்.

"இவர்களுடைய அந்த வீட்டுப்பேச்சை நான் இன்று எடுக்கவில்லை. குசாரி மகாசயரை நான் இன்னும் சரியாகக் கண்டு கொள்ளவில்லை. ஆனால் இவர்கள் இருவரும் மிகவும் கெட்டிக்காரர்கள் தான்."

"இருக்கலாம். ஆனால் உனக்குத்தான் மனிதர்களை வசம் செய்யும் சக்தி அற்புதமாக அமைந்திருக்கிறதே? இவர்களை மறுபடியும ஒரு குடும்பமாக்கப் பிரயத்தனம செய்து பாரேன்."

ராஜலக்ஷ்மி முகத்தைத்திருப்பிக்கொண்டு மெதுவாகச்சிரித்து "சக்தியிருக்கலாம். ஆனால் உன்னை வசப்படுத்தி விட்டது ஒரு அளவுகோலாகி விடாது. பிரயத்தனப்பட்டால் பல பெண்கள் அந்த மாதிரி செய்யக் கூடும்" என்றாள்.

"இருக்கலாம். ஆனால் முயற்சி வீணாகி விட்டால் பிறகு தர்க்கம் செய்வது பிரயோசனமில்லை."

ராஜலக்ஷ்மி முனபோலவே சிரித்துக்கொண்டு "சரிதான் இப்படி நினைத்துக் கொண்டேயிருந்தால் காலம் கழிந்து விடும்" என்றாள்.

அன்று பூராவும் மப்பும் மந்தாரமுமாகயிருந்தது. பிற்பகல் சூரியன் கொஞ்ச நேரத்திற்கு முன்பே ஒரு மேகத் துண்டில் மறைந்ததால் கண்ணுக்கு ஆகாயம் பூராவும்செந்நிறமாகத்தென்பட்டது. அந்த நிழல் எதிரே இருந்த புழுதி படிந்த மைதானத்திலும் இரண்டு மூன்று மரங்களின் பேரிலும் அருகிலிருந்த ஜலத்தின் பேரிலும் பொன் வர்ணத்தை உண்டாக்கியது. ராஜலக்ஷ்மி கடைசியாகச் சொன்ன வார்த்தைகளுக்குப் பதில் சொல்லாமல் இருந்தேன். வெளியே பத்து திக்குகளும் சிவந்திருந்தது போல உள்ளே என் மனதும் ஒரு விதமான நிறம்கொள்ளத் தலைப்பட்டது. அவள் அறியாமல் அவள் முகத்தை ஒரு தடவை பார்த்தேன். அவளுடைய் இதழ்களிலிருந்து அப்பொழுதும் அந்தப் புன்முறுவல் மறையவில்லை. சொர்ணச்சாயை வழியும் அந்தப் புன்னகை முகம் எனக்குமட்டும் தானே பரிச்சயமாகி இருந்தது என்று அபூர்வமாக எனக்குத் தோன்றலாயிற்று. ஒருவேளை அது அந்த ஆகாசத்தின் செந்நிறம அல்லவோ? ஒருவேளை ஒரு ஸ்திரீயிடமிருந்து நான் அடைந்த ஒளி தான் அப்படி விசித்திரமான ஜோதியுடன் அவள் பிரகாசித்தாளோ?

பாதையில் எங்களைத் தவிர வேறுயாருமில்லை. அவள் தனக்கு முன்னால் கையைச் சுட்டிக் காட்டி, "உன் நிழல் ஏன் படவில்லை, சொல்லு?" என்றாள்.

எதிரே பார்த்தேன். அருகே வலது கைப்புறம் எங்கள் இருவருடைய மங்கலான நிழல்கள் ஒன்றாகக் கலந்திருந்தன.

"பொருள் இருந்தால் அல்லவா நிழல் விழும்? ஒருவேளை 'நான்' என்ற வஸ்துவே இல்லையோ என்னமோ?"

"முதலில் இருந்ததா?"

"இருந்ததாகத் தெரியவில்லை. ஞாபகமில்லை"

ராஜலக்ஷ்மி சிரித்துக்கொண்டே "எனக்கு நினைவிருக்கிறது. கிடையவே கிடையாது. சிறு வயதிலிருந்தே அதை நான் கவனித்திருக்கிறேன்" என்று சொல்லித் திருப்தியைக் காட்டும் ஒரு பெருமூச்சை விட்டுவிட்டுப் பிறகு "இன்று எனக்கு நல்ல நாள். இத்தனை நாட்களுக்குப் பிறகு இன்று ஒரு தோழமை ஏற்பட்டிருக்கிறது" என்று சொல்லி என் பக்கம் பார்த்தாள்.

நான் பதில் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அவள் சொல்லுவது முற்றிலும் உண்மையான வார்த்தை என்று அறிந்தேன்.

வீடு வந்து சேர்ந்தோம். ஆனால் கால் கழுவிக்கொள்ளுவதற்குக்கூட அவகாசமேற்படவில்லை. அமைதியும் திருப்தியும் மனதில் ஒன்றில் ஒன்று இணைந்து நின்றன. வெளித்தாழ்வாரத்தில் பத்து பதினைந்து ஆட்கள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். எங்களைப் பார்த்து அவர்கள் தடபுடலாக எழுந்து நின்றார்கள். அதுவரை ரதன் அவர்களிடம்ஏதோ பிரசங்கம் செய்து கொண்டிருந்தான் போலிருக்கிறது. அவர்கள் முகங்களெல்லாம் உத்சாகமும் ஆனந்தமும் நிறைந்திருந்தன. அவன் அருகில் வந்து அம்மா நான் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தேன் அல்லவா, அதே மாதிரி நடந்து விட்டது" என்றான்.

ராஜலக்ஷ்மி கொஞ்சம் பயந்து போய் "நீ என்ன சொன்னயோ ஞாபகமில்லை மறுபடியும் சொல்" என்றாள்.

"நவீனனைப் போலீஸார்கள் கட்டி இழுத்துக்கொண்டு போய் விட்டார்கள்" என்றான்.

"இழுத்துக்கொண்டு போய் விட்டார்களா? எப்பொழுது? எனன செய்தான் அவன்?"

"மாலதியை நன்றாக அடித்து விட்டான்"

"என்னவென்று விபரமாகச் சொல்லுடா" அவளுடைய முகம் ஒரே அடியாக விழுந்து விட்டது.

ஆனால் விஷயம் சொல்லி முடிவற்குள் பலர் ஒரே அடியாக "இல்லை இல்லை அம்மா, நன்றாக அடிக்கவில்லை. நன்றாக அடிக்க வேண்டியது தான். ஆனால் அப்படிச் செய்யவில்லை" என்றார்கள்.

ரதன் உடனே கண்களைச் சிவக்க வைத்துக்கொண்டு "உங்களுக்கு என்ன தெரியும்? அவளை ஆஸ்பத்திரிக்கு அனுப்ப வேண்டும். ஆனால் தேடித்தேடிப் பாாத்தும் அகப்படவில்லை. எங்கே போய்விட்டாள். உங்களுக்கும் கைக்கு விலங்கிட்டுக் கட்டி இழுத்துக் கொண்டு போகப்படுவீர்கள் தெரியுமா" என்றான்.

அதைக்கேட்டு பயந்துவிட்டார்கள். சிலர் கொஞ்சம் கொஞ்சமாக நழுவக்கூட ஆரம்பித்தார்கள். ராஜலக்ஷ்மி ரதனைக் கடுமையான பார்வையுடன் பார்த்து "நீ போய் ஒருபுறமிரு, உன்னைக் கேட்கிறபொழுது சொல்" என்றாள்.

கூட்டத்தின் நடுவே மாலதியினுடைய கிழத் தகப்பனார் துக்கம் தேங்கிய முகத்துடன் நின்றுகொண்டிருந்தான். நாங்கள் அவனைச் சமிக்ஞை செய்து அருகில் கூப்பிட்டு "விஸ்வநாதா, என்ன ஆயிற்று என்று உண்மையாகச் சொல்? உண்மையை மறைப்பதற்கு ஏதாவது பொய் சொன்னாயானல் ஆபத்து நேரும்" என்றோம்.

விஸ்வநாதன் சொன்னது சுருக்கமாக இதுதான்:—

நேற்றிரவு முதல் மாலதி தனது தந்தையினுடைய வீட்டில் தான் இருந்தாள். இன்று மத்தியானம் குளத்திற்கு ஜலமெடுக்கப் போனாள். அவளுடைய புருஷன் நவீனன் எங்கேயோமறைந்திருந்து அவளைத் தனியாக வளைத்துக் கொண்டு நன்றாக அடித்து விட்டான். அதில் மண்டை உடைந்து போய் விட்டது. மாலதி அழுது கொண்டே முதலில் இங்கே வந்தாள், நாங்கள் வீட்டில் இல்லாததால் குசாரி மகாசயரைத் தேடிக் கொண்டு கச்சேரிக்குப் போனாள், அங்கே அவரையும் பார்க்க முடியாததால், போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய், தன் காயங்களையெல்லாம் காட்டிப் போலீஸ்காரர்களைக் கூடக் கூட்டிக் கொண்டு வந்து நவீனனைப் பிடித்துக் கொடுத்து விட்டாள். அப்பொழுது அவன் வீட்டில்தான் இருந்தான். அவன் அப்பொழுது சாப்பிட்டுக்கொண்டிருந்தபடியால் தப்பித்துக் கொண்டு ஓட முடியவில்லை. போலீஸார் அவன் சாதத்தைத் தட்டி எறிந்துவிட்டு அவனைக் கட்டி இழுத்துக் கொண்டு போய் விட்டார்.

அதைக் கேட்டதும் ராஜலக்ஷ்மிக்கு வெகு கோபம் வந்துவிட்டது. மாலதியைக் கண்டால் அவளுக்குப் பிடிக்காது என்றாலும், நவீனனிடமும் அவள் அவ்வளவாகத் திருப்தி கொண்டவளல்ல. ஆனால் அவள் கோபம் பூராவும் என்பேரில் திரும்பிற்று. கோபக் குரலில் "உனக்கு எவ்வளவு தரம் சொல்லியிருக்கிறேன். நேரத்தோடு நேரமான வர்களுடைய சண்டைச் சச்சரவுகளில் கலந்து கொள்ளாதே என்று. போ இன்று போய் அதைத் தீர்த்து வை. எனக்கொன்றும் தெரியாது" என்று சொல்லி விட்டு என்னைத் திரும்பிக்கூடப் பாராமல் அவள் சடக்கென்று உள்ளே போய் விட்டாள். போகும் போதே "நவீனனைத் தூக்கிலிடுவதாக போடவேண்டும். அந்த நாசமாய்ப் போறவன் இறந்து போயிருந்தால் ஆபத்து தான்" என்றாள் ராஜலக்ஷ்மி.

சிறிது நேரம் நாங்கள் எல்லோரும் அப்படியே கல் போல சமைந்து நின்றோம். வெகுநேரத்தின் பிறகு தான் முதல் நாள் அந்த நேரத்திற்கு நான் அவர்களிடையே மத்தியஸ்தம் செய்து வைத்தது சரியல்ல என்று தோன்றிற்று. அப்படிச் செய்திராவிட்டால் இன்று இந்த ரகளை ஏற்பட்டிருக்காது. ஆனால் நான் நல்ல எண்ணத்துடன்தான் செய்தேன். ப்ரேமையில்லாத கண்காணாத அடையாளம் என்கோ வெள்ளத்தில் மறைந்து போய் கிராமங்களில் நிரந்தரமான அதிருப்தியை ஏற்படுத்துகிறது. அதை விலக்கவேண்டும் என்று எண்ணினேன். ஆனால் நான் பிசகு செய்து விட்டேன் என்று கண்டேன். ஆனால் அது எப்படி என்று சொல்லுவதற்கு முன் விஷயம் என்ன என்பதையும் கொஞ்சம் விஸ்தரிக்கவேண்டும்.

மாலதி, நவீனன் என்ற கூடை முடைபவனின் மனைவி தான். ஆனால் நாங்கள் அவ்வூருக்கு வந்திருந்தபோதே அவர்கள் எல்லோரிலும் அவள் நெருப்புத் துண்டு போன்ற தன்மையுடையவள் என்று கண்டேன். அவள் எங்கள் கூட்டத்திலிருந்தாலும் அதில் கலந்தவள் அல்ல. மற்ற பெண்களுக்கு அமைதியிராது. அந்த இளம்பெண் எவ்வளவு அழகோ அவ்வளவு, சபல புத்தியுடையவள். அவள் ஜிஞுப் பொட்டிட்டுக் கொள்வாள். வேப்பெண்ணெய் தடவி கூந்தல் முடிவாள். கறுப்புக்கரை போட்ட மில் புடவை உடுத்திக் கொள்வாள். ஆண்களுடனும் பழகுவாள், முக்காடு நழுவி போனாலும் கவலைப்படமாட்டாள். இந்த முழுக்காசப் பெண்ணைப் பார்த்துப் பேசக் கூட யாருக்கும் தைரியம் இல்லை. ஆனால் ஏனோ அவ்வூர்ப் பெண்கள் அவளுடைய பெயருடன் சேர்த்துச் சொன்ன ஒன்றை இங்கே எழுத முடியாது. முதலாவதாக மாலதி நவீனனுடன் குடும்பம் நடத்த விரும்பவில்லை. தகப்பன் வீட்டிலேயே இருந்தாள். "அவன் என்னை வைத்துக் காப்பாற்றுவானா?" என்று சொல்லிக் கொண்டிருந்தாள். இதனால் நவீனன் வெறுப்படைந்து அந்த ஊரை விட்டு வெளியே போய் எங்கோ ஒரு நகரத்தில் வேலை செய்து ஒரு வருஷத்திற்கு ஒரு தடவை ஊருக்குத் திரும்பி வருவான். வரும்பொழுது அவன் மாலதிக்கு வெள்ளி வளையல் மெல்லிய நூல் புடவை, பட்டு ரிப்பன், ஒரு பாட்டில் பன்னீர், எல்லாவற்றையும் ஒரு தகர டிரங்குடன் கொண்டு வருவான்.

ஆதலால் அவன் வீட்டுக்குத் திரும்பி வந்ததும் வரவேண்டுமல்லாமல், அவன் மனைவியை கவர்ந்து விடவேண்டும் என்று எண்ணினேன். இதெல்லாம் நான் கேள்விப்பட்ட கதை. பிறகு என் முதல் அவ்வூருக்கு பெண்ஜாதி மேல் சந்தேகம் ஏற்பட்டு குழந்தைப் போகும்பொழுது மறைந்திருந்து கவனிக்க ஆரம்பித்தான். எதிலிருந்து இதெல்லாம் ஆரம்பித்தது – இதெல்லாம் எனக்கு ஒன்றுமே தெரியாது. நாங்கள் வந்தது முதல் ஒரு நாளாவது இவர்கள் பேச்சுச் சண்டையும், கைச்சண்டையும் போடாமல் குறையவில்லை என்று மட்டும் கண்டேன். மண்டை உடைந்தது அன்று மாத்திரமல்ல, முன்னும் இரண்டு தடவை அப்படி ஆகியிருந்தது. அதனால்தான் இன்றும் அவன் அவளுடைய மண்டையை உடைத்துவிட்டு அவ்விடத்தில் உட்கார்ந்திருந்தான் போலிருக்கிறது. மாலதி போலீஸாரிடம் சொல்லி தன்னைக் கட்டியிழுத்துக்கொண்டு போகச் சொல்லுவாள் என்று அவன் கனவில்கூட நினைத்திருக்க மாட்டான். காவலில் என்னைப் பார்த்ததும் விடியாதமாக வெடிபோட்டதுபோல மாலதி உரத்த குரலில் வானத்தைப் பிளக்க ஆரம்பித்தாள், ராஜலக்ஷ்மி கைக் காரியத்தைப் போட்டுவிட்டு அவள் அருகில் போய் "வீட்டுக்குள் இன்றும் இந்தச் சப்தம் தாங்க முடியவில்லை— இல்லாவிட்டால் ஏதாவது பணம் கொடுத்து விடுகிறேன். எங்கேயாவது தூரமாகத் தொலைந்து போய் விடு" என்றாள்.

"நவீனனுடன் நம்முறைக்கவில்லை. வேலை வெட்டி செய்ய இல்லை. சும்மா உட்கார்ந்திருப்பான். இல்லாவிட்டால் பீடி பிடிக்கப் போவான், கையில் ஒரு பைசா கிடைத்து விட்டால் அடிக்க ஆரம்பித்து விடுவான். இதெல்லாம் அவன் நகரத்திலிருந்து கற்றுக்கொண்டு வந்திருக்கிறான். ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை" என்றேன் நான்.

"ஒருவருக்கு ஒருவர் தாம் வில்லை" என்று சொல்லிவிட்டு ராஜலக்ஷ்மி உள்ளே போய்க் கொண்டே "காரியம் எப்படிச் செய்கிறது? நாசமாய்ப்போறவனால் அதுகூட தடைப்பட்டுப் போகிறது" என்றாள்.

உண்மையிலேயே அவர்களுடைய சச்சரவுகளும் சண்டைகளும் தாங்க முடியாமல் போய் விட்டன. நான் மேலும் இரண்டு தடவை தடுத்துப் பார்த்தேன். ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. இன்று சாப்பாடு முடிந்ததும் அவர்களைக் கூப்பிட்டு ஏதாவது ஏற்பாடு செய்யலாம் என நினைத்திருந்தேன். ஆனால் மத்தியானம் கிராமத்து ஸ்திரீ புருஷர்கள் விநோதமாகக் கூடியிருக்கிறார்கள். ஆகையால் அவர்களைக் கூப்பிட்டுப் பேச முடியவில்லை.

"அவள் எனக்கு வேண்டாம் பாபு. அவள் கெட்டுப் போனவள். அவள் என் வீட்டை விட்டுப் போய்விட வேண்டும்" என்றான் நவீனன்.

மாலதி முக்காட்டை முடிக்கொண்டே "அப்படியானால் என்னுடைய இரும்புவளையல்களை கழற்றிக் கொடுத்துவிட வேண்டும்" என்றாள்.

"நீயும் என்னுடைய வெள்ளிக்காப்பைத் திருப்பிக்கொடு" என்றான் நவீனன்.

மாலதி உடனே கையில் இருந்த இரண்டு காப்புகளையும் கழற்றித் தூர எறிந்தாள். நவீனன் அதைக் கையில் எடுத்துக்


# பதினேரு மணிக்கு

இப்பொழுது மணி பதினென்று. காலை வேளைக்குப் பிறகுண்டான சோர்வைப் போக்க டீ அருந்தும் சமயம் இதுவே. புருஷர்களும் ஆபீஸுக்குப் போய், குழந்தைகளும் பள்ளிக் கூடம் சென்றபின், நீங்கள் தனியாயிருக்கும் சமயம் இதுவே. "இனிது இனிது ஏகாந்த மினிது" என்றார் ஒரு கவி, ஆனால் ஒரு கெட்டில் டீயும் பக்கத்திலிருக்க வேண்டும் இவ்வேகாந்தம் இனிமையாயிருக்க.

★

எங்கள் புதிய பிரசுரமாகிய "டீ அருந்துவதற்கான சமயங்கள்" என்ற சித்திரங்களுடன் கூடிய புத்தகத்தில், டீ அருந்துவதற்கான சில விசேஷ சமயங்களைப்பற்றி இங்கிலீஷில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து, உங்கள் பெயர் விலாசத்துடன், கீழ்கண்ட விலாசத்தாருக்கு அனுப்பினுல், அவர் இப்புத்தகத்தின் பிரதி ஒன்று இலவசமாக அனுப்புவார்: கமிஷ்னர் (இந்தியாவுக்கு), இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.



## இந்தியன் டீ

அருந்துங்கள்

புத்துயிரளிக்கும் உயரிய பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது IK 157



## விண்ணப்பம்

தயவு செய்து தங்கள் கடிதங்களை இனிமேல் கீழ்க்கண்ட எங்கள் விலாசத்திற்கு எழுதக் கோருகிறேம்.

**Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,**

ஈரல் குலைக்கட்டி வைத்திய நிபுணர்கள்

7, சாரங்கபாணி ஸ்வாமி கோயில் கீழ வீதி,

கும்பகோணம்.

## பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளை குணப்படுத்தும்




## அமெரிக்க டாங்கியின் உதவி



மத்ய கிழ்த்திசை பிரதேசத்தில் யுத்தம் புரிந்துவரும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் படைகளுக்கு அமெரிக்காவிலிருந்து அநேக டாங்கிகள் சகாயமாக வந்து சேர்ந்திருக்கின்றன. இவற்றின் மூலம் அச்சு நாடுகளின் படையை முறியடிக்க முடிந்தது. இந்த டாங்கிகளை எப்படி உபயோகிப்பது என்பதை எடுத்துக் கூறவும் சில அமெரிக்க நிபுணர்கள் வந்து சேர்ந்தனர். படத்தில் அவர்கள் ஒரு திட்டம் தயாரிப்பதைக் காணலாம்.

கொண்டே "என்னுடைய டின் டிரங்கை நீ எடுத்துக் கொண்டு போக முடியாது" என்றான்.

"அது எனக்கு வேண்டாம்" என்று சொல்லிக் கொண்டே அவள் புடவைத் தலைப்பிலிருந்த சாவியை அவிழ்த்து அவன் காலடியில் எறிந்தாள்.

நவீனன் உடனே 'தன் புருஷ கர்வத்தில் முன் வந்து, மாலதியினுடைய வீட்டார் போட்ட சங்கு இரும்பு வளையல்களை கழற்றி ஒடித்து சுவருக்கு அப்புறம் எறிந்துவிட்டு "போ உன்னை விதவை ஆக்கி விட்டேன்" என்றான்.

ஆச்சரியத்தில் நான் பேச்சற்றுப் போனேன். ஒரு கிழவர் அப்பொழுது என்னைப் பார்த்து "அப்படிச் செய்யப்பட்ட மாலதி மறுபடியும் கலியாணம் செய்து கொள்ள முடியாது. எல்லாம் சரியாகப் போய்விடும்" என்றார்.

மேலும் மேலும் பேசியதில் விஷயம் தெளிவாகிற்று. விஸ்வேஸ்வனுடைய மூத்த மருமகனின் சகோதரன் ஆறு மாத காலமாக தடபுடல் செய்துகொண்டிருந்தான். அவன் நிலைமை கொஞ்சம் சௌகரியமானது. அவன் விசுவுக்கு ரொக்கமாக இருபது ரூபாயும், மாலதி நவீனனிடமிருந்து வந்துவிட்டால் அவளுக்குக் கையில் வெள்ளிக் காப்பும் மூக்குக்குத் தங்க மூக்குத்தியும் போடுவதாகச் சொல்லியிருந்தான். அவற்றையெல்லாம் விசுவிடம் கொடுத்துக் கூட வைத்து விட்டேன்.

அதைக் கேட்டதும் அவற்றிலெல்லாம் எனக்கு வெறுப்பு ஏற்பட்டது. சிலதினங்களாகவே இந்தவிதமாக ஒரு சூழ்ச்சி நடந்து கொண்டிருந்தது என்பதில் சந்தேகமேயில்லை, அதை அறியாமலேயே நானும் அதற்கு ஒத்தாசை செய்துகொண்டு வந்தேன்.

"அதுதான் எனக்கு வேண்டியது. பட்டணத்திற்குப் போய் இந்தத் தடவை மஜாவாக வேலை பார்க்கிறேன். உன்னைப் போல இருபது பேரைக் கலியாணம் பண்ணிக் கொள்வேன். ரங்காமாட்டியிலிருக்கும் ஹரி மண்டலன் தன் பெண்ணைக்கொடுப்பதற்காக என்னை எவ்வளவோ குஷால் படுத்திக்கொண்டிருக்கிறான், அவள் கால் தூசி விலை கூட நீ பெறமாட்டாய்" என்று சொல்லி நவீனன் அவளுடைய வெள்ளிக்காப்புகள், பெட்டிச் சாவி-எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போய் விட்டான்.

இவ்வளவு ஆர்ப்பாட்டமும் செய்த அவன்முகத்தைப்பார்த்த பொழுது நகரத்து வேலையோ, அல்லது ஹரிமண்டலின் பெண்ணோ அவனை அவ்வளவு உணர்ச்சி கொள்ளச் செய்துவிட்டதாக எனக்குப் படவில்லை.

ரதன் வந்து "பாபு. இந்த ரகளையெல்லாம் வீட்டில் வேண்டாம், என்று அம்மா சொல்லுகிறாள்" என்றான்.

நான் அதில் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. விஸ்வேஸ்வர மண்டலன் தன் பெண்ணைக் கூட்டிக் கொண்டு புறப்பட்டான். ஆனால் என்னுடைய பாததூளியைப் பெற அருகில் வந்து விடுவார்களோ என்ற பயத்தில் வெகு அவசரமாக உள்ளே போய்விட்டேன். சரி. நடந்த மட்டில் நல்லதுதான் என்று எண்ணலானேன், மனது உடைந்துபோன பிறகு அநாவசியமாக ஆத்திரமடைந்து தொந்திரவு கொடுப்பதைக் காட்டிலும் ஏதோ ஒரு வழியில் திருப்தி அடைவது நல்லதுதானே?

ஆனால் இன்று சுநந்தை வீட்டிலிருந்து திரும்பி வந்ததும் முதல் நாள் ஏற்பட்ட தீர்ப்பு சரியானதாகமுடியவில்லை என்று கேள்விப்பட்டேன். தற்பொழுதிற்கு விதவை ஆக்கப்பட்ட மாலதியின் பேரில் தனக்கிருந்த புருஷ அதிகாரத்தையும், கொடுப்பது வாங்குவதையும் விட்டு விட்டானே தவிர, அவளை அடிப்பது திட்டுவது முதலிய அதிகாரத்தை விட்டு விடவில்லை. அவன் இந்த கிராமத்திலிருந்து அடுத்த கிராமத்திற்குப் போய் அதிகாலையிலிருந்து அவள் தனியாக வருவதற்காகக் காத்துக்கொண்டிருந்தான் போலிருக்கிறது! சமயம் வாய்த்ததும் தான் நினைத்திருந்த படுகாரியத்தைச் செய்துவிட்டுத் திரும்பினான். ஆனால் பெண் எங்கே போனாள்.

'சூர்ய ாஸ்தமனமாகிவிட்டது. மேற்கே இருந்த ஜன்னல் வழியாக வெளியே பார்த்தவண்ணம் மாலதி ஒருவேளை போலீஸாருக்குப் பயந்து எங்காவது மறைந்து கொண்டிருக்கலாம என்று யோசித்தவண்ணமிருந்தேன். ஆனால் நவீனனைப் பிடித்துக் கொடுத்தது நல்ல காரியம்தான். அந்தப் பயலுக்குத் தகுந்த தண்டனை ஏற்பட்டுவிட்டது. பெண் இனிமேல் பயமில்லாமல் இருக்கலாம்.

ராஜலக்ஷ்மி விளக்கை ஏற்றிக் கொண்டு வந்து அறையில் வைத்துவிட்டுச் சிறிது நேரம் தயங்கி நின்றாள். ஆனால் ஒன்றும் சொல்லவில்லை. மௌனமாக வெளியே போய் பக்கத்து அறையின் வாசற்படியில் காலடி எடுத்து வைத்தாளோ இல்லையோ, ஏதோ ஒரு கனமான வஸ்து கீழே விழும் சப்தம் கேட்டு மெல்லக் கத்திவிட்டாள். நான் ஓடிப் போய் பார்த்தேன். பெரிய துணி ஒன்றிலிருந்து இரண்டு கைகள் வந்து அவள் கால்களைப் பிடித்துக்கொண்டு தலையை மேலே வைத்துக்கொண்டிருந்தது. ராஜலக்ஷ்மியின் விளக்கு கீழே, விழுந்துவிட்டபொழுதிலும் எரிந்துகொண்டிருந்தது. அதைக் கையில் எடுத்துப் பார்த்ததும் பட்டு ரிப்பனும் அந்தக் கருப்புக்கரைப் புடவையும் கண்ணில் பட்டன.

"மாலதி அல்லவா?" என்றேன்.

"அடி நாசமாய்ப் போகிறவளே. விளக்கு வைத்த நேரத்தில் என்னைத் தொட்டு வைத்து விட்டாயே. இது என்ன இது?" என்றாள் ராஜலக்ஷ்மி.

விளக்கொளியில் நன்றாகப் பார்த்தேன். அவளுடைய தலையில் இருந்த காயத்திலிருந்து மறுபடியும் ரத்தம் வழிந்து ராஜலக்ஷ்மியின் கால்களைச் 'சிவப்பாக்கி இருந்தது. அந்த துர் அதிர்ஷ்டம் பிடித்த பெண் விக்கி விக்கி அழுதுகொண்டிருந்தாள்.

"அம்மா, எனக்கு உயிர்ப் பிச்சை கொடுங்கள்—" என்று ஆரம்பித்தாள்.

இராஜலக்ஷ்மி கடுமையான குரலுடன் "ஏன்? உனக்கு மறுபடியும் என்ன வந்து விட்டது?" என்று கேட்டாள.

அவள் அழுது கொண்டே "நாளைக்குக் காலையிலேயே விசாரணை நடக்குமாம். இன்ஸ்பெக்டர் சாஹேப் சொல்லுகிறார். நடந்தால் ஐந்து வருஷ சிறை தண்டனை கிடைக்குமாம்" என்றாள்.

"குற்றத்திற்குத் தகுந்த தண்டனைதான்" என்றேன் நான்.

"ஜெயில் தண்டனை கிடைக்கட்டுமே, அதனால் உனக்கென்ன?" என்றாள் ராஜலக்ஷ்மி

அப்பொழுது அந்தப் பெண் அழுத அழுகையில் மார்பு பிளந்து விடும்போலிருந்தது.

"பாபு என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். நீங்கள் அந்த மாதிரி சொல்லக்கூடாது தாயே- அவர் சாப்பிடப் போன அன்னத்தைக் கூடச் சாப்பிடவில்லை" என்று சொல்லி மறுபடியும் தலையை மோதிக் கொள்ள ஆரம்பித்தாள்.

"அம்மா, எங்களை இந்தத் தடவைத் தப்பிக்கச் செய்யுங்கள். நாங்கள் எங்கேயாவது வேறு தேசத்திற்குப் போய் பிச்சை எடுத்துப் பிழைத்துக் கொள்கிறோம். இல்லாவிட்டால் நான் உங்களுடைய குளத்தில் விழுந்து உயிர் விட்டு விடுவேன்" என்றாள் மறுபடியும.

திடீரென்று ராஜலக்ஷ்மியின் இரண்டு கண்களிலும் தட தடவென்று கண்ணீர் பெருகலாயிற்று. மாலதியினுடைய அவிழ்ந்துகிடந்த கூந்தலின் மேல் மெதுவாகத் தடவிக் கொடுத்த வண்ணம், உணர்ச்சி மிகுதியால் அடைபட்டுப் போன குரலில் "நல்லது, நல்லது, நீ சும்மா இரு அழாதே. நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்றாள்,

பார்த்தும கொண்டாள்! ராஜலக்ஷ்மியினுடைய பெட்டியிலிருந்து அன்றிரவே இருநூறு ரூபாய் எங்கோ போய் மறைந்தது—அதைச் சொல்லி பிரயோசனமில்லை. ஆனால் மறுநாள் காலை முதல் நவீனனோ மாலதியோ கங்காமாட்டியில் யார் கண்ணிலும் படவில்லை.

(தொடரும்)


## ஹிந்தி ஆசான்

உபாத்தியாயர் உதவியில்லாமல் தமிழ் உச்சரிப்பைக்கொண்டே நாலே வாரத்தில் நல்ல ஹிந்தி பாஷையை சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். விலை 12 அணு. ஒரு காபி அனுப்ப அணு 14 மணியார்டர் செய்யவும்.

**எம். எஸ். ராமுலு கம்பெனி,**
**286, எஸ்பிளனேட், மதராஸ்.**





## கே. சுவாமிநாதன் & கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில், சீக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,

7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.



பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

நவநாகரீகம்

★

# எங்கள் ஊர்

★

காசினி எழுதியது

* * * 'எங்கள் ஊர் என்னமாக மாறி இருக்கிறது தெரியுமோ? சாதாரணமாகவே எங்கள் ஊர்த் தெருக்களில் அதிக ஜன நடமாட்டம் இருக்காது! அதுவும் மத்யானம் ஆகிவிட்டால் தெருக்கள் நிசப்தமாகவே இருக்கும்! இப்போ, நவீன முறையில் தைக்கப்பட்ட பல அழகிய வர்ணங்களில் உடை உடுத்த குழந்தைகள். தெருக்களில் சதா காலமும் கூச்சலிட்டுக் கூத்தாடுகின்றன. புதிய, புதிய தினுசில் நகைகள் போட்டு, மனதைக் கொள்ளை கொள்ளும் மோஸ்தர்களில் புடவை கட்டி, பல நேர்த்தியான தினுசுகளில் வெட்டித் தைக்கப்பட்ட சட்டைகள் போட்டு சிங்காரம் செய்து கொண்டிருக்கும் இவர்களுடைய தாய்மார்களும், தமக்கைகளும், "வெய்யிலில் போகாதே! தலையை வலிக்கப்போகிறது!" என்றும், 'புழுதியில் ஆடாதே! சிறங்கு வரப்போகிறது!" என்றும் இவர்களை உள்ளே இழுத்துச் செல்லுகிறார்கள்!

எங்கள் ஊர் வாய்க்காலில் இவர்கள் பிள்ளைகள் குளித்த வண்ணமாக இருக்கிறார்கள்! ஓடும் தண்ணீரைக் கண்டால் இவர்களுக்குத்தான் என்ன ஆனந்தம் உண்டாகிறது தெரியுமா? நீஞ்சத் தெரியாத இரண்டு பையன்கள். தண்ணீரைக் கண்ட ஆனந்தத்தில், தலைகால் புரியாமல், சட்டென்று இறங்கி விட்டார்கள்! நல்ல வேளையாக என் மருமானும் அந்த இடத்தில் தெய்வாதீனமாகக் குளிக்கப் போயிருந்தான்! இரண்டையும் கர கர என்று வெளியே இழுத்து, வந்த கோபத்தில் முதுகில் இரண்டு அரையும் வைத்து விட்டான்! இப்போ, அவனுக்கு இந்தப் பட்டண வாசத்து பிள்ளைகளுக்கு நீந்தக் கத்துக் கொடுப்பதே முக்கிய வேலையாக இருக்கிறது.

இதை எல்லாம் படித்துவிட்டு எங்கள் ஊர் தேவலோகம் போல இருக்கு என்று நினைத்து விடாதே! பார்வைக்கு அப்படி இருந்தாலும், அந்தக் காமதேனுவும், கற்பக வ்ருக்ஷமும் இல்லாதது ரொம்பவும் குறையாகத்தான் இருக்கிறது! கடையில் சாமான்கள் கிடைப்பது அரிதாகி விட்டது! காய்கறிக்குப் பஞ்சம் ஏற்பட்டு விட்டது! பாலுக்கு ஆலாகத்தான் பறக்கணம் போயிருக்கிறது! என்றெல்லாம் உங்கள் ஊரை வர்ணித்து நீ எழுதுகிறாய்!

எங்கள் ஊர் எப்படி இருக்கிறது தெரியுமா? நேற்று மாலை லேடி சின்னையாவின் மகன் தன் தங்கையையும் அழைத்துக் கொண்டு எங்காத்துக்கு வந்தான். அவளைக் கண்டதும் 'நீங்கள் இன்னும் உங்கள் கிராமத்துக்குப் போகவில்லையா? அம்மா அன்னிக்கே எல்லாரையும் கூட்டிக்கொண்டு போகப் போவதாகச் சொன்னாளே?' என்று கேட்டேன்.

'நான் போகவில்லை; மன்னியும் அம்மாவுமாகக் குழந்தைகளைப் பார்த்துப்பா? நான் எங்க ஆத்துக்காரர். அண்ணா இவர்களைப் பார்த்துக்கொண்டு இங்கே தான் இருக்கப் போறேன். வேலையாள்கள் ஓடிவிட்டார்கள்! ஹோட்டல்கள் சரியாக இல்லை; சமைத்துப்போட வேண்டாமோ? என்றாள்.

'ஆனால் உங்காத்திலே சமையல் ஆள் இல்லையா?' என்றேன்.

'ஒருத்தன் இருக்கான். அவனும் இதோ போயிடுரேன் என்று நோட்டீஸ் கொடுத்த வண்ணமாக இருக்கிறான்!' என்றாள்.

'நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாச்சு; இவள் ஒருத்தி இங்கே இருப்பது எனக்கு தர்ம சங்கடமாக இருக்கு! வாசலிலே, வெளியிலே போனால், அவர் ஆபீசிலிருந்துவர சாயங்காலம் ஆகுமே? நீயும் வெளியே போய்விட்டால், நான் தனியே இருக்கணுமே?' என்று என் பிராணனை வாங்குகிறாள்!" என்று அவள் அண்ணன் முறையிட்டான்.

'உங்கள் இரண்டு பேரையும் விட்டுப்போக எனக்கு மனசு வரமாட்டேன் என்கிறதே!' என்றாள்.

'இந்தா! இந்த இரண்டு பேர் கதை எல்லாம் வேண்டாம். இவள் அகமுடையானுக்கு ஊரை விட்டு நகர முடியாது! போனால் வேலையும் கூடவே சொல்லிக்காமல் போய் விடும்! அவனை விட்டு விட்டுப் போக இவளுக்கு மனசு ஆகவில்லை; பிடிவாதமும் கூட! தேமேன்னு உன் மன்னி, நான் சொன்னதைக் கேட்டுக் கொண்டு போகவில்லையோ? அப்புறம் எனக்காக இருக்கேன் என்று பேச்சு வேறயா? என்றான்.

'சண்டை வேண்டாம்! இப்போ சும்மாத்தான் போது போகாமல் இங்கே வந்தீர்களா? ஏதாவது விசேஷம் உண்டோ?' என்றேன்.

போது போகவில்லை; இப்படிப் பட்டணம் பக்கம் போய்ப் பர்த்துவிட்டு வரலாமே என்று வந்ததாகச் சொன்னார்கள். நானும் போனேன். எப்பொழுதும் ஜே. ஜே என்று கூட்டமாக இருக்கும் எங்கள் ஊரில் வீடுகள், கடைகள் எல்லாம் பூட்டப்பட்டு, நீர்மானுஷ்யமாகக் காட்டிற்று! ஆனால், தெருவில் வண்டிகள் சில போய்க் கொண்டுதான் இருந்தன. துருப்பு வண்டிகள். ஏ. ஆர். பி. வண்டிகள் தான் அதிகமாகச் சென்றன. ஒன்றிரண்டு ஹோட்டல்கள் தான் திறந்திருந்தன. வரிசையாகப் பூட்டிக் கிடக்கும் கடைத் தெருவைப் பார்க்க எப்படியோ இருந்தது. புதிய காட்சி ஒன்று, தெரு ஓரங்களில் கட்டி இருக்கும் குகை போன்ற அடைக்கல ஸ்தலங்கள், விமானத் தாக்குதல் ஏற்படும் காலத்தில் இதற்குள் புகுந்து கொள்ள வேண்டும். தற்சமயம் எங்கள் ஊர் ஒரு வரண்ட நதி போல் தான் தோன்றுகிறது!

'நீங்கள் ஏன் இன்னும் இங்கே இருக்கிறீர்கள்?" என்று லேடி சின்னையாவின் மகள் கேட்டாள்,

'உன் காரணம் தான் எனக்கும். மேலும், இப்படி, ஓடுவதில் தான் என்ன பிரயோஜனம் என்றேன், நவீன நாகரீகம் முதிர்ச்சி அடைந்ததின் பயன் தான், இப்படிப் பட்டணம் காலி ஆகி, கிராமங்கள் ஜனத் தொகையைத் தாங்க மாட்டாமல் தவிக்கும்படி ஆகிறது; என் அத்தை சொல்வது போல், எல்லாம் ஈசன் செயல், திருவுளக் கருத்தை யாரால் அறிய முடியும். ஆகிறது ஆகத் தான் போகிறது!' என்று நான் தீர்மானமாகத்தான் இருக்கிறேன். ஆனதினால், எங்கள் ஊருக்கு நீயும் வந்து விடுவேன்!' என்று தினம் ஒரு கடிதம் எழுதுவதில் பிரயோசனமே இல்லை. ஆனால் ஒன்று, இந்த திட சித்தம் குழந்தைகள் விஷயத்தில் எனக்கு ஏற்படத் தான் இல்லை: அவர்களை என் அத்தையுடன் எங்கள் சொந்த கிராமத்துக்கு அதாவது என் அத்தையின் புக்காத்துக்கு அனுப்பி விட்டேன். அதிக ஜனத் தொகை இருப்பதினால் உங்கள் ஊரிலும், இது இல்லாததினால் எங்கள் ஊரிலும் சாமான்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அதிவிருஷ்டி, அனாவிருஷ்டி இரண்டும் கெடுதல். நடு முறையே மேலானது என்பதந்தச் சிறந்த அத்தாக்ஷியாகும் என்று நிதானக் கக்ஷியார் கூறுவதற்கு ஒரு முகாந்திரமாகும் என்று லேடி சின்னையாவின் மகன் சொல்லுகிறான்: மற்றைய விவரங்கள் அடுத்த கடிதத்தில்,

## பிரிட்டிஷ் ராணுவத்திற்குப் பயிற்சி



பிரிட்டிஷ் ராணுவத்தினருக்கு இப்போது நல்ல பயிற்சி அளிக்கப்படடு வருகிறது. எதிரியை எப்படியாவது விரட்டித் துரத்த வேண்டும் என்ற உற்சாகம் அவர்களுக்குள் உதயமாகும்படிச் செய்யப்படுகிறது. இந்த ராணுவத்தினர் எந்த வேலையையும் மேற்கொள்ளவும் எந்த இடத்திலும் தங்கியிருக்கவும் தயாராயிருக்கவேண்டும். ஒரு செங்குத்தான மலைச் சரிவின் மீது அவர்கள் ஏறிச்செல்வதை படத்தில் பார்க்கலாம்.




### ஆபரேஷனுக்குப்

பிறகும் அதிர்ச்சிக்குப் பிறகும், விபத்துக்குப் பிறகும் மயிர் உதிர்வதுண்டு. நீடித்த ரோகங்களாலும், பிரஸவத்தாலும், ஜுரங்களாலும் கூந்தல் நஷ்டமடைவதுண்டு. மயிர் விடாமல் உதிர்ந்து வந்தால் கேசத்துக்குப் பதில் அடித்தலையே புலப்படும்.

எந்தக்காரணத்தால் உதிர்ந்தாலும், கேசவர்த்தினியைக் கொண்டு மயிர் உதிர்வதை நிறுத்துங்கள். இழந்த கூந்தலுக்குப் பதில் இளம் புதுக் கூந்தலை வளரச் செய்யுங்கள். இருக்கும் கூந்தலை இழக்காமல் காப்பாற்றிக்கொள்ளுங்கள்.

### கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது விலை அணா 12; மேற்செலவு வேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயன சாலை,
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

IMMEDIATE VASHIKARAN

On contract basis we undertake to influence or subjugate like spellbound any one or more persons (male or female) instantly and surely cause them entirely at your own grasp quite easily. Particulars against Stamps. SANTI ASRAM, Dacca (Bengal)




சிறுவர் பகுதி

★

# கீரிக்குத் தங்க நிறம் வந்தது

★

கே. ஜி. கே.

முன்னொரு காலத்தில் வாஸுதேவன் என்றொரு பிராம்மணர் இருந்தார். அவர் நற்குணமுள்ளவராந்தர். அவர் பரம ஏழை. தினமும் உஞ்ஜ வ்ருத்தி எடுத்து வந்த அரிசியைக்கொண்டு வந்துதான் அவரது குடும்பம் சாப்பிட்டாக வேண்டும். அவர்கொண்டு வந்த அரிசியைச் சமைத்து, பர்த்தாவுக்கும் பிள்ளைக்கும் இட்டு மிகுந்ததைத்தான் உண்பாள் பிராம்மணரின் மனைவி. அநேக நாட்கள் அந்தம்மாள் ஒரு வேளையுண்டு ஒரு வேளை பட்டினியாகவே படுத்துக்கொள்ளும்படி இருக்கும். அப்படியிருந்தும் அந்தப் பிராம்மணரோ, அந்தம்மாளோ வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டது கிடையாது. யாவும் ஆண்டவனருள் என்றே எண்ணிய அவர்கள் பிள்ளைக்கு விவாகமும் செய்து வைத்தனர். ஆகவே அவர்கள், மூன்று பேர் ஆகாரத்தை நால்வரும் பங்கு கொள்ளும்படியாயிற்று. வந்த மருமகளும் இருக்கும் நிலையுணர்ந்து முகம் கோணாது சாந்த சீலியாகவே விளங்கினாள்.

காலம் செல்ல ஒரு சமயத்தில் அங்கு கொடிய பஞ்சம் ஏற்பட்டு ஜனங்களெல்லாம் கஷ்டப்பட்டனர். என்றுமே பஞ்சையாகவுள்ள ஏழைப் பிராமணனவாஸுதேவரின் வீட்டில் பஞ்சத்தின் கோரக் காக்ஷியைக் கூறவும் வேண்டுமா? பாவம், அவர்கள் உணவருந்தி இருபது நாட்களாகிவிட்டன. அவ்வீட்டிலுள்ள நான்கு ஜீவன்களும் பட்டினியினால் ஜீவனற்றவர் போலவே ஆனார்கள்.

அச்சமயத்தில் வாஸுதேவரின் மகனுக்கு ஒரு ஆழாக்கு நொய் கிடைத்தது. நொய் கிடைக்கப் பெற்ற மகன் "ஆண்டவனே, நொய்க் கஞ்சி அருந்தி நாங்கள் பிழைக்க வழி செய்தீர்!" என்று சந்தோஷமடைந்தவனாய் தட்டித்தள்ளாடி வீட்டை அடைந்து சுருண்டு படுத்திருக்கும் தாயருகில் நொய்யை வைத்து



"அம்மா! நீங்கள் பிழைப்பீர்கள். இன்று நமக்கு ஆண்டவன் படியளந்துள்ளார்" என்று சொன்னான்.

மகன் சொன்ன விஷயத்தைக் கேட்ட தாய் சந்தோஷப் பட்டாலும் எழுந்திருக்கவும் சக்தியற்றிருந்தபடியால், சிறியவளான மருமகள் சற்று திடமுடனிருந்தால் மருமகள் எழுந்து நொய்யைக் கஞ்சியாக்கி ஆண்டவனுக்கு நிவேதனம் செய்து நால்வருக்கும் பகிர்ந்து வைத்தாள்.

அன்று அவர்கள் அவ்வுணவை அருந்தாது போனால் கட்டாயம் நால்வரும் இறக்க வேண்டியவர்களே. அப்படியிருக்க என்னே கடவுளின் சோதனை?

ஆக்கப் பொருத்தவை ஆறவும் பொருக்காதவர்களாய், நடுங்கும் கைகளால் அந்நான்கு ஜீவன்களும் கஞ்சிக் கலயத்தைக் கையில் தூக்கிக் கொண்டனர்.

அதே சமயத்தில் குடிசையின் கதவைத் திறந்து கொண்டு ஒரு தொண்டுக் கிழவனார் வந்து நின்று "ஐயோ, பசி பிராணன் போகிறதே, பிராணன் தரிக்க துளி உணவு அளிக்கும் புண்ணியவான் ஒருவருமில்லையா?" என்று பிரலாபித்தார்.

அந்த அபயக் குரலைக் கேட்ட நால்வரும் ஒரு க்ஷணம் ப்ரமையடைந்தாலும் மறு க்ஷணமே அவர்களது வாயாகவே "வாருங்கள்" என்று உபசரித்தன. உடனே மருமகன் பர்த்தாவிடம் "ஸ்வாமி, எனது பங்கு கஞ்சியை அதிதிக்குக் கொடுத்து உபசரியுங்கள். அதனால் நான் இறந்தாலும் எனக்கு சுக்ருத முண்டாவதுடன், குடும்பத்திற்கும் ஹானி ஒன்றும் நேராது. தாங்கள் மறு முறை விவாகம் செய்துகொண்டு வம்ச வ்ருத்தி செய்யலாம்" என்று பணிவுடன் கூறினாள். அதைக் கேட்ட மகன் "பேதாய், நீ உத்தமியாதலால் அவ்விதம் கூறுகிறாய், ஆனால் நீ பிறர் வீட்டுப் பெண்ணாகையால் நீ ஒப்பினாலும் உனது வீட்டார் நாங்கள் இருந்தும் உன்னைப் பட்டினிபோட்டுக் கொன்ற தாய் அபவாதம் கூறுவார்கள். ஆகவே அது கூடாது. மகனான எனது கடமையை சரிவரச்செய்ய வேண்டுமானால் நான் தான் அதிதியை உபசரிக்க வேண்டும். ஆகவேஎனது உணவை அவர் சாப்பிடட்டும்" என்று கூறினான்.

உடனே கிழவி "அடே அப்பா! நீ சின்னம் சிறுவன். எங்களது ஈமக்கடனைச் செய்ய வேண்டிய நீ இருப்பது அவச்யம், நான் கிழவி. வேண்டிய நான் வாழ்ந்தாயிற்று. நான் இனி இருப்பதும், இறப்பதும் ஒன்று தான். ஆகவே அதிதி எனது உணவை அருந்தட்டும்" என்றாள்.

உடனே வாஸுதேவர் "அப்பா! வீட்டுக்குஎஜமானன பெரியவன் நான் தான். நான் அதிதியை உபசரிக்க வேண்டியது கடமை. ஆகவே எனது உணவை அவரிடம் எடுத்துக் கொடு" என்றார்.

உடனே மகன் தந்தையின் உணவை கிழவரிடம் கொடுக்க, கிழவர் அதை அருந்தி "ஐயோ, இது வாய் நனைவதற்குக் கூட இல்லையே" என்றார்.

அதைக் கேட்ட கிழவி தனது பங்கைக் கொடுக்க, வந்த அதிதி அதையும் பருகி போதாதென, மகனும் தனது பங்கைக் கொடுக்க, அதுவும் த்ருப்தி இல்லையென்று அதிதி சொல்ல, மருமகளும் தனது பங்கை வந்த கிழவருக்கு ஈந்தாள். நால்வரது பாகத்தையும் வாங்கிச் சாப்பிட்ட விருந்தாளியோ அப்போழுதும் 'உம், கால் வயிற்றுக்குக் கூடப் போதாதஉபசரிப்பு' என்று இகழ்ந்தே உரைத்தார். அவ்வசனத்தைக் கேட்ட நால்வரும் "ஐயோ, நமக்கில்லாவிட்



டாலும் தள்ளாத கிழவரான அவருக்காவது வயிறு நிரம்ப உணவளிக்க நம்மிடமில்லாது போய் விட்டதே" என்று துக்கித்தனர். பிறகு மருமகள் பானையிலிருந்த தண்ணீரை எடுத்துவிட்டு கஞ்சி சாப்பிட்ட கலயங்களைக் கழுவி வைத்தாள். அப்படிக்கழுவின தண்ணீர் குடிசையின் ஓரமாய்ச் சென்று தேங்கிற்று.

மேற்படி அதிசயமான சம்பவத்தைக்காண சாக்ஷாத் தர்மதேவதையே கீரிப்பிள்ளை உருக்கொண்டு அவ்விடம் (அதாவது கலயம் கழுவின தண்ணீர் வருமிடத்தில்) வந்திருந்தபடியால், அத் தண்ணீர் கீரிப்பிள்ளையின்மேல் பட்டவுடன் கீரிப்பிள்ளையின் உடம்பு தங்க நிறமாக பளபள வென்று மின்ன ஆரம்பித்துவிட்டது. அதைக் கண்ட தர்மராஜனும், தர்மராஜனை உணர்ந்து கொண்ட வந்த அதிதி கிழவரான பகவானும் ஒரே சமயத்தில் "ஆகா, என்னே அன்னதானத்தின் மகிமை! லோகத்தில் இப் பேர்ப்பட்ட அதிசயப்படும்படியான த்யாகம்கூட இருக்கிறதே! என்று எண்ணி வியந்தனர்.

ஹிந்திக்கதை

# உள்ளத்தின் தாகம்

★ கௌரி சங்கர வர்மா எழுதியது

**தா**ன் குழந்தையாக எடுத்து விளையாடிய ராஜகுமாரன் ஆனந்தன் இன்று வாலிபனாகத் தன் எதிரில் வருவதைக் கண்டு மாலதியின் உள்ளம் உவகையால் நிரம்பியது. அவள் ஆனந்தனைப் பார்த்து ஆனந்தத்தில் மூழ்கினாள், அவளுக்கு ஏதோ ஒரு நிதி கிடைத்ததைப் போல! வீரஸேனாபதி நிர்பயஸிம்மனுடைய ஆனந்தத்திற்கும் அளவில்லை. மாலதி தன் மனத்திற்குள் கமலாவுக்குத் தகுந்த கணவன் ஆனந்தன் தான் என்று தீர்மானித்தாள்.

ராஜகுமாரன் ஆனந்தனுக்கும் அவனுடைய கூட்டாளிகளுக்கும் வேண்டிய உபசாரங்கள் நடந்தன. இரண்டு நாட்கள் வரை ஆனந்தன் அங்கு அதிதியாக இருந்தான். ஆயினும் இந்த இரண்டு நாட்களிலும் கூட கமலாவை ஆண் பெண்ணென்று அவனால் அறிந்து கொள்ள முடியவில்லை. அவளும் இவன் எதிரில் அதிகமாக வரவில்லை. அவள் உள்ளத்தில் காதல் தீ தகித்துக்கொண்டிருந்தது. அவள் தூரத்திலிருந்தே தன் அதிதியைத் தரிசித்து அவன் அழகின் மதுரத்தேன் கொண்டு தன் காதல் தீயைத் தணிக்க முயன்றுகொண்டிருந்தாள்.

இதன் மத்தியில் தந்தை திடீரென்று இறந்தார் என்ற செய்தி கேட்டு ஆனந்தன் தன் வீரர்களுடன் ராஜ்யத்திற்குத் திரும்பினான். தந்தைக்குச்செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து முடித்து விட்டு ஒரு நாள் தன் தாயிடம் கமலா, மாலதி, வீரஸேனாபதிமுதலியவர்களின் விஷயத்தைக் கூறினான். ராணியும் அவர்களைசந்திக்கஇணங்கினாள்.

ராஜகுமாரன் விடை பெற்றுக் கொண்டு சென்ற பிறகு கமலாவின் விளையாட்டு, வேட்டை எல்லாம் நின்றுவிட்டன. அவளுக்குச் சந்தோஷமே இல்லை: அவள் உலகமே இருண்டதைப் போல் ஆகிவிட்டது. கமலம் போன்ற அவள் முகம் வாடியது. அவள் மனோ நிலைமையை தாய் அறிந்து கொண்டாள். ஆனந்தன் அவள் ஆனந்தத்தைக் கொண்டுபோய் விட்டான்!

**மா**லதியையும் கமலாவையும் அழைத்து வர மஹாராணி இரண்டு தூதர்களை அனுப்பினாள்.

"நம்மை அவமானம் செய்தவர்களுடைய ராஜ்யத்தில் கால் எடுத்து வைப்பதை விட இறப்பது மேல்." என்றார் வீரசேனாபதி.

மாலதி மௌனமானாள்.

தூதர்களுடன் வந்த தாதியும் மோஹனபுரம் திரும்பினாள்.

மகனின் வற்புறுத்தலின் பேரிலும், தன் சொந்த விருப்பத்தினாலும் மஹாராணி தானே நேரில் ரத்னபுரம் சென்று வர இணங்கினாள். மறுநாள் அதி காலையில் ஐந்து டோலிகள் புறப்பட்டன. ரத்னபுரத்தை நோக்கி ஒன்றில் மஹாராணியும், மற்றவைகளில் அரண்மனையிலுள்ள இதர ஸ்த்ரீகளும். டோலிகளுக்கு முன்னும் பின்னும் ஆயுதமணிந்த வீரர்கள் சென்றார்கள்.

சூரியன் அஸ்தமனமானான். மணல் பிரதேசம், நாற்புறமும் அமைதி நிலவியது. இளங்காற்று வீசியது. டோலி தூக்குபவர்கள் பாட்டுப் பாடிக்கொண்டே சென்றார்கள். ஸந்தியாதேவி வரும் நேரத்திற்கு ராணியும் ரத்னபுரத்திற்கு வந்து சேர்ந்தாள்.

மாலதி அவளை மனப்பூர்வமாக வரவேற்றாள். வீரசேனாபதி நிர்பயஸிம்மனும், பீல்களின் தலைவன் மோதியும் இன்னும் ஏனையோரும் வந்திருந்தனர்.

பீல் தலைவனின் கட்டளைப்படி பீல்களின் நடனம் நடந்தது.

"கமல் எங்கே, மாலதி?" போஜனத்திற்குப் பிறகு மஹாராணி கேட்டாள். "அவனைப்பற்றிய பெருமைகளை எல்லாம் கேள்விப்பட்டேன்!"

இதற்குள் வந்துவிட்டாள். ஒரு கையில் ஒரு புலிக் குட்டியுடனும் மற்றொரு கையில் ஈட்டியுடனும் கமலா வந்து சேர்ந்தாள் புருஷ வேஷத்துடன்.

"மாலதி, இவன்தான் கமலனா? என்னுடைய—உன்னுடைய அருமை மகன். இந்த வீர யுவனைப் பார்த்து எனக்கு மிக்க சந்தோஷம்! கடவுள் உனக்கு நன்மை செய்யட்டும்!" என்று மஹாராணி கமலாவுக்கு ஆசீர்வாதம் செய்துவிட்டு, இதர ஸ்த்ரீகளுடன் பேசலானாள்.

**க**மலா தன் தாயெதிரில் நின்றிருந்தாள். மற்ற ஸ்த்ரீகள் அவள் பக்கம் பார்த்துக்கொண்டே மனதிற்குள் மாலதியின் பாக்கியத்தை புகழ்ந்தனர்.

"மஹாராணி! என் மகனல்ல! என் மகள் இவள். இவளுடைய உண்மைப் பெயர் கமலம்." என்று புன் சிரிப்புடன் சொன்னாள். மாலதி—நிசப்தத்தைக் குலைத்து.

"மாலதி, இவள் உன் மகளா!" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் ராணி—கனவு கண்டவளைப்போல,

"ஆமாம்! மஹாராணி!"

மஹாராணியும் இதர ஸ்த்ரீகளும் கமலாவை ஆச்சரியத்துடன் பார்க்கலாயினர். கமலா வெட்கத்துடன் அவ்விடம் விட்டகன்றாள்.

கமலாவின் அழகையும், ஸரளமான ஸ்வபாவத்தையும், வீரத்தையும் கண்டு ராணி அவள் மீது மிக்கப் பிரியம் கொண்டாள்.

"மாலதி! விடை பெற்றுக் கொள்ளுமுன் உன்னிடம் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன்!"

"என்ன மஹாராணி?"

"உன்னுடைய மகள் கமலாவும் என் மகன் ஆனந்தனும் விவாக பந்தத்தால் கட்டப்பட்டு இன்ப உலகைத் தோற்றுவிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்,"

"இதைவிட எனக்கு வேறு பாக்கியம் என்ன வேண்டும்?"

"இந்த ஒப்புவமையற்ற ப்ரேம பந்தனத்தால் நமது மனக் கசப்புகளும் அகன்று விடும்!"

"சந்தேகமில்லாமல்!"

"அப்படியானால், இது உனக்குச் சம்மதம் தானா?"

மாலதியும் இதைத் தான் விரும்பினாள். "ஆமாம்! மனப்பூர்வமாய்!" என்றாள் அவள்.

"வீர ஸேனாபதி நிர்ப்பய ஸிம்மர்!"

"அவரை நான் வேண்டிக் கொள்கிறேன்!"

"சரி! கமலாவைப் போன்ற ரூபமும் குணமும் உள்ள நாட்டுப் பெண்ணை அடைந்து என் அரண்மனை இந்திரலோகமாக விளங்கும்!" என்றாள் ராணி.

ராணி தன் பரிவாரங்களுடன் மோஹனபுரம் திரும்பினாள்.

தாயும் மகாராணியும் சேர்ந்து செய்த தீர்மானத்தைக் கேட்டு கமலா சந்தோஷத்தில் ஆழ்ந்தாள். தன் மனோரதம், தன்னுடைய நெடுநாளைய அபிலாஷை—சீக்கிரத்தில் பூர்த்தியாகும் என்று எண்ணி மகிழ்ந்தாள்.

* * * *

"**உ**னக்குப் பைத்தியமா என்ன? அந்த வம்சத்தில் நமது பெண்ணைக் கொடுப்பதைவிட அவளை இரு துண்டாக வெட்டிப் போடுவதுமேல்" என்று கம்பீரமாகக் கூறினார் வீரஸேனாபதி நிர்பயஸிம்மன்.

கணவனிடம் எதிர்வாதம் செய்யும் வழக்கம் மாலதியிடம் இல்லை. பேசாமல் இருப்பதைத் தவிர அவளுக்கு வேறு வழி ஒன்றும் இல்லை. நிமிஷத்திற்குள் விஷயம் மண்ணோடு மண்ணாயிற்று. அவளுடைய மனக் கோட்டை தூள் தூளாயிற்று.

தந்தையின் பதிலைக்கேட்டு கமலாவின் ஹ்ருதயம் விண்டு விடும்போல் ஆகிவிட்டது. அவள் இதய வீணையின் தந்தி அறுந்தது.

* * * *

"**ஆ**னந்தா! கமல் மாலதியின் மகனல்ல. மகள்!" என்றாள் மஹாராணி.

"மகளா?" என்று ஆச்சரியத்துடன்கேட்டான் ராஜகுமாரன்.

"ஆமாம்! அவளுடைய உண்மை பெயர் கமலம்!"

"ஓஹோ! கமலாவா?"

"அவளை நாட்டுப் பெண்ணாக ஏற்றுக்கொள்ளுகிறேன் என்று அவர்களுக்கு வாக்குக்கொடுத்து விட்டு வந்திருக்கிறேன்" என்று சிரித்துக்கொண்டே சொன்னாள் மஹா ராணி.

ராஜகுமாரன் தாயை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தான்-மௌனமாக.

"என்ன யோசிக்கிறாய், ஆனந்தா?..........கமலாவைப்போன்ற ரூபமும் குணமும் உள்ள பெண்ணை மணந்தால் உன் வாழ்க்கை சுகமடையும்!...... ஆனந்தா! ஏன் மௌனமாக இருக்கிறாய்?"

"இல்லை அம்மா, எனக்கு அவளை மணம் செய்துகொள்ள

" என் அன்பே! உங்களையா இந்த நிலைமையில் காண்கிறேன்! "—கமலா இவ்விதம் வீறிட்டுக்கொண்டே ஓர் புறம் சாய்ந்தாள். ராஜகுமாரன் கண்களைத் திறந்து பார்த்தான். அவனைக்காப்பாற்றியவள் ஒரு வீர ரமணி. "யார்? கமலா?"—அவன் வாயிலிருந்து அநாயாசமாக இந்த வார்த்தை வெளி வந்தது. கணத்திற்குள் அவன் கமலாவின் அதரங்களின் முத்தமிட்டான்; அவள் அதரங்களில் புன்னகை தவிழ்ந்தது: அவள் உள்ளத்தின் தாகம் தீர்ந்தது—இந்த சம்பவங்களை யெல்லாம் இவ்வாரம் முடிவுபெறும் இந்த ரஸமான கதையில் படிப்பீர்கள்.

* * * * *

மொழிபெயர்த்தவர் — அ. கி. ஜயராமன்



இஷ்டம் இல்லை." சிறிது நேரம் யோசித்து விட்டு இவ்விதம் சொன்னான் ஆனந்தன்.

"ஏன்?" பயத்துடன் கேட்டாள் ராணி.

"வனம், காடு, மலை, குகை இவைகளில் சுற்றித் திரியும் பெண்ணை மனைவியாக ஏற்றுக் கொள்ள எனக்கு இஷ்டமில்லை,"

"இருக்கட்டும்! அவள் அழகின் தேவி!"

"எனக்கு இஷ்டமில்லை." என்று சொல்லி விட்டு ஆனந்தன் வெளியே சென்றுவிட்டான்.

**ம**ஹாராணியின் ஆசைக் கொடி அறுந்தது. ஆனந்தன் தன்னுடைய முடிவில் உறுதியாக இருந்தான்.

மாலதி என்ன செய்வாள்? கணவனைச் சம்மதிக்கச்செய்ய முடியவில்லை. மஹாராணியால் மகனைச் சம்மதிக்கச் செய்ய முடியவில்லை.

ராஜகுமாரரின் பதிலை அறிந்து மாலதிக்குக் கொஞ்ச நஞ்சம் இருந்த நம்பிக்கையும் போய் விட்டது. கமலா காதல் தீயினால் தகிக்கப்பட்டு வந்தாள்.

நான்கு வருஷங்கள் சென்றன.

வீரஸேனாபதிநிர்ப்பயஸிம்மன் விருத்தாப்பியமடைந்தார்.சிறிது நாட்கள் நோய் வாய்பட்டிருந்த பிறகு ஒரு நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். கமலாவும் மாலதியும் தனிமையானார்கள்.

கமலாமுன்னைப்போல் இல்லை: அவளிடம் சில புதிய மாறுதல்கள் காணப்பட்டன. இந்த நான்கு வருஷங்களில் அவளுடைய ஒப்புயர்வற்ற அழகு மறைந்தது. அவள் மெலிந்து போனாள்.

ராஜ குமாரன் தன் தீர்மானத்தில் உறுதியாக இருந்தான். இதை யறிந்த மாலதி கமலாவை வேறு இடத்தில் விவாகம் செய்து கொடுக்க எண்ணினாள்.

"நான் ஆயுள் வரை கன்னிப் பெண்ணாகவே இருக்கப் போகிறேன்!" என்று கமலாபிரதிக்ஞை செய்து விட்டாள். புருஷஜாதியிடம் ஏற்பட்ட வெறுப்பினால் பிறகு அவள் ஆண் வேஷம் தரிப்பதையும் விட்டுவிட்டாள்.

* * * *

**நி**சப்தமான கோர இரவு. ஜன சந்தடியற்ற வனம். களைப்படைந்த கமலா குதிரையை விட்டுக் கீழே இறங்கினாள். அருகே மரக்கிளையில் குதிரையைக் கட்டிவிட்டு சற்று சிரமபரிகாரம் செய்து கொள்ளுவோம் என்று அந்த மரத்தடியில் அமர்ந்தாள்.

கருநாகத்தைப் போல் உள்ள அவள் கேசபாரம் காற்றில் மிதந்து கொண்டிருந்தது.

சந்திரிகை ஒளி அவள் முகத்தில் வீசி அவள் அழகை மிகைப் படுத்தியது.

அவள் தன் மனதை வேண்டிக் கொண்டு "பாழும் மனமே, வீணே ஏன் வாடுகிறாய்?" என்று பாடிக்கொண்டிருந்தாள். அவளை அறியாமல் அவள் கண்கள் கண்ணீரைச் சொறிந்தன.

அதே சமயம் அவளுடைய குதிரை கனைத்தது. காய்ந்த சருகுகளின் சலசலப்பு. சிறிது தூரத்தில் வாள்கள் ஒன்றுடன் உன்று உராயும் சப்தம். ஆஹா! இதென்ன? உள்ளத்தைப் பிளக்கும் வேதனைக் குரல்?

கையில் ஈட்டியுடன் அவள் எழுந்தாள். குதிரை மீதேறியமர்ந்து காற்றைப் போல் அந்த திக்கை நோக்கி விரைந்தாள்.

**ரா**ஜ மந்திரியின் புதல்வன் அருணன் ஆனந்தனுடன் வேட்டைக்கு வந்திருந்தான். பாலியகாலத்திலிருந்தே அவனுக்குப் பொறாமை. நல்ல சந்தர்ப்பம் கிடைத்ததை அவன் பிரயோஜனப் படுத்திக் கொண்டு ராஜகுமாரனைப் பின்னாலிருந்துத் தாக்கி விட்டான்.

எதிர் பாராத விதத்தில் தாக்கப்பட்டதால் ஆனந்தன் காயமடைந்து கீழே விழுந்தான்—ரத்தம் பீறிட்டது.

அந்த துஷ்ட அருணன், காயமடைந்து மூர்ச்சையாகக் கிடக்கும் ராஜகுமாரனின் தலையை கொய்வதற்காக வாளை ஓங்கிக் கொண்டு குனிந்தான். இதற்குள் "நிறுத்து!" என்று உக்கிரமான குரலைக் கேட்டுத் திடுக்கிட்டான். அவன் கைகள் நடுங்கின.

வீராங்கனையான கமலா அங்கே வந்து காயமடைந்த மனிதனை ஒரு முறை பார்த்தாள். விஷயம் பூராவும் அவளுக்கு விளங்கி விட்டது. பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவள் அருணனை ஈட்டியால் தாக்கினாள்.

கீழே விழும் அருணன் மெள்ளச் சமாளித்துக் கொண்டு கமலாவின் பக்கம் திரும்பினான். இதற்குள் கமலா மறுபடியும் ஒரு முறை தாக்கினாள். இருவருக்கும் கடும் போர் நிகழ்ந்தது. அருணனால் கமலாவின் தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை. அவன் மிகுந்த காயமடைந்து குதிரையுடன் ஓட்டம் பிடித்தான்.

**ஓ**டிப் போகும் கோழையைப் பின் தொடர்வதை விடக் காயம் பட்டவனுக்குச் சேவை செய்வது அவசியம் என்று எண்ணி கமலா குதிரையினின்றும் கீழே குதித்தாள்.

பாதி மூர்ச்சையடைந்த அவனிடம் மண்டியிட்டு உட்கார்ந்து அவன் தலையைத் தன் மடியில் எடுத்து வைத்துக் கொண்டாள்.

அவள் பார்த்தாள். அவனுடைய வலது தோளிலிருந்து ரத்தம் பெருகிகொண்டிருந்தது. அவள் சட்டென்று தன் புடவையைக் கிழித்து அதைக் கட்டி ரத்தம் பெருகுவதைத் தடுத்தாள்.

குனிந்து காயம்பட்டுக் கிடப்பது யார் என்று பார்த்தாள் கமலா. ஆனால் மரங்கள் அடர்ந்திருந்ததால் அறிந்துகொள்ள முடியவில்லை, அருகே இருந்த நதியில் புடவைத் தலைப்பை நனைத்துக் கொண்டு வந்து அவன் முகத்தில் தெளித்தாள். இதற்குள் சந்திரனும் மேகங்களிலிருந்து விடுபட்டு மரக்கிளைகள் வழியாக அவன் முகத்தில் ஒளியை வீசினான்.

அவன் தலை கமலாவின் மடியில் இருந்தது. சந்திரன் ஒளி நன்கு வீசியது. குளிர்ந்த ஜலம் முகத்தில் விழுந்ததால் அவன் கண்களைத் திறந்தான். அவன் மூர்ச்சையும் தெளிந்தது.

"நான் எங்கே இருக்கிறேன்?" என்று அவன் நடுங்கும் குரலில் கேட்டான்.

**நி**லவொளியில் பார்த்தாள் கமலா! காயமடைந்து கிடந்தவன் அவள் மனதைக் கொள்ளை கொண்ட ஆனந்தன்!

"என் அன்பே! உங்களையா இந்த நிலைமையில் காண்கிறேன்" கமலா வீறிட்டுக் கத்திக்கொண்டே ஓர் புறம் சாய்ந்தாள்.

**ரா**ஜகுமாரன் கண்களை நன்கு திறந்து பார்த்தான். அவனைக் காப்பாற்றியவள் ஒரு வீரரமணி.

"யார்? கமலா!" அவன் வாயிலிருந்து அநாயாசமாக வார்த்தை வெளி வந்தது. கணத்திற்குள் அவன் கமலாவின் மாதளை மொட்டுப்போன்ற அதரங்களில் முத்தமிட்டான், அவளைத் தன் மார்புடன் அணைத்துக் கொண்டான்.

இனிமையான சந்திரிகை ஒரு மதுரத் தொனியைக் கேட்டது. ராஜகுமாரன் கமலாவின் ரோஜா மலர் போன்ற கன்னங்களில் காதலின் சின்னங்களைப் பதிய வைத்தான். சந்திரன் மெள்ள மெள்ள நகைத்தான்.

கண்களைத் திறந்து ராஜகுமாரனை நோக்கினாள் கமலா. அவள் முகம் பிரகாசமடைந்தது. அவள் அதரங்களில் புன்னகை தவழ்ந்தது. அவள் மனதின் தாகம் தீர்ந்தது.


## பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆரூடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு



அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

## கவலைவேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
புழனி. S. I.

புதிய பதிப்பு! மலிந்த விலை!!

## பாரதி நூல்கள்

(நேர்த்தியான காலிகோ பைண்டு)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | கவிதைகள் | Vol I | ரூ. | 3 | 0 | 0 |
| 2. | வசனங்கள் | Vol II | ,, | 3 | 0 | 0 |
| 3. | கட்டுரைகள் | Vol III | ,, | 3 | 0 | 0 |
| 4. | பகவத்கீதை (காலிகோ) | | ,, | 0 | 8 | 0 |
| 5. | Agni & other Poems & Translations | | ,, | 1 | 0 | 0 |
| 6. | Essays & other Prose Fragments | | ,, | 1 | 0 | 0 |
| 7. | சரித்திரம் | | ,, | 0 | 4 | 0 |

பாரதி பிரசுராலயம்,
567, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

BLACK LOCK& MACARTHUR LTD., GLASGOW




வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளைதான் உயர்ந்தது. வெண்மை மாறாது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டு வரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்க வேண்டிய அவசியமுமிராது. 541 கெக்கின்பேரில் மான் மார்க்கும் இரண்டு ஈசி ஸீல்களும் இருக்கிற கெக்காகப் பார்த்து வாங்குகள். போலிகளை வாங்கி ஏமாறுகீர்கள். செந்தூரத்தில் "மான் மார்க்" செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

Sole Agents:- M.R.V. AIYER & CO., 49, பந்தர் தெரு, மதராஸ்.

அபாரசக்திவாய்ந்தடானிக்!

S.K.M.

Dr. N. V. ஸ்ரீராமாச்சார்லுவின்
—ஸித்தகல்ப—
மகரத்வஜம்

60 மாத்திரை ரூ. 10.
30 மாத்திரை ரூ. 5.

விவரத்திற்கு எழுதவும்:
மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்.,
த, பெ. நெ. 151. (ஸ்தாபனம் 1915ஞு) 289, எஸ்பிளனேட், மதராஸ்.

## "இரு விதம்"

ஆகவே என் வாழ்க்கை இருவிதமாகப் பிரிந்து இருந்தது ஒன்று உண்மையானது, மற்றொன்று பொய்யானது: சில சமயங்களில் என் வாழ்க்கையில் எது உண்மை எது பொய் என்று சம்சயம் எனக்கே ஏற்பட்டு விடும்! காலக்கிரமத்தில் நான் இந்த நிலையை விட்டு விலகிக்கொண்டேனாயினும், இன்னும் மாய உலகில் சஞ்சாரம் புரியும் சக்தி என்னை முற்றிலும் விட்டபாடில்லை; இப்போது கூட ஏதாவது வேலையில் நான் முனைந்திருந்தால், நான் அதில் முழுதும் லயித்துப் போய் விடுவேன். நான் பிரசங்கம் புரியும்போது இம்மாதிரி நேரிடுவதுண்டு, நான் எதைப்பற்றிப் பேசினாலும் அதற்கும் எனக்கும் அந்த சமயத்தில் நல்ல சம்பந்தம் ஏற்படுகிறது: அதாவது நான் எடுத்துக்கொள்ளும் கக்ஷிக்கும் எனக்கும் வித்தியாசம் இருப்பதில்லை.

### ஒத்துழையாமை இயக்கத்தில்

ஒத்துழையாமை இயக்கத்தின் போது நான் முதன் முதலாக பலர் முன்னிலையில் பிரசங்கம் புரிந்தேன். அப்போது காலம் கெட்டிருந்தது: சண்டைச் சச்சரவுகள் செழித்திருந்த சமயம்; அலஹாபாத்தில் நமது தலைவர்களில் பெரும்பாலர் சிறை புகுந்தனர். ஊர்வலங்களை நடத்திச் செல்லவும், கடைகளை மறியல் செய்யவும், பிரசாரம் பண்ணவும் ஸ்திரீகள் ஏராளமாக முன் வந்துகொண்டிருந்தனர். ஒவ்வொரு கூட்டத்திலும் பல காரணங்களை கொடுக்கவேண்டியதாயிற்று. பிரசங்கத்தில் என்ன பேசப்பட்டது என்பதைப்பற்றி ஒருவருக்கும் லக்ஷியமில்லை. ஆனால் அதைச் சொன்னவர் யார் என்பதில் சிரத்தை காட்டப்பட்டது.

### "சிறு வெற்றி"

ஒரு நாள் மாலை ஒரு பெரிய ஊர்வலம் முடிந்ததும் மஹத்தான பொதுக் கூட்டமொன்றில் நான் பேச நேர்ந்தது. மனதில் ஒரு எண்ணமும் கிடையாது: சுற்றி முற்றிப் பார்த்தேன்: ஒருவர் முகமாவது எனக்கு உணர்ச்சியளிக்கும்படியாயில்லை. சங்கடமான நிலைமை: எனக்கும் பயம் பிறந்தது. திடீரென ஒன்று நடந்தது. ஒரு க்ஷணம் தனது முதல் ராஜீயப் பிரசங்கத்தைப் புரிய மிகுந்த பயம் கொள்ளும் ஸ்திரீ போல் இருந்தேன்.—அடுத்த க்ஷணம் என் இளம் பிராயத்தில் என் உள்ளத்தை கொள்ளைகொண்ட கதாநாயகிகள் அனைவரும் சேர்ந்து உருவெடுத்தது போலானேன். என் முன் கூடியிருந்த கும்பலில் நானும் ஒருத்தி என்று திடப்படுத்திக்கொண்டேன். அந்தக் கும்பலும் நானும் கண்ணுக்குப் புலப்படாத ஒரு சக்தியின் அம்சங்கள்: செய்தியை அவர்களிடம் தெரிவிப்பது தீவிர வேறு ஒன்றுமில்லை: இந்த எண்ணம் என்னுள் மேலிட்டது. நான் பின்பு பேசினேன். கூடியிருந்தவர் கை கொட்டினர்: எனக்கு இதில் ஆச்சர்யமே தோன்றவில்லை: ஏற்கெனவே எனது கற்பனை யுலகில் நான் ஆழ்ந்திருக்கும்போது எவ்வளவு ஆரவாரம் எனக்குக் கிடைத்திருக்கிறது: ஆகவே இது எனக்குப் புதிதல்ல, பிரசங்க மேடையை விட்டு கீழே இறங்கும் சமயத்தில்தான் எனக்கு என் சுய உணர்ச்சி வந்தது: இது மானஸீக வெற்றியல்ல: இது மிகவும் நிஜமானது: ஜனங்கள் குதூஹலித்ததற்கு நான் கூறியவற்றை அவர்கள் ஆமோதித்ததே காரணம்: நான் என்ன சொன்னேன் என்பது எனக்குத் தெரியாது: ஆயினும் இந்த சிறு வெற்றியும் எனக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது.

### நான் கண்ட புதிய முறை

இதற்கப்புறம் அடிக்கடி பேசுவதற்கு என்னை அழைத்தனர்: ஆகவே நான் ஒரு புதிய பிரசங்க முறையைத் தயாரித்துக் கொள்வது அவசியமாகியது. அப்போது புதிய புதிய கருத்துகளை வெளியிடுவது சாத்தியமில்லையாயினும், பிரசங்க வன்மையைக் காட்டுவதற்கு அதிக இடமிருந்தது. பிறர் கூறியவற்றைத்தான் நானும் சொல்ல வேண்டுமாதலால், அவற்றைப் புதிய விதத்தில் எடுத்துச் சொல்ல தீர்மானித்தேன். முதன் முதலாக மிகவும் நிதானமாகப் பேச அப்யாசம் பண்ணிக் கொண்டேன். கேட்பவர் என்னுடைய கருத்துகளைக் கிரஹிக்க இது அனுகூலம் பண்ணியது ஒரு புறமிருக்க, பேசிக்கொண்டே போகும்போது வாக்கியங்களை யோசனை பண்ணி அமைக்க எனக்கு இது அவகாசத்தை அளித்தது. இந்த முறை எனக்குப் பிரயோஜனகரமாகியது. பொது ஜனங்களுக்கும் இது தான் தகுந்தது என்பதை நான் கண்டு கொண்டேன். வெகு காலம் நான் இந்த முறையைத்தான் அநுஷ்டித்தேன்.

### பலன் தந்தது

சில வருஷங்களுக்கப்புறம் நான் கத்தியவாரில் தங்கியிருந்தேன். குஜராத்தியில் பேசினால் அதை நான் புரிந்து கொள்வேன்: ஆனால் அந்தப் பாஷையில் எனக்குப் பேசத் தெரியாது. சில பொதுக் கூட்டங்களில் பேசும்படி நான் வேண்டப்பட்ட போது ஒரு புதிய தொந்திரவு என் முன் தலைகாட்டியது. எந்தக் கூட்டத்திலும் கூட்டத்தாருக்குத் தெரியாத பாஷையில் விஷயத்தை விவரிப்பது சுலபமல்ல. முதலில் நான் நம்பிக்கையை இழந்தேன். பிறகு லகுவான ஹிந்தியில் பேசினால், கூட்டத்தார் நான் கூறியவற்றை அறிந்துகொள்ள முடியும் என்பதை நான் பின்னர் தான் கண்டுகொண்டேன். இந்த சமயமும் மிகவும் நிதானமாகப் பேசி நான் பயிற்சி செய்துகொண்டது பலனளித்தது.

### ஒரு கூட்டத்தில்

ஒத்துழையாமை காலத்தில் செய்த இந்தப் பிரசங்கங்கள் காரணமாக எனக்கு பிரசங்கம் பண்ணும் தோரணை புலப்பட்டது. பொதுக் கூட்டங்களில் பேசுவது தவிர வேறு ஒரு காரியத்தை நான் செய்யாத போதிலும், காலக்ரமத்தில் அந்த இயக்கமும் நானும் ஒன்றாகிவிட்டோம், கூட்டத்தார் எப்போதும் என்னை ஆதரித்ததே நான் இதனால் கண்ட லாபம். ஒருவர் கைது செய்யப்பட்டார்; இதை ஆக்ஷேபித்து நடத்தப்பட்ட கூட்டத்தில் என்னையும் பேசும்படி கேட்டுக்கொண்டார்கள். பிரசங்கம் புரிய ஆரம்பித்ததும், கைது செய்யப்பட்டவர் நான் தான் என்று பலர் எண்ணும்படியாகியது: ஆகவே நான் விடுக்கும் வேண்டுகோள் கேட்பவர் ஒவ்வொருவரது உள்ளத்திலும் உணர்ச்சியைக் கிளப்பும்: அவர்களுக்கும் எனக்கும் ஒரு பரஸ்பர பந்தம் இதனால் வலுத்தது.

### என் யோசனை

ஒத்துழையாமை இயக்கம் நின்று விட்டதும், இத்தகைய விதம் பிரசங்கம் புரியும் வழக்கமும் மறைந்தது. பொதுக்கூட்டங்களில் நான் பேசுவதும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது: மாணவர் கூட்டங்களிலும், ஸ்திரீகளின் சங்கங்களிலும் மட்டுமே நான் பேசலானேன். கேட்பவர்களுக்கு ரஸிப்பு ஏற்படவேண்டுமானால், இவ்விரு இடங்களிலும் வெவ்வேறு விதமாகப் பேசவேண்டும். ஸ்திரீகள் சம்பந்தப்பட்ட மட்டில் பல சமூகப்பிரச்னைப்பற்றி பிரஸ்தாபித்து அவர்களிடை சிரத்தையுண்டு பண்ணினேன்; இந்த பிரச்னைகள் விஷயத்தில் அதிகப் படிப்பு தேவையில்லை. மாணவர் முன்னிலையில் பேசவேண்டி வந்தபோது எனக்கே கொஞ்சம் சந்தேகம் தான். பல மாணவர் கூட்டங்களில் நான் செய்த பிரசங்கங்கள் எனக்குக் கொஞ்சமாவது திருப்தி தரவில்லை; அவை மிகவும் ரஸமற்றவையாவும் கிரஹித்தறிய முடியாத நுட்பங்கள் நிறைந்தவைகளாகவே எனக்குத் தோன்றின. இந்த சிறுவர்களையும் சிறுமிகளையும் ஏன் சாதாரணமானவர்போல் பாவிக்கக்கூடாது? பாடம் முடிந்த பின்பும், ஏன் அவர்களை நமது செயற்கைக் கல்வி முறையைக் கொண்டு உபத்திரவம் பண்ணவேண்டும்?—இவ்விதம் நான் சிந்தனை செய்தேன்.

### மாணவர் ப்ரீதி

ஒரு நாள் என்னிடம் வந்து பேசும்படிக் கேட்டுக்கொண்டனர். நான் இதற்கு முன்னதாக ஒரு குறிப்பும் தயார் செய்துகொள்ளவில்லை. கூட்டத்திற்குப் போனபிறகு மனதில் உதித்ததைக் கூறுவது என்று நிச்சயித்துக்கொண்டு போனேன். போனவுடன் ஆவலும் சிரத்தையும் சோபிக்கும் பல முகங்களை அங்கு கண்டதும் பிரசங்கம் பண்ண உத்சாகம் என் உள்ளத்தில் பிறந்தது. வீட்டில் என் சகோதர சகோதரிகள் முன்னிலையில் எப்படி அன்னியோந்யமாக நான் பேசுவேனோ அதேமாதிரி அவர்கள் முன்பு பேசினேன். வாழ்க்கையில் எங்களுக்குப் பொதுவான அம்சம் ஒன்றைப்பற்றி நான் வ்யவஹரித்தேன். மாணவர்கள் என்னிடம் காட்டிய ப்ரீதி அதிகம். அவர்கள் என்னிடம் கொண்ட அன்பும் நம்பிக்கையும் எனக்கு பெருமை தருகின்றன. சில சமயங்களில் அவர்களது நடத்தையில் தோஷம் கண்டிருக்கிறேன்: மற்றும் சில சமயங்களில் நான் அவர்களைக் கண்டித்ததுமுண்டு அவர்களும் என்னை சிலாகித்த சமயங்களும், என்னிடம் சினம் கொண்ட சந்தர்ப்பங்களும் இராமல் இல்லை. ஆயினும் நாங்கள் இருவரும், ஒருவர் மற்றொருவரது நோக்கத்தைப் பரிவுடன் கவனித்து பரஸ்பர நல்லுணர்ச்சி கொண்டு வருகிறோம்; உண்மையான சிநேகத்திற்கு தேவையானது இதைத் தவிர வேறு எது இருக்கிறது?

(தொடரும்)

Vijaya Lakshmi Pandit

**இந்த வியாசத்தின் பிற்பகுதி அடுத்த வார இதழில் வெளிவரும். அந்தப்பகுதியில் மேலும் சில ரசமான விவரங்களைப் படிப்பீர்கள்.!**



# தபால் வண்டி

★

"சிகவ் சித்திரம்"

★

இந்த ருஷ்யக் கதையை எழுதியவர் சிறுகதைகளை எழுதுவதில் மிகுந்தபிரசித்திபெற்ற ஆண்டன் சிகவ் என்பவர். அவர் ருஷ்ய மக்கள்-அதாவது தாழ்ந்த நிலையில் அவதிப்படுபவர்கள்-பற்றி பல கதைகளை மிகத் தெளிவான விதத்தில் எழுதியிருக்கிறார். ஒவ்வொரு கதையும் உணர்ச்சியை எழுப்ப வல்லது. "சிதம்பரம் மணி"மொழி பெயர்த்திருக்கும் இக் கதையில்தபாற்காரர்களைப் பற்றி படிக்கலாம்.

★

அன்று இரவு மூன்று மணி. தபால்காரன் அவனுடைய குல்லாயையும், கோட்டையும் போட்டுக்கொண்டு ஒரு துருப்பிடித்த வாளையும் கையில் எடுத்துக்கொண்டு கிளம்பத் தயாரானான். வெளியே வாசற்படியில் நின்று கொண்டு வண்டிக்காரன் தபால் பைகளை எடுத்து வைப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தான் தூங்குமூஞ்சி போஸ்ட்மாஸ்டர். தம் மேஜை அருகில் உட்கார்ந்திருந்தார். அவர் ஒரு கடுதாசியில் என்னமோ எழுதிக் கொண்டே, "என் மருமான் ரயிலுக்கு உடனே போகவேண்டும் என்கிறான். ஆகையால் இதோ பார்! இக்னடைவ்! அவனை சற்று அழைத்து ஸ்டேஷனில் விட்டுவிடு. தபால் வண்டியில் பிறர் போவது சட்டத்திற்கு விரோதம் என்று தெரியும். இருந்தாலும் நான் வாடகைக்கு வண்டிகொண்டு வருவதைவிட உன்னுடன் இனமாக வருவது நலமென்று நினைக்கிறேன்" என்று இக்னடைவ் என்ற தபால்காரனிடம் சொல்லிக்கொண்டே இருந்தார்.

"இதோ, தயார்!" என்ற சப்தம் இந்த சமயத்தில் அவர்கள் காதில் விழுந்தது.

"சரி, கிளம்பு அப்போ, பகவான் இருக்கார்" என்று அந்த போஸ்ட்மாஸ்டர் சொல்லி "எந்த வண்டிக்காரன் வருகிறான்?" என்று கேட்டார்,

"செமியான் கிசாவ்" என்று பதில் வந்தது.

"வா. இந்த ரசீதில் கையெழுத்துப்போடு."

தபால்காரன் ரசீதில் கையெழுத்தைப் போட்டுவிட்டு வெளியே கிளம்பினான். வெளியில் மூன்று குதிரைகள் பூட்டிய வண்டி நின்றுகொண்டிருந்தது. எல்லாக்குதிரைகளும் அசைவற்று நின்றுகொண்டிருந்தன. ஆனால் ஒரு குதிரை மாத்திரம் சற்று நிம்மதியற்று இருந்தது. இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் தலையை அசைத்துக் கொண்டும் காலை உதைத்துக் கொண்டும் இருந்தது. இரு உருவங்கள் இங்குமங்கும் 'பிராக்குப்' பார்த்த வண்ணம் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருந்தன. ஒருவன் வண்டி ஓட்டி. இன்னொருவன் அந்தப் பையன்–போஸ்ட்மாஸ்டரின் மருமகன். அவன் கையில் ஒரு பை இருந்தது. வண்டி ஓட்டி வாயில் ஒரு சுருட்டை வைத்துக் கொண்டிருந்தான். அந்த இருட்டில் சுருட்டு எரிவது நன்றாகத் தெரிந்தது. சுருட்டின் வெளிச்சத்தில் அவன் சுருங்கிய தாடி நிறைந்த முகமும், சிகப்பு மூக்கும், வெறித்த பார்வையும் நன்றாகத் தெரிந்தன. தபால்காரன் தபால் பைகளை நன்றாகத் தள்ளி வைத்துவிட்டு தன் கையில் இருந்த துருப்பிடித்தவாளையும் அதன் மேல் வைத்து வண்டியில் ஏறி உட்கார்ந்தான். இதைக் கண்ட பையனும் பரபரப்புடன் வண்டியில் ஏறிக்கொண்டான். இந்த பரபரப்பில் பையனின் கை தபால்காரனின் மேல்பட்டுவிட்டது. இதைக்கண்டு பையன் வினயமாக "மன்னிக்கவும்" என்றான்.

போஸ்ட்மாஸ்டர் ஒரு 'விஸ்ட்கட்' (Waist-Coat)டுடனும், காலில் செருப்புடனும், கொட்டாவி விட்டுக் கொண்டே வெளியே வந்து சொன்னார்.

"சரி, போய் விட்டுவா. உன் அம்மா, மிஹைலோவை விசாரித்ததாகச் சொல்லு. அவள் உடம்பைப் பார்த்துக்கொள்ளச் சொல். எல்லோரையும் கேட்டேன்னு சொல்லு-டேய்! இக்னடைவ்! அந்தப் பார்சலை மிஸ்ட்ரஸ்டெவ்விடம் கொடுக்க மறந்துவிடாதே...போ!"

வண்டிக்காரன் தனக்கு உட்கார சௌகர்யப் படுத்திக் கொண்டு மூக்கினால் ஒருவிதமாக கத்திக்கொண்டே குதிரைகளைத் தட்டினான்.

"எல்லோரையும் கேட்டதாகச் சொல்லு" என்றார் மீண்டும் போஸ்ட்மாஸ்டர்.

குதிரைகளின் கழுத்தில் கட்டியிருந்த பலவித சலங்கைகளும் பலவிதமான ஓசையை எழுப்பின. வண்டிக்காரன் தன்னிடத்தில் எழுந்து நின்று அசையாமல் இருந்த இரண்டு குதிரைகளை சவுக்கினால் விளாசினான். அவ்வளவுதான். 'தட தட' வென்று வண்டி அந்தப் புழுதி ரோட்டில் கிளம்ப ஆரம்பித்தது. அந்தச் சிறிய நகரம் எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. எங்கும் ஒரே இருளாய் இருந்தது. ஒரு சிறிய விளக்கைக் கூட எங்கும் காணோம். வானில் எண்ணிலா நக்ஷத்திரங்களுக்கிடையே அங்காங்கே மேகத் திவலைகள் காணப்பட்டன. ஆனால் அந்த நக்ஷத்திரங்களினால் இருள் அகலவில்லை. கொஞ்சம் குளிர் அதிகமாகவே இருந்தது.

தன்னை மறுக்காமல் அழைத்துச் செல்பவனிடம் நாம் பேச வேண்டியது கடமை என்று அந்தப் பையனுக்குத் தோன்றியது. உடனே அவன் "குளிர் ஜாஸ்தியாகும்போலிருக்கிறது. பொழுது விடிகிறதாகவே காணோமே" என்று சொல்லிக் கொண்டே வானத்தைப் பார்த்து "அங்கே வலதுபுறம் பார். மூன்று நக்ஷத்திரங்கள் பக்கம் பக்கமாக ஒரே கோடாக இருக்கிறதே தெரிகிறதா?" என்று மேலே சொன்னான்.

தபால்காரன் கைகளை எடுத்துக் கன்னத்தில் வைத்துக் கொண்டான். அவன் எந்தப் பக்கமும் அசையவே இல்லை. வானத்தை அசப்பில்கூட அவன் பார்க்கவில்லை. இதிலிருந்து இந்தப் பேச்சு அவனுக்கு சுவாரஸ்யமாய் இல்லை என்பது நன்கு விளங்கிற்று. ஒருகால நக்ஷத்திரங்களைப்பார்த்து அவன் அலுத்துப் பார்த்துப் போயிருக்கலாம். பையன் சற்று நேரம் மௌனமாக இருந்தான்.

பிறகு "குளிர் ஜாஸ்தியாகிறது. பொழுவிடிகிற சமயம் தான். சூரியன் இன்று எத்தனை மணிக்கு உதயமாகிறது?" என்று கேட்டான்.

"என்ன?"

"சூரியன் இன்று எத்தனை மணிக்கு உதயமாகிறது? தெரியுமா?" என்றான் மீண்டும்.

"ஐந்து மணியிலிருந்து ஆறு மணிக்குள்ளிருக்கும்" என்றான் வண்டிக்காரன்.

இவ்விதம் வண்டி நகரத்திற்கு வெளியே வந்து விட்டது. ரோடின் இருபுரத்திலும் இப்பொழுது ஒன்றும் பார்க்கமுடியவில்லை. ஆனால் வயல்களுக்குப் போட்டிருந்த வேலியும், அங்கே வளர்ந்திருந்த ஓரிரண்டு மரங்களும்தான் தெரிந்தன. இந்தப் பரந்த வெளியில் நக்ஷத்திரங்கள் நன்றாக பிரகாசிப்பதாகத் தென்பட்டது. 'ஜில்' காற்றொன்று வீசியது. தபால்காரன் தலையை தன் கால்களுக்குள் புதைத்துக் கொண்டான். பையனுக்கும் குளிர் தாங்க முடியவில்லை. மெதுவாகநகர்ந்து தபால் பைகளுக்கிடையே தன்முகத்தையும் கைகளையும் பதுக்கிக் கொண்டான். குதிரைகள் ஓட்டம் குறைந்தது. மெதுவாக நகர ஆரம்பித்தன. சலங்கைகளின் ஓசையும் மங்கியது.

பத்து நிமிஷங்கள் கழிந்தன. திடீரென்று ஒரே இருள் சூழ்ந்துவிட்டது, முன்பு பார்த்த நக்ஷத்திர கூட்டங்களை இப்பொழுது காணமுடியவில்லை. காரணம் வண்டி காட்டிற்குள் நுழைந்தது தான். மரக்கிளைகள் வண்டியின் மேல் உராய்ந்தன. சாலையின் பக்கத்தில் படர்ந்திருந்த முட் கொடிகள் பையன் மீது குத்தின. சக்கரங்கள், சாலை நடுவே ஊடுருவிப் பாய்ந்திருந்த வேர்களை கடந்து செல்லும்போது வண்டி இப்படியும், அப்படியும் ஆடி விழுந்த வண்ணம் சென்றது.

"சரியான வழியாகப் போ" என்று கோபமாக கத்தினான் தபால்காரன். "ஏன் ஓரத்தில் போகிறாய்? என் மூஞ்சி எல்லாம் மரக்கிளைகள் சிராய்த்து விட்டது! இன்னும் வலது பக்கமாக ஓட்டு."

இந்த சமயத்தில் ஒரு விபத்து நேரும் போல் இருந்தது. வண்டி திடீரென்று நின்று 'கிரீச்' என்ற சப்தத்துடன் இப்படியும் அப்படியும் ஆடியது. இதைக் கண்டு குதிரைகள் பயந்து நின்று விட்டன.

"ஓ! ஓ!" என்று பயத்தினால் கத்தினான் வண்டிக்காரன். "ஓ!... அட பிசாசுகளா!"

பையனுக்கு இந்த ஆட்டத்தையும் அபாயத்தையும் கண்டு நடுக்கம் உண்டாகி விட்டது. ஏதாவது பிடித்துக் கொள்வதற்கு அகப்படுமா என்று முயற்சி செய்தான். தபால் பைகளையே பிடித்துக் கொள்ளலாம் என்றால் அந்தத் தோல் பைகள் வழுக்கின. கடைசியில் வண்டிக்காரனின் பெல்டையே பிடித்துக் கொள்ள முயற்சி செய்தான். ஆனால் வண்டிக்காரன் எந்த சமயத்திலும் கீழே விழக் கூடிய நிலையில் இருந்தான். வண்டியின் சக்கரங்களின் சப்தத்தினிடையே தபால்காரனின் துருப்பிடித்த வாள் கீழே விழும் சப்தம் கேட்டது. சற்று நேரத்திற்கெல்லாம் இன்னும் ஏதோ 'தட்' என்ற சப்தத்துடன் கீழே விழுந்தன.

"ஓ!" என்று கிரீச் சப்தத்துடன் பின்னால் சாய்ந்து கொண்டே "நில்லு!" என்று கத்தினான் வண்டிக்காரன்.

பையன் அவன் முகத்தின் மீது விழுந்துநெற்றியில் சிராய்த்துக்கொண்டான். ஆனால் உடனே எழுந்து கொண்டு வண்டியின் ஆட்டத்தினால் முதுகையும் இடித்துக் கொண்டான்.

"ஐயோ! நான் விழப்போகிறேன்!" என்பது தான் அவனிடம் தோன்றிய எண்ணம். ஆனால் நல்ல வேளையாக குதிரைகள் காட்டை விட்டு வெளியே வந்து வலது புறமாகத் திரும்பி வேகமாக ஓடி வந்து ஒரு பாலத்தின் அருகில் வந்து திடீரென்று நின்றன. இவ்விதம் வண்டி திடீரென்றுநின்றதால் பையன் மீண்டும் முன்னும் பின்னுமாக எதிர்பாரா வண்ணம் தூக்கி எறியப்பட்டான்.

வண்டிக்காரனும், பையனும் செத்துப்பிழைத்தோம் என்று பிரமித்துப்போய் நின்றுகொண்

டிருந்தனர். தபால்காரன், இக்னடைவை வண்டியில் காண வில்லை. அவனும், அவன் வாள், பையனின் பை, தபால் பையில் ஒன்று இவைகளுடனேயே தூக்கி எறியப்பட்டு விட்டான்.

"நில்லுடா, ராஸ்கல்! நில்லு!" என்று அவன் கத்திக்கொண்டே வருவதைக் கண்டனர். "ராஸ்கல்! முட்டாள்!" என்று மீண்டும் மீண்டும் கத்திக்கொண்டே வண்டியை நெருங்கினன். அவன் பரிதாபகரமான குரலிலிருந்தே அவனுடைய துன்பமும், கோபமும் நன்கு தெரிந்தன. "என்ன ஆள்டா நீ!" என்று சப்தமிட்டுக் கொண்டே வண்டிக்காரனிடம் கையை தூக்கிக்கொண்டு சென்று விட்டான்.

"என்ன செய்கிறது. சாமி மன்னிக்கணும்"! என்று ரொம்பவும் தாழ்ந்த குரலில் கேட்டுக்கொண்டே குதிரைகளின் மீது படிந்திருந்த தூசுகளை நீக்கி சரிப்படுத்தினன். "எல்லாம் இந்தக் குதிரையினுல் தான்...பிசாசுகள்! இப்பத்தான் ஒருவாரமா இப்படி எடக்கு பண்ணுதங்க... இன்னும் கொஞ்ச தூரம் போனுல் சரியாப் போயிடும்....முக்குலேரெண்டு அடி கொடுத்தா சரியாப் போயிடும். அப்புறம் இப்படி ஒண்ணும் விளையாடாது..." என்ருன்.

வண்டிக்காரன் குதிரைகளை சரிப்படுத்திக் கொண்டே கீழே கிடந்த தபால் பையையும் வாளையும் பையனின் பையையும் பார்த்தான். தபால்காரன் இக்னடைவ், ஆத்திரம் தாங்காமல் அலுத்துப் போய் தன்னை வைவதையும் கவனித்தான். திடீரென்று கீழே கிடந்த பைகளை வண்டியில் எடுத்துப் போட்டு விட்டு தன்னிடத்தில் ஏறி உட்கார்ந்து வண்டியை கொஞ்ச தூரம் நகர்த்தினன்.

பையனுடைய பயம் ஒருவாறு நீங்கிற்று. பிறகு இந்த வேடிக்கைகளைக் கண்டு அவன் சந்தோஷப்பட்டான். இதுதான் முதல் தடவை அவன் இம்மாதிரி அனுபவம் பெற்றது. ஒரு சுருட்டைக் கொளுத்திக் கொண்டே "நீ விழுந்ததையே நான் பார்க்கவில்லை. நானும் அநேகமாக விழ வேண்டியவன் தான். அப்பா, இந்தக் காலத்திலே பிரயாணம் செய்வதே சற்று கடினம்தான்..."என்று சிரித்துக்கொண்டே சொன்னுன் தபால்காரனிடம்.

தபால்காரன் பேசவே இல்லை.

"ரொம்ப நாளாக நீ இந்த தபாலை கொண்டு போகிருயா?" என்று மீண்டும் அவனைக் கிண்டினன்,

"பதினேரு வருஷங்களாக."

"ஓ! தினமா?"

"ஆமாம், தினம்தான். இந்த வண்டியிலேயே தபாலை எடுத்துக் கொண்டு உடனே திரும்பி விடுவேன். ஏன்?"

பதினேரு வருஷங்களாக இக்னடைவ் தினம் எவ்வளவு கஷ்டங்களுக்கு உள்ளாகி இருக்கிருனே யாருக்குத் தெரியும்! வழிப்பறிக்கொள்ளைக்காரர்கள் கையில் கூட மாட்டியிருப்பான்! மூடுபனி காலத்தில் எவ்விதம் சமாளிக்கிருனே! யார் கண்டார்கள்...இன்னும் எவ்வளவோ?

"இந்தப் பதினேரு வருஷங்களில் நீ எவ்வளவு அனுபவித்திருப்பாய் இன்றைய தினம் மாதிரி. அதைப்பற்றித்தான் நான் யோசித்து ஆச்சர்யப்படுகிறேன்...ஆமாம் ரொம்ப கஷ்டப் பட்டிருப்பாய். பாவம்!" என்று கூறி பதிலுக்குக் காத்திருந்தான் பையன்.

பையன் எதிர்பார்த்தபடி இக்னடைவ் பதில் சொல்லவில்லை. இதற்குள் பொழுது விடிந்து விட்டது, தபால்காரனின் முகம் நன்கு தெரிந்தது. அது பனியினுல் நனைந்திருந்தது. சாம்பல் நிறமாக வெளுத்துப் போய் பிணத்தின் முகம் போலிருந்தது. முகத்தில் சோர்வும், கோபமும் தாண்டவமாடின.

"நல்ல வேளையாகப் பொழுது விடிந்ததே. அப்பாடா!" என்ருன் பையன். தபால்காரனின் குளிர்ந்த கோபம் வாய்ந்த முகத்தைப் பார்துக்கொண்டே "என் கை கால் எல்லாம் குளிரில் அப்படியே மறத்துக்கிடக்கு. இந்தமாத இரவுகள் ரொம்ப குளிராகத்தானிருக்கிறது. ஆனுல் சூர்யோதயம் ஆனுல் அவ்வளவு குளிர் இருக்காது. ...நாம் சீக்கிரம் ஸ்டேஷனை அடைந்து விடுவோமா" என்ருன்.

தபால்காரன் இதைக்கேட்டு சீறி விழுந்தான் எரிச்சலாக,

"என்ன சும்மா 'சளசள' என்று பேசிக்கொண்டிருக்காயே. சற்று நேரம் சும்மா இருக்க முடியாதா உன்னுல்?" என்ருன் கோபமாக.

பையன் இந்தவார்த்தைகளைக் கேட்டு பயந்து போனுன். பிறகு அவன் பிரயாணம் முடியும் வரையில் அவனை அணுகவே இல்லை. காலை கனவேகமாக வந்துகொண்டிருந்தது. மேகங்கள் மஞ்சள் நிறமாக மாறியது. காலையிலிருந்த ஜிலுப்பும், தபால்காரனின் கோபமும் அந்தப் பையனை ஏதோ செய்தன. சுற்றும் முற்றும் பார்த்தான். சூரியன் வரவைக் குறித்து அதிக சிரத்தை எடுத்துக் கொண்டான்: கொஞ்ச சூடு படட்டுமே என்றுதான். அவ்வளவு குளிர் அவனுக்கு; இதனுல் இதரஜீவராசிகள் மீது அவனுக்கு அனுதாபம் வந்துவிட்டது. இந்தக்குளிரை இந்த செடிகளும், மரங்களும் எவ்விதம் சகித்துக் கொண்டிருக்கின்றன என்ற பிரச்னை அவன் மனதில் எழுந்தது. திடீரென்று கட்டிடங்களுக்கு நடுவே வண்டி செல்வதைக் கவனித்தான். ஜனங்கள் குளிரையோ, சலங்கையின் சப்தத்தையோ லக்ஷியம் செய்யாமல் ஆனந்தமாக அயர்ந்து நித்திரை செய்வதைப் பார்த்தான். சலங்கையின் சப்தத்தினுல் திடீரென்று எழுந்த ஓரிரு ஸ்திரீகளும் தலையைமட்டும் தூக்கி அரைப் பார்வையோடு மீண்டும் படுத்துக்கொள்வதையும் கவனித்தான். எதிரே வந்த ஒரு குட்டை அவன் கண்களுக்குக் காட்சி அளித்தது. அதில் மீன்களும், தவளைகளும் நிறைய இருப்பதைக் கண்டான். இந்தக் குளிரில் இவை எவ்விதம் ஜலத்தில் வசிக்கின்றன என்று யோசித்தான்.

இந்த சமயத்தில் "தபால் வண்டியில் பிறர் ஏறுவது சட்டத்திற்கு விரோதமானது. இதை சட்டம் அனுமதிக்கவில்லை! சட்டம் அனுமதிக்காத போது. பிறருக்கு இதில் என்ன வேலை?...வண்டியில் ஏறி...ஆம் இதனுல் எனக்கு ஒன்றுமில்லை ...இது எனக்குப் பிடிக்கவும் இல்லை. நானும் இதை விரும்பவும் இல்லை..." என்ற தபால்காரனின் முணு முணுப்புக்கள் பையனின் காதில் விழுந்தன,

"உனக்கு இஷ்டமில்லை என்ருல் அப்பொழுதே சொல்வதற்கென்ன?" என்ருன்.

தபால்காரன் இதற்கொன்றும் பதில் பேசவில்லை, ஆனுல் இன்னும் அவன் முகத்தில் 'எள்ளும், கொள்ளும் வெடித்தது.' நேசப்பான்மை அவனிடத்தில் இல்லை. சிறிது நேரத்திற்குள் வண்டி ஸ்டேஷன் வாயிலை அடைந்தது உடனே பையன் வண்டியை விட்டு இறங்கி தபால்காரனுக்கு தன் வந்தனத்தைத் தெரிவித்தான். மெயில் வண்டி இன்னும் வரவில்லை. ஒரு நீள குட்ஸ் வண்டிதான் நின்றுகொண்டிருந்தது. அதன் டிரைவர் தன் கரி பூசிய முகத்துடன் ஒரு சிறிய டீ கடையில் டீ சாப்பிட்டுக்கொண்டிருந்தான். எங்கும் ஒரே 'ஜில்' என்று இருந்தது. ரயில் வரும் வரையில் பையன் டீ கடையில் டீ சாப்பிட்டுக்கொண்டு நின்றுகொண்டிருந்தான். ஆனுல் தபால்காரனே இன்னும் அதே முகத்துடன் குந்தி உட்கார்ந்து கொண்டு தலையை நட்டுக்கொண்டிருந்தான். அவன் பக்கலில் யாரும் இல்லை. அவன் கண்கள் அவன் காலின் அடியில் இருந்த தரையை உற்றுநோக்கிய வண்ணமே இருந்தன.

யார் மேல் அவனுக்குக் கோபம்? ஜனங்களின் பேரிலா? ஏழ்மையின் பேரிலா? அல்லது இந்தக் குளிர் இரவின் பேரிலா?





காந்தி ஜோஸியர்



ஒரு வருஷப் பலன் மாதவாரி ரூ. 3. ஆருடம் 5 கேள்விகளுக்குப் பதில் ரூ. 1. வி. பி. செலவு அணு 5. ஜனனகால விவரம் or எழுதும நேரம், சுமார் வியூது தேவை.

ஹனுமான் ஆச்ரமம், திருத்தணி S.I.



உண்மை உறுதிக்கும் உத்திர வாதம்.

—:—

"ஷண்முகம் பிராண்டு" ஸ்டீல் டிரங்கு & சூட்கேஸ்கள்

தேவைக்கு வேண்டிய புது மாதிரி தினுசுகளில் கிடைக்கும்.

ஷண்முகம்பிராண்டு ஸ்டீல்டிரங்குஒர்க்ஸ்

தயாரிப்பவர்:- சி. ஞானசுந்திர நாயகர், P. 3094, 341. எஸ்பிளனேட், மதராஸ்

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

அமிர்தாஞ்சன்




போலிகள் எச்சரிக்கை

"சுதேசமித்திரன்"

எல்லாவித நோய்களையும் தீர்க்கும்.

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

பம்பாய் - சென்னை - கல்கத்தா.




# த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

## I

பல்லவி

ஸ்ரீ ராம! ஜயராம! ச்ரிதஜன ரிபு பீம
ச்ருங்கார! குணதாம! ஓ ராம!

சரணம்

1. ஜகசின வாரிகி சுலகனகா தோச நன்-
னேசுட யிக ந்யாயமா ஓ ராம!
2. துர்ஜன பூயிஷ்டமுன திகிலின நே
ஸஜ்ஜனுடெட் லெளதுனே ஓ ராமா!
3. யேதாரி போயினனுதாரி கட்டமு
வாதாடெதரு கானி ஓ ராமா!
4. கலிமானவுலு வெர்றி சலமுன தத்வமு
தெலியலேரு ஸாமீ ஓ ராம!
5. தாமராகு நீரு விதமு ப்ரபஞ்சமு
தத்வமு காது ஸாமீ ஓ ராமா!
6. நேனொகடி என்ச நீ மனஸு வேரகுட-
கே நேரமோ தெலிய ஓ ராம!
7. கஜ்ஜமுண்ட்லமீத தகுலுகொன்ன பட்ட
க்ரக்குன தீய வசமா ஓ ராம!
8. அச்சுக பவமுன தகுலு கொன்ன மதி
வச்சுனு நீ வத்தகு ஓ ராம!
9. அஹிராஜசயன! நீ கனுசு ஜேஸின பனு-
லஹிதமுகா தோசெனு ஓ ராமா!
10. மஹிஜரீதி நன்னு மன்னிஞ்சிதேமீது
மஹிமகேமி தக்குவ ஓ ராம!
11. பாகுக ஸததமு நீ குணமுலு பல்கு
த்யாக ராஜவினுத! ஓ ராம!

## II

| | |
|---|---|
| ஸ்ரீராம! | —ஸ்ரீராமமூர்த்தியே! |
| ஜயராம! | —விஜயத்துடன் விளங்கும் ராமா! |
| ச்ரிதனரிபுபீம! | —அண்டின அடியார்களின் சத்ருக்களுக்குப் பயங்கரனுயுள்ளவனே! |
| ச்ருங்கார! | —அழகு நிறைந்தவனே! |
| குணதாம! | —நற்குணங்களுக்கு இருப்பிடமாயுள்ளவனே! |
| ஜகசின வாரிகி | —பார்ப்பவர்களுக்கு |
| சுலகனகா | —கேவலமாக |
| தோச | —தோன்றும் வண்ணம் செய்து |
| நன்னு | —என்னை |
| யிக | —இன்னமும் |
| ஏசுட ந்யாயமா | —ரக்ஷித்தருளாது ஏமாற்றி வருவது உனக்கு நியாயமாயிருக்கிறதா. |
| ஓராம! | —ஸ்ரீராமா! |
| துர்ஜன பூயிஷ்டமுன | —துஷ்டர்களால் நிறைந்துள்ள கூட்டத்தில் |
| தகிலின | —அகப்பட்டுக்கொண்ட |
| நே | —நான் |
| ஸஜ்ஜனுடு | —ஸாது தன்மையுடையவனுக |
| எட்லெளதுனே | —எவ்விதம் ஆவேனே தெரியவில்லை |
| ஓராம! | —ஸ்ரீராமா! |
| யேதாரி போயினனு | —நான் எவ்வழி சென்றுலும் |
| ஆதாரிகி | —அவ்வழிக்கு |
| அட்டமு | —குறுக்கே நின்று |
| வாதாடெ தருகானி | —என்னுடன் வாதாடுகின்ருர்கள் |
| ஓராம! | —ஸ்ரீராமா! |
| ஸாமீ | —நான் சொல்வதை சற்று செவி சாய்த்துக் கேட்பாய் |
| கலிமானவுலு | —கலியின் கொடுமைகளுக்கு ஆளாகிய மானிடர்கள் |
| வெர்றி சலமுன | —உலக வாழ்வில் பயித்தியம்கொண்டவர்களாய் |
| தத்துவமு தெலியலேரு | —தாஙகள் கடைத்தேறும் வழியை அறியமாட்டார்கள். |
| ஓராம! | —ஸ்ரீராமா! |
| தாமர ஆகுநீரு விதமு | —தாமரை இலையில் வீழ்ந்த தண்ணீர் போன்று |
| ப்ரபஞ்சமு | —உலக வாழ்வு |
| தத்வமு காது | —உண்மையானது அல்ல |
| ஸாமி | —கேட்பாய் |
| ஓராம! | —ஸ்ரீராமா! |
| நேனு ஒகடி ஒன்ச | —நான் ஒன்று நினைக்க |


உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனே இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE

CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—

மெஸர்ஸ்:

சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.

154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

PARASURAM'S

சித்த எண்ணெய்.

இந்த எண்ணெயில் பதினெட்டு சித்தர்களால், அடி, நடு, முடி, என்ற முப்பு குரு பஸ்பம் சேர்ந்திருக்கிறபடியாலும், இந்த எண்ணெயிலுள்ள மூலிகைகளுக்கு நூறு மடங்கு சக்தி ஏற்பட்டு இருக்கிறபடியாலும் மூலிகை சத்துக்கள், ஆல்கலிஸ், ஆல்கலாய்ட்ஸ் (Alkalis, • Alkaloids) களாக மாற்றப்பட்டு இருக்கின்றன.

குணமாகும் வியாதிகள்:- அஷ்ட குனமங்கள், வாயு கட்டிகள், பாண்டு ரோகம், மூல வியாதி. சூலைகள், சர்ம ரோகம், மூத்திர தோஷம், பெரும்பாடு, தலை நோய், வயிற்றுப் புண், கீல்வாயு பிடிப்பு, பித்த பாண்டுகள், சொறி ரெணங்கள், ஸ்திரீகளுக்கு மாத விடாய்களில் உள்ள எவ்வகை தோஷங்களையும் நிவர்த்தி செய்யக் கூடியது. சிறு குழந்தைகளும் உட்கொள்ளலாம்.

விலை ½ அவுன்ஸ் ரூ. 1.

பரசுராம் சித்த ஔஷத ஆச்ரமம்
திருவண்ணுமலை.

(பிராஞ்சு: 59-A, லாயிட்ஸ் ரோட், ராயப்பேட்டை மதராஸ்)

ஏஜண்டுகள்:—

மதராஸ்: அப்பா & கம்பெனி.
மதுரை: டி. என். சோக்கலிங்கம் பிள்ளை & ஸன்ஸ்.
காரைக்குடி: சாரதா ஸ்டோர்ஸ்.

| | |
|---|---|
| நீ மனஸு வேரகுடகு | —உன் மனது வேறென்று எண்ணி நிற்பதற்கு |
| ஏ நேரமோ தெலிய | —நான் செய்த பாபம் ஏதோ அறியேன் |
| ஓ ராம! | —ஸ்ரீராமா! |
| கஜ்ஜமுண்ட்ல மீத | —முள் வேலியின்மீது |
| தகுலு கொன்ன | —சிக்கிக்கொண்ட |
| பட்ட | —வஸ்திரத்தை |
| க்ரக்குன | —சீக்கிரமாக |
| தீய வசமா | —எடுத்துக்கொள்ளுதல் சாத்தியமானதா |
| ஓ ராம! | —ஸ்ரீராமா! |
| பவமுன அச்சுக | —பிறவிக் கடலின் இன்ப துன்பங்களில் நன்ருக |
| தகுலு கொண்ட | —அகப்பட்டுக்கொண்ட |
| மதி | —புத்தியானது |
| நீவத்தகு வச்சுனு | —உன்னிடம் அடைக்கலம் புகுமா |
| அஹிராஜ சயன! | —பாம்பணைமேல் பள்ளிகொள்பவனே! |
| ஓ ராம! | —ஸ்ரீராமா! |
| நீ கனுசு ஜேஸின மனுலு | —உனக்கென்று நான் செய்த காரியங்கள் |
| அஹிதமுகா தோசெனு | —நன்றல்லவென உனக்குத் தோன்றியதா |
| ஓ ராம | —ஸ்ரீராமா! |
| மஹிஜ ரீதி | —பூமாதேவியின் புதல்வியான ஸீதாபிராட்டி அட்ராதிகளையும் மன்னித்து ரக்ஷித்தது |
| நன்னு மன்னிஞ்சிதே | —என்னை போன்று மன்னித்து ரக்ஷித்தால் |
| நீது மஹிமகேமி தக்குவ | —உன் மஹிமைக்கு குறைவு வந்துவிடுமா |
| பாகுக | —நன்ருக |
| ஸததமு | —எப்போதும் |
| நீ குணமுலு பல்கு | —உன் குண விசேஷங்களையே சொல்லித் துதித்து பிரார்த்திக்கும் |
| த்யாக ராஜ வினுத! | —த்யாகராஜனால் துதிக்கப்பட்டவனே! |
| ஓ ராம! | —ஸ்ரீராமா! |

III

இது திவ்ய நாம ஸங்கீர்த்தனப் பகுதியைச் சேர்ந்த கீர்த்தனங்களிலொன்ருகும். இந்தக் கீர்த்தனத்தால் ஸ்வாமிகள் பூலோக இன்ப துன்பங்களில் அகப்பட்டுத் தவிக்கும் பாமர ஜனங்கள் முக்தி பெறும் உபாயத்தை அறிந்து கொள்ள இயலாது சிரம மடையும் தன்மையை விவரித்து, தன்னை பிறவிக் கடலில் மூழ்கித் தவிக்கும் வண்ணம் செய்யாது அருள் புரிய பகவானை வேண்டுகிருர்.

நன்னேசுடயிக:—"எவருரா நின்னு வினு" என்ற கீர்த்தனத்தின் சரணத்தில் "ராக நத்நேசங்யாயமா" என்று இது போன்றே தெரிவித்திருப்பது கவனிக்கத் தக்கது.

துர்ஜனபூயிஷ்ட:—துஷ்டர் மத்தியில் வாஸம் செய்பவனை நற்குண முள்ளவனுக இருக்கக் கூடும் என்பது நடவாத காரியம். இதன் பொருட்டே 'துஷ்டம் தூரேணவர் ஜயேத்' என்று பெரியோர்கள் கூறியுள்ளார்கள்.

கலிமானவுலு:—'கலி நருலகு' என்ற கீர்த்தனத்தில் இவ் விஷயத்தை விரிவாகத் தெரிவித்துள்ளார்.

கஜ்ஜ முண்ட்ல:—முள் வேலியில் சிக்கிக் கொண்ட வஸ்த்ரம் கெடாமல் எளிதில் கிடைப்பதரிது. அது போன்றே பிறவிக் கடலின் இன்பதுன்பங்களுக்கு வசமாய் நிற்பவர்கள் அவ்வின்ப துன்பங்களை எளிதில் நீக்கிக் கொண்டு பகவத் சரணுரவிந்தங்களில் சரண்புகுதலென்பது சிரமமான காரியம் என்று குறிப்பிடுகிருர்.

மஹிஜரீதி:—சீதா பிராட்டி தன்னை ஹிம்ஸித்து வந்த கொடிய ராக்ஷஸிகளையும் காப்பாற்றி ஹனுமானுல் அவர்களுக்கு யாதொரு விதகெடுதலும் ஏற்படாமல் ரக்ஷித்தாள். இவ்விவரம் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. சீதாதேவி போனறு கருணை கொண்டு தன்னை ரக்ஷித்தருளக் கூடாதா என்று பிரார்த்திக்கிருர்.

IV

ராகம் வராளி — மிச்ர சாபு

(39—வது மேள ஜன்யம்.)

ஆ: ஸகரிகம பதநிஸ்
அவ: ஸம்பூர்ணம்.

பல்லவி

| | | | |
|---|---|---|---|
| பா ; ; | பா மா பா தா | பா பா மா | காரீ காரீ |
| ஸ்ரீ | ரா , . ம | ஜ ய . | ரா . . |
| ஸா ; ; | ; ; கா ரீ | கா மா பா | தா பா தா நீ |
| ம | ச்ரி த | ஜன ரி | பு பீ . ம |
| தா பா ; | பா மா பா தா | பா பா மா | காரீ காரீ |
| ஸ்ரீ . | ரா . . ம | ஜ ய . | ரா . . . |
| ஸா ; ; | ஸா நீ கா ; | ரீ கா மா | பா மா பா தா |
| ம | ச் ரு ங் கா | ர குண | தா . . ம |

சரணம்

| | | | |
|---|---|---|---|
| ; நீ ஸ்ா | நீ தா பா மா | கா ; மா | பா தா பா மா |
| ஜு | சி . ன . | வா . | ரி . கி . |
| பா பா தா | நீ ஸ்ா ரீ ஸ்ா | ஸ்ா க்ாரீ | ரீ ஸ்ா ஸ்ா : |
| . சு ல | கன கா . | தோ . . | ச . நன் |
| ; ஸ்ா நீ | ஸ்ா நீ ஸ்ா ரீ | ஸ்நி ஸ்ா ; | நீ தா பா தா |
| னே . | சு . ட . | யி . க | ங்யா . ய . |
| நீ ; ; | ; ; ஸ்ா ; | நீ தா பா | மா கா ; மா |
| மா | ஓ | ரா . . | . மா . |

(மற்ற சரணங்களையும் இது போன்றே பாடவும்.)












# சித்திரமும் சிருங்காரமும்

★

அமேரிக்காவும் சென்ற மஹாயுத்தமும்—"நாம் கண்காணித்த அரண்கள்"—பார்க்க வேண்டிய படம்—"அப்னு கார்"—ஒரு அசாதாரண கதை—சாந்தா ஆப்தே நடிக்கும் படம்—"ரோடி"—பாலைவனக் காட்சியைப் படம் பிடிப்பதில் ஏற்பட்ட சரமம்—நேஷனல் ஸ்டூடியோவின் நடனப் படம்—அகடேமி தீர்ப்பு—பிரபல நடிகர் நடிகைகள்.



நீனுவும் ப்ருத்வி ராஜனும் "ஏக்—ராட்" என்ற படத்தில் நடிக்கின்றனர்

## அமெரிக்காவும் மஹா யுத்தமும்

சென்ற மஹா யுத்தத்தில் அமெரிக்கா எடுத்துக் கொண்ட பங்கு படத்தின் மூலம் காட்டப்பட்டு வருகிறது, "ர்ராம் பர்ட்ஸ் வீ வாட்ச்" (நாம் கண்காணிக்கும் அரண்கள்) என்ற படத்தில் அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபட்ட வரலாறு மிகவும் ரஸமாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது. இந்தப்படத்து சம்பவங்கள் யாவும் அமெரிக்க நகரமொன்றில் நடந்தவை. இதில் காணும் கதா பாத்திரங்களும் மிகவும் சாமான்யமானவர்கள். இவர்களுக்கு 1914-ல் ஐரோப்பிய மஹா யுத்தம் ஆரம்பித்தபோது, விஷயம் ஒன்றும் தெளிவாகத் தெரியாது: காலக்ரமத்தில் அந்த யுத்தத்தைப்பற்றிய செய்திகளை அவர்கள் அறிந்தனர். பிரஸிடெண்ட் வில்ஸன் ஆரம்பத்தில் நடு நிலைமை வகித்தது, அமெரிக்கர்கள் ஆக்ஷேபம், லூஸிடானியா என்ற அமெரிக்கக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது, அமெரிக்க யுவர்கள் தங்கள் வீடு வாசல்களை விட்டுவிட்டு ராணுவத்தில் சேர்ந்து பயிற்சி பெற்றது, 1917-ல் அமெரிக்காவும் யுத்தத்தில் சேர்ந்தது, இறுதியில் வெற்றி சம்பாதித்தது, இவை யாவற்றையும் இப்படத்தில் காணலாம்.

பொதுஜனங்களது வாழ்க்கை எப்படி மன்னர்கள் தளபதிகள் முதலியோர்களது முடிவைத் தழுவியிருக்கிறது என்பதை இதில் காணலாம். ஹில்டா பென்ஸிங்கர் என்ற யுவதியின் காதல் கெய்ஸர் தொடுத்த யுத்தம் காரணமாக மண்ணுடு மண்ணுகிறது: காதலன் யுத்தத்திற்குப் போய் விடுகிருன்: இம்மாதிரி இருந்தது அப்போது நிலைமை. இந்தப் படத்தில் சரித்திர சம்பவங்கள் சிறப்பு எய்தியிருக்கின்றன.

இந்தப்படத்தில்நடித்தவர்கள் யாவரும் நடிப்பைத் தொழிலாக மேற்கொள்ளாதவர்கள், அவர்கள் தங்கள் பாகங்களை உணர்ச்சியுடன் அனுபவித்து நடித்திருப்பதால் நடிப்பு நன்கு சோபிக்கிறது.

சென்ற யுத்தத்தில் அமெரிக்கா தலையிட்ட பின்பு வெற்றி கிடைத்தது: இப்போது அமெரிக்காயுத்தத்தில் சேர்ந்துவிட்டது. ஆகவே இப்படத்தின் மூலம்நாம் அதிகமறிய முடியும். இந்தப் படம் இம்மாதம் 25-ந் தேதி முதல் நியூ எல்பின்ஸ்டனில் காட்டப்படும்.

* * * *

## அப்னு-கார்

"அப்னுகார்" மிகச் சிறந்த படங்களுள் ஒன்று. இந்தப் படத்தைப் பார்க்கும் போதே இதை டைரக்ட் செய்தவரின் பெருமையும் திறமையும் பிரகாசமாகின்றன. பல வருஷங்களுக்கப்புறம் தேவகி போஸ் தயாரித்திருக்கும் இந்தப் படத்தில் நாம் அவருடைய ஆச்சர்யகரமான சக்தியைக் காண்கிருேம்.

உணர்ச்சியும் கலா ருசியும் மிகுந்தது இந்தப் படம். வாழ்க்கைப் பிரச்னைகள் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. ரஸிகர்களும் ரஸிக்கும்படியாக அவை இதில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தப் படத்தின் கதை ஒரு விஷயத்தில் அசாதாரணமானது தான்: ஆனுல் சாத்தியமானதல்ல என்று கூற முடியாது. நரேந்திரன் வாழ்க்கையின் பல அம்சங்களையும் அனுபவித்து மனோதிடம் பெற்றவன். வாழ்க்கையை ஒரு வேடிக்கை விளையாட்டாகவும், சமூகம் சுயகாரியப் புலிகள் சூழ்ந்த சங்கமாகவும் அவன் கருதுகிருன். இத்தகைய நோக்கத்தை மேற்கொண்ட அவன் தனிமையாகவே வாழ்ந்து வருவதால் பிறரைப்பற்றி அவனுக்கு கவலையே கிடையாது. வாழ்க்கையில் இருக்கும் ரஸமான சில விஷயங்களிலும் அவனுக்கு ருசி ஏற்படுவதில்லை.

முதல் மனைவி மரணமும், அவள் சமூகத்தில் வஹித்திருந்த உன்னத ஸ்தானமும் அவனுடைய வாழ்க்கைக் கசப்பாக்கி விடுகின்றன. ஒருவரிடமும் சேராமல் தனிமையாக இருக்க, அவன் ஒரு வனத்தில் இருக்கும் தன்தோட்டத்திற்குப் போய்விடுகிருன்.

இவ்வாறு ஒவ்வொரு நாளும் அவனுக்கு வெறுப்பு வளர்ந்து கொண்டே போகிறது: புதிதாக அவன் மேற்கொண்ட மனோபாவம் அவன் உள்ளத்தில் ஸ்திரப்பட்டுப்போய் அவனுடைய இனிமையான ஸ்வபாவம் எங்கோ மறைந்து விடுகிறது. ஆகவே நல்லவர்களுக்கு இவ் வாழ்க்கை பலன் தராது என்ற எண்ணம் அவனுக்கு அதிகரிக்கிறது.

பிறகு காரியார்த்தமாக நரேந்திரன் நகருக்கு வருகிருன். அப்போது அவன் மீராவைச் சந்திக்கிருன்; முதல் சந்திப்பு அவ்வளவு திருப்திகரமாக இல்லை. இருவரும் சண்டை போட்டுத் திரும்புகின்றனர். மீராவின் தகப்பனுர் சவுதரி வபது முதிர்ந்தவர்: பலஹீனர்: அவரது கம்பெனி அதிகாரிகள் அவரிடம் குற்றம் காணுகின்றனர்: அவர் பிறரை ஏமாற்றி பணம் சேர்த்ததாகவும் புகார் வருகிறது. இந்தக் கம்பெனி டைரக்டர்களுள் நரேந்திரனும் ஒருவன். டைரக்டர்கள் கூட்டம் கூடுகிறது. அன்று சவுதரி தாம் தீய முறையில் சம்பாதித்ததைத் திருப்பிகொடுத்து விட வேண்டும் என்று தீர்ப்பாகிறது, அவ்வளவுதான்! சவுதரியின் மனம் உடைந்து போகிறது. அவரும் நோய்வாய்ப்படுகிருர். இதுவே அவருக்கு ம்ருத்யுவாகவும் முடிகிறது.

இதுவரை மீரா சமூக சேவை செய்து வந்தவள். தகப்பனுர் தனக்காகச் செய்ததை மனதில் வைத்துக்கொண்டு நரேந்திரனை மணம்புரிய ஒப்புக்கொள்கிருள்: இதனுல் சாகுந் தறுவாயிலிருக்கும் தன் பிதாவுக்கு மன ஆறுதல் ஏற்படும் என்பது அவள் நம்பிக்கை.

இந்த விவாகம் பேருக்குத் தான் நடக்கிறது: ஒருவர் மற்றொருவரை காதலிக்கவில்லை. மீரா திடசித்தம் கொண்டவள்: சமூக வாழ்க்கையைப்பற்றி திண்ணமான கருத்து உள்ளவள். விவாகத்திற்கப்புறம் அவளுக்கும் அவளது கணவனுக்கும் அடிக்கடி தகராறுகள் தலைகாட்டின: இதற்குக் காரணம் இருவரும் முரண்பட்ட அபிப்பிராயங்கள் கொண்டதுதான். வஜ்ர ஹ்ருதயம் பூண்ட நரேந்திரன் மீராவை அடக்கியாள விரும்புகிருன்: இனிமையான ஸ்வபாவம் கொண்ட மீரா அவனைத் தன் வழிப்படுத்த முயற்சிக்கிருள். இந்த சமயத்தில் நரேந்திரனுடைய அத்தை குறுக்கே வருகிருள். புதிய தம்பதிகளின் உல்லாஸ வாழ்க்கையைக் கெடுத்துவிட அவள் ஏற்பாடு செய்கிருள்: அவள் பொய் பல பேசி தன் காரியத்தை சாதித்துக்கொள்ளப் பார்க்கிருள்.

ஒரு சமயம் நரேந்திரன் தன் மனம்போன போக்கெல்லாம் உத்திரவிட்டு வருவதற்கு அடங்கி நடக்கக்கூடாது என்றுமீரா கிராம வாசிகளிடம் உபதேசிக்கிருள்: இது முதற்கொண்டு இந்த தம்பதிகளிடையே வேற்றுமை விஸ்தரிக்கிறது. மீராவின் நிராயுதபாணிகளான ஆட்களை தனது ஆயுதபாணிகளான ஆட்களின் உதவியால் நரேந்திரன் அடக்கிவிடுகிருன்.

இதற்கப்புறம் வெகு வேகமாக காலச்சக்கிரம் சுழலுகிறது: நிலைமை மாறிவிடுகிறது. வைத்தியம் பண்ணிக் கொள்வதற்காக நரேந்திரன் நகரத்திற்

குப் போயிருக்கிறான். அச்சமயம் மிகவும் பலஹீனமான ஸ்திதியிலிருந்த மீராவுக்கு ஒரு குழந்தை பிறக்கிறது.

இந்த குழந்தை பிறந்தது, இரும்பு உள்ளம் படைத்த நரேந்திரனையும் ம்ருதுவான ஸ்வபாவம் கொண்டவனாகச் செய்து விடுகிறது, குழந்தையை தன் மடியில் வைத்துக் கொண்டு தாலாட்ட நரேந்திரன் விரும்புகிறான். இதற்காக சிகிச்சையையும் நிறுத்திவிட்டு கிராமத்திற்குத் திரும்ப அவன் ஆவலாயிருக்கிறான்.

மறுபடியும் அத்தை கெட்ட புத்தியுடன் தோன்றுகிறாள். குழந்தையை, அதன் கெட்ட த்ருஷ்டி கொண்ட பிதாவிடம் காட்டக்கூடாது என்று அவள் மீராவுக்கு துர்ப்போதனை பண்ணி, தகப்பனையும் சிசுவையும் பிரித்து வைக்கப்பார்க்கிறாள். எப்போதும் மனதில் தோன்றுவதை நிறைவேற்றும் ஸ்வபாவம் நரேந்திரனுக்கு உண்டாதலால் அவன் திடீரென ஒரு நாள் கிராமத்திற்குத் திரும்பி, தன் குழந்தையைத் தன்னிடம் காட்டும்படிக் கோருகிறான். காட்ட மறுக்கின்றனர் ஸ்திரீகள்: உடனே துப்பாக்கியை கையில் எடுத்துக் கொண்டு உடனே காட்டாவிட்டால் சுட்டு விடுவதாகப் பயமுறுத்துகிறான்.

குழந்தையைச் சுட்டுவிட்டால் என்ன பண்ணுவது என்ற பீதி மீராவுக்கு ஏற்படுகிறது: குழந்தையை அதன் தகப்பன் முன்பு விட்டுவிட்டு அவள் வீட்டை விட்டு ஓடி விடுகிறாள்: இந்த சமயத்தில் அவள் தன் புருஷனிடம் காட்ட வேண்டிய மரியாதையையும் துறந்து ஓடுகிறாள். இவ்வாறு ஓடிப் போகும் போது வழியில் ஓர் நதியில் அவள் வீழ்ந்து விடுகிறாள். அவள் இறந்து விட்டதாக எண்ணி விடுகின்றனர் மற்றவர்கள். ஆனால் சில மைல்களுக்கப்பால் மீன் பிடிக்கும் செம்படவர் வலையில் மீரா சிக்க, அவளை இழுத்து அவர்கள் கரையில் சேர்க்கின்றனர்.

இதற்கப்புறம் மீராவின் குழந்தைக்கு தேக அசௌகர்யம் ஏற்படுகிறது. நரேந்திரனுக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கும் கவலைக்கும் எல்லையே இல்லை. இதுவரை அவன் உள்ளத்தில் இருக்குமிடம் தெரியாமல் ஒளிந்திருந்த நல்ல ஸ்வபாவம் தலை தூக்குகிறது: இருவித மனோபாவமும் அவள் உள்ளத்தில் எதுமேல் தூக்கி நிற்பது என்று போட்டியிடுகின்றன. பல தினங்களுக்குப்பின் குழந்தையின் நிலைமை கவலைக்கிடமளிப்பதாகிறது: அந்த சமயம் மீரா உயிருடன் இருப்பது நரேந்திரனுக்குத் தெரிய வருகிறது. மீராவை அழைத்து வர நரேந்திரன் ஆட்களை அனுப்புகிறான்: அவள் உள்ளத்தில் பலவித உணர்ச்சிகள் உதயமாகின்றன. கடைசியில் மனதை ஒருவிதமாக ஸ்திரப்படுத்திக் கொண்டு அவள் திரும்பிவருகிறாள். குழந்தை இறந்துவிட்டதாக டாக்டர் தெரிவிக்கிறார்,

விஷயம் இத்துடன் நிற்கவில்லை. தன் குழந்தை இறந்துவிட்டதாகக் கூறியதை மீரா நம்ப மறுக்கிறாள். குழந்தையைக் கையில் ஏந்திக்கொண்டு, பாதி ராத்திரி முதல் விடியற்காலை வரை பல மணி நேரம் அந்த அறையில் அங்குமிங்கும் உலாவிக்கொண்டே காலத்தை அவள் கழிக்கிறாள். மற்றவர்கள் இதைப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு நம்பிக்கை சிறிதும் இல்லை.

மறு நாள் காலை குழந்தையை அப்புறப்படுத்த டாக்டர் வந்து பார்த்தபோது, குழந்தை உயிருடன் இருப்பதை அவர் காண்கிறார், என்ன ஆச்சர்யம்! ஒரு தாயின் நம்பிக்கை இத்தகைய நம்ப முடியாத காரியத்தை நிறைவேற்றி விட்டது!

பிறகு குழந்தை மறுபடியும் பழைய நிலைமைக்கே வந்து விடுகிறது. திரும்பவும் வெளிக்கிளம்ப மீரா முயற்சிக்கிறாள். மற்றுமொருமுறை இருவரும் ஒன்று சேருகின்றனர். கடைசியில் இந்த தம்பதிகள் சமூக சேவையில் சிரத்தை கொள்கின்றனர்: மீராவின் ஆசைக்குப் பாத்திரமான துறையில் நரேந்திரனும் ஈடுபடுகிறான்.

இந்த கதைதான் "அப்னாகார்" என்ற படத்தில் சித்தரிக்கப்பட்டிருப்பது. இந்தக் கதையில் வரும் ஒவ்வொருவரும் சாமான்யமானவர்கள். லௌகிகமானவர்கள்: ஒவ்வொரு வீட்டிலும் தாம்பத்ய வாழ்க்கைக்கு எப்படித் தடைகள் ஏற்படுகின்றன என்பதையும், கடைசியில் எல்லாவற்றையும் தாண்டி அது எப்படி திருப்திகரமாக மாறுகிறது என்பதையும் இப்படத்தில் காணலாம். உலகம் இவ்விதம் பல கோடிக்கணக்கான குடும்பங்களைக் கொண்டது: எல்லோரும் சுகித்து சந்தோஷமாக வாழ வேண்டுமானால், ஒவ்வொருவரும் பிறர் கருத்தை உணர்ந்து, கூடிய வளவுக்கு சிரமத்தையும் பொருட்படுத்தாது தியாகத்திற்குத் தயாராக விருக்கவேண்டும் என்ற படிப்பினையையே இந்தக் கதை வெகு அழகாகப் போதிக்கிறது.

இதில் சந்திரமோஹன் நரேந்திரனாக நன்கு நடித்திருக்கிறார். கதா பாத்திரத்திற்கேற்ற நடிப்பு: பொருத்தமான நடிப்பு: பாராட்டக்கூடிய நடிப்பு என்று தான் கூற வேண்டும்.

இந்தப்படத்தின் பெருமைக்கு இதில் நடிக்கும் சாந்தா ஆப்தே [illegible] முக்கிய காரணமாவார். பல வருஷங்களுக்கப்புறம் மறுபடியும் நடிக்க முன் வந்திருக்கும் சாந்தா, இந்தப் படத்தில் தமது திறமையை நன்கு



**மஹாகனம் சாஸ்திரியாரின் "ரிகார்டு"**

சமீபத்தில் பம்பாய் நேஷனல் கிராமபோன் மானுபாகசரிங் கம்பெனிக்கு மஹாகனம் சாஸ்திரியார் விஜயம் செய்தபோது அவரது பிரசங்கம் ஒன்று ரிகார்டு செய்யப்பட்டது



**அகில மைசூர் ஸ்திரீகள் மகாநாடு**

சமீபத்தில் சென்னப்பட்டணம் நேரு நகரில் அகில மைசூர் ஸ்திரீகள் மஹாநாடு ஸ்ரீமதி சுப்பம்மா என். ஜோய் தலைமையில் நடைபெற்றது.



நிரூபித்திருக்கிறார், இடைக் காலத்தில் தமக்கு வாய்த்த அனுபவங்களை அவர் இதில் பயன் படுத்திக்கொண்டிருக்கிறார்,

இதில் மற்றும் ஜகதிஷ் ஜீவன், மாயா பானர்ஜி, விமலா வாயிஷ்டா முதலியோரும் நடிக்கின்றனர்.

* * * *

## "ரோடி"

நேஷனல் ஸ்டூடியோ தயாரிக்கும் "ரோடி" படத்தில் சில பாலைவனக் காட்சிகளைக் காட்ட வேண்டியதவசியமாயிற்று. இதற்காக டைரக்டர் மேஹ்பூப் தமது நடிகர்களை ஜோத்பூருக்கு அழைத்துக்கொண்டு போனார்: அங்கு அவசியமான காட்சிகளைப் படம் பிடித்த பின் அவர்கள் திரும்பி விட்டனர், இந்தப் படப்பிடிப்பின்போது அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டம் அளவிட முடியாததாக இருந்ததாம்.

ஜோத்பூர் நகருக்கு 70- மைல்களுக்கப்பால் போய் படம் பிடிக்க டைரக்டர் மேஹ்பூப் திட்டமிட்டிருந்தார். அப்போது உஷ்ணத்தின் அளவு 115 டிக்ரிகள். மேலே தாங்க முடியாத வெப்பம்: கீழே கால் வைக்க முடியாத கொதிக்கும் மணல் பரப்பு. நேஷனல் ஸ்டூடியோ கோஷ்டியார் குறிப்பிட்ட ஸ்தலத்திற்குப் போனதும், அங்கிருந்த பாலைவன ஜாதியார், யாரோ வருகிறார்கள் என்று பயந்து ஓடி விட்டனர்: டைரக்டர் மேஹ்புக்கு என்ன செய்வது என்று புலப்படவில்லை. அவர்களது உதவியை எதிர்பார்த்தார் அவர். கடைசியாக அந்த ஜாதியாரின் தலைவரான ஹக்கீமிடம் போய் தாம் நல்லெண்ணத்துடன்தான் அங்கு வந்திருப்பதாகவும், ஓடிப்போனவர்களைத் திருப்பி யழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இதற்கு ஹக்கீம் இணங்கினார்: உடனே அவர்கள் திரும்பினர்: நிலைமை தெரிந்தது: தேவையான சந்தர்ப்பங்களும் படம் பிடிக்கப்பட்டன: எல்லாம் திருப்திகரமாக முடிந்தது. ஒருமைல் நீளமான மோட்டார் ரோட் போடும் காட்சியைப் படம் பிடிக்க 701 பேர் உதவியிருந்தது,

* * * *



**பிரபல ஆசிரியர்**

பிரன்ஸிபால் பி. சேஷாத்ரி காலமானார். அவருக்கு வயது 54 ஆகிறது. அவர் ஆஜ்மீர் கவர்னமெண்ட கலாசாலைத் தலைமைப பதவி வஹித்தார் பல சாவ தேசக கல்வி மஹா நாடுகளில் கலந்து கொண்டார். பச்சையப்பன் கலாசாலை, சேலம் கலாசாலை, காசி ஹிந்து கலாசாலை கான்பூர் சநாதன கலா சாலை ஆகிய வற்றில் ஆங்கில போதகாசிரியராக விருந்து சிறப்புற்றார்



காரைக்குடி தேசீய வாலீடர் சங்கக் காரியதரிசி தோழர் ச. வஜ்ரவேல் அவர்கட்கும் மா ஓரா காஞ்செனற ஷண்முகம் பிள்ளை (கண்டிராக்டர்) அவர்கள் குமாரி நீலாவதிக்கும் 23-3-42ல் விவாகம் நடந்தேறியது."

## நடனக்காட்சி

நேஷனல் ஸ்டூடியோவின் சமூகப் படமான "அப்னுப்ரியா" பூர்த்தியாகும் நிலைமையை எட்டியிருக்கிறது. கேரள கலாமண்டலத்தைச் சேர்ந்த ஸ்ரீ சிமன் ஸேத்தும், பிரபல வங்க நடிகை மிஸஸ் ராணி பாலாவும், மிஸ் ஹெலனும் வரும் நடனக் காட்சிகள் தான் இதில் முக்கியமானவை. அவர்கள் இரு பெண்டாட்டிக்காரனது சங்கடத்தை வெகு அழகாக அபிநயித்துக் காட்டுகின்றனர்: கேரள சம்பிரதாயத்தை யொட்டி இருக்கும் இந்த நாட்டியம் குறிப்புக் குரித்தாகும்.

* * * *



**என்ன நிலையற்ற சந்தோஷம்!**

"தி ராம்பார்ட்ஸ் வி வாட்ச்" என்ற படத்தில் ஜர்மன் புரோபஸர் புத்ரி ஹில்டா, வால்டர் அவரில் என்ற இரு காதலர்களாக நடிக்கும் ஜார்ஜட் மக்கியும் எட்வர்ட் ரேகும். உலக யுத்தம் ஆரம்பித்தபோது இவர்களுக்கு அது தெரியாது. ஹில்டா வேவுகாரியாகக் கருதப்படுகிறாள்: வால்டர் ராணுவத்தில் சேருகிறான். இருவரது காதலும் நீர்க் குமிழிபோலாகிறது.


**அட்டைப் படம்**

இருபதாம் நூற்றாண்டு பாக்ஸ் கம்பெனியார் படங்களில் நடிக்கும் ஆனெஸ்பே என்ற பிரபல நடிகை.


## அகடெமி தீர்ப்பு

ஹாலிவுட்டில் சமீபத்தில் 14-வது வருஷாந்திர அகடெமி விருந்து நடந்தது. இதற்கு அநேகர் வந்திருந்தனர். இந்த விருந்தில் சம்பிரதாய முறைகள் பின்பற்றப்படவில்லை: அதிதிகளின் உடையே இதற்கு அத்தாக்ஷி. இந்த விருந்தில் சென்ற வருஷத்திய உன்னத படம் எது, உயர்தர நடிகர் யார், என்ற விஷயங்களில் தீர்ப்பு கூறப்பட்டது.

"ஸார்ஜண்ட் யார்க்" படத்தில் சிறப்பாக காரிகிராண்ட் நடித்ததற்காகவும் "சந்தேகம்" என்ற படத்தில் ஜோன் பாண்டேயின் உன்னத நடிப்பு காட்டியதற்காகவும், "ஹவ்க்ரீன் இஸ் மை வேலி" என்ற படத்தை ஜான்போர்ட் சிறப்புற டைரக்ட் செய்ததற்காகவும், மேற்படி படத்தில் பிரதான நடிகருக்கு அடுத்தபடி டோனல்ட் க்ரிஸ்ப் நன்கு நடித்ததற்காகவும், "க்ரேட் லை" என்ற படத்தில் பிரதான நடிகைக்கு அடுத்தபடி மேரிஅஸ்டார் நன்கு நடித்ததற்காகவும். "ஸிடிஸன் கேன்" என்ற சிறந்த படக் கதையை ஆர்ஸன் வெல்ஸ், ஹெர்மின் மான்கீவிக்ஸ் ஆகியோர் எழுதியதற்காகவும், அவர்களுக்கு அகடெமி சன்மானங்கள் முறையே வழங்கப்பட்டன.


**தமிழ் நூல்கள்**

| | | |
|---|---|---|
| குழந்தைக்கட்டி | 1 | 4 |
| உலகரகசியம் | 1 | 0 |
| நவரத்னலாசெட் | 0 | 12 |
| சாணக்கிய சாஸ்திரம் | 0 | 2 |

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை





ஜலதோஷத்தால் அவதிப்படுவானேன்

பெப்ஸ் உட்கொள்ளுங்கள்

தொண்டை, சுவாசப்பை, மார்பு வியாதிகளுக்குப் பெப்ஸ் சிறந்த நிவாரணி. பாட்டில் ரூ. 1 வீதம் எங்கும் விற்கப்படுகின்றது. பெப்ஸ் உட்கோள்க.



PEPS

கிருமிநாசக சுவாச மாத்திரைகள்.

# "வீண் கிலி"

★ ஸ்ரீ ஸி. ஆர்.

ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் பின் கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

பெரிய நகரங்களில் அனுவசியமாக இருந்துவரும் ஜனங்களைக் கிராமங்களுக்குப் போய்விடும்படி பொது ஜனத் தலைவர்களும் சர்க்காரும் கூட யோசனை கூறி வருகிறார்கள். சர்க்கார் இதுவரை விட்டிருக்கும் அறிக்கைகளின் நோக்கமும் இதுவே: ஆயினும் சர்க்கார் அறிக்கைகளின் வாசகமும் அவர்கள் கையாண்டுவரும் நடவடிக்கைகளும் ஜனங்களுக்குப் பீதி உண்டாக்கி வருகிறது. திடீர் என்று கூட்டம் கூட்டமாகக் கிலி பிடித்து ஜனங்கள் நகரங்களைவிட்டு வெளியேறுவதற்கு யாதொரு காரணமுமில்லை: அப்படிப் போவதில் யாதொரு பிரயோஜனமுமில்லை.

## சமாளிக்க வேண்டும்

ஜப்பானியர்கள் இந்தியாவின் மேல் இப்போது படையெடுப்பதாகக் காணப்படவில்லை. ஏற்றுமதி இறக்குமதி கப்பல்களைக் கவிழ்த்து வருகிறார்கள். துறைமுகங்களை அப்போதைக்கப்போது சேதப்படுத்தி வருகிறார்கள். இந்த நிலைமை வெகு நாள் வரையில் இருந்துவரும். ஒரு வாரம் அல்லது ஒரு மாதத்தில் முடிந்து போகாது. இதற்காக நாட்டிலுள்ளவர்கள் அனைவரும் பயந்து ஊரைவிட்டு ஊருக்கு ஓடிக்கொண்டு வாழ்க்கையைக் கெடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. காப்பற்ற நகரங்களின் மேலும் நிராயுதபாணிகளான ஜனங்களின் பேரிலும்-தேசமெல்லாம் வெடி குண்டுகள் வீசி, வெறிகொண்டவர்கள் போல் ஜப்பானியர்கள் நடந்து கொள்வார்கள் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது. குண்டுகளை இம்மாதிரிப் பிரயோகிப்பதில் அவர்களுக்கு லாபம் ஒன்றுமில்லை என்பதை அவர்கள் அறிவார்கள். முக்கியமான துறைமுகங்களைத் தாக்குவதற்காக வீசப்படும் குண்டுகளினால் ஓர் அளவு உயிர்ச் சேதம் ஏற்படலாம். இதைக்கண்டு நாம் அளவுக்கு மிஞ்சி பயந்து போகக் கூடாது. பெரிய தொத்து வியாதிகள் ஊருக்கு வந்தால் இவ்விதமே பயப்படுகிறோம். பிறகு சமாளித்துக்கொள்கிறோம். அவ்வாறே இந்த நெருக்கடியிலும் நாம் சமாளித்துக் கொள்ள வேண்டும்.

## "அவர்கள் தொகை குறைவு"

இந்தியாவைப் பிடித்துக் கொள்ளும் எண்ணத்துடன் துருப்புகளை இறக்கினால், பிறகு இந்தியாவில் எல்லா பாகங்களிலும் துருப்புகளை நிரந்தரமாக வைத்து அரசியல் நடத்தித் தங்களுடைய பலத்தைச் சிதற விட்டு அபாயத்துக்குள்ளாவார்கள். ஜப்பானியருடைய ஜனத் தொகை குறைவு. ஒரேயடியில் இந்தியாவைச் சமாளிக்கும் பெரும் பொறுப்பை தற்சமயம் எடுத்துக்கொள்ள மாட்டார்கள். இங்கும் அங்கும் தாக்கி ஜனங்களிடையில் பீதியுண்டாக்கி உற்பத்தி ஏற்றுமதி முதலியவைகளைக் கெடுக்கப் பார்ப்பார்கள். அதற்கும் மேல் சென்று நாட்டில் பிரவேசிப்பார்கள் என்று நாம் எண்ண வேண்டியதில்லை.

## பயம் எதற்காக?

நான் சொல்வதெல்லாம் தவறாகப்போய் ஜப்பானியர் எங்கேயாவது படையெடுத்தாலும் கூட நாம் ஏன் பயப்பட வேண்டும்? சர்க்கார் நமக்கு ஆயுதங்கள் கொடுக்கவில்லை. அரசாட்சிப்பொறுப்புகொடுக்கவில்லை. ஊரை விட்டு ஊருக்கு ஓடுவதனால் லாபம் ஒன்றுமில்லை. பிரிட்டிஷ்காரருடைய எதிர்ப்பு வெற்றிபெறாமல் போய், ஜப்பானியர் ஜில்லாக்களிலெல்லாம் பிரவேசிப்பதாயிருந்தால் ஓர் ஊரை விட்டு ஓர் ஊருக்குப் போவதில் என்ன பயன் உண்டாகும்? எது எப்படியாயினும் தற்போது ஏற்பட்டிருக்கும் கவலை வருஷக் கணக்காக இருந்தே வரும். ஆகையால் ஜனங்கள் நிதான புத்தியுடனும் அமைதியாகவும் ஏற்பாடுகள் செய்து கொள்ளவேண்டும்.

## வீண் கிலிப் பேச்சுப் வேண்டாம்

மேநாட்டில் பலமாகக் காக்கப்பட்டு வரும் பெரிய கோட்டைகள், கப்பல்கள், அரண்கள்முதலியவைகளின் பேரில் வீசப்படும் குண்டு வீச்சுகள் நம்முடைய பாதுகாப்பற்ற குடிசைகளின்பேரில் விழுந்துவிடும் என்று பகலிலும், இரவிலும் பயந்து வீணாகப் பெண்களும் குழந்தைகளும் கிலிகொள்ளும்படி பேச்சுகள் பேசவேண்டாம். நம்முடைய நகரங்களைப் பிடிக்க இவ்விதக் குண்டு வீச்சு அவசியமே இல்லை. நம்முடைய ஊர்களை யெல்லாம் எரித்துவிடும்படியான சந்தர்ப்பமும் ஏற்படாது. லண்டனில் விழுந்த குண்டுகள் இங்கேயும் விழும் என்று எதிர்பார்த்துப் பிரமாதமான அபாயக் குழிகளைச் சிலர் கட்டிவருகிறார்கள். இதெல்லாம் வீண் செலவு.

## செய்ய வேண்டியவை

யுத்தம் இன்னும் இரண்டு வருஷம் நடக்குமென்று எதிர்பார்க்கலாம். அதுவரைக்கும் இந்தியாவிற்கு கவலைதான். அதற்காக இப்பொழுதே கிலி பிடித்து செத்துப் போகவேண்டாம். நாட்டில் உணவுப் பொருள்கள் குறைந்து போய் பஞ்சம் ஏற்படும். இதுவே முக்கியமான விஷயம். இது நம்முடைய பொறுப்பு. பருத்தியையும், புகையிலையையும் பயிர் செய்வதை நிறுத்தி, துவரை, கடலை, சோளம், கம்பு, கேப்பை, உளுந்து முதலியவைகள் பயிர் செய்யவேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் பொது சமுதாய காலி இடங்களிலும், காய்கறிகள் பயிர் செய்யவேண்டும். பட்டணங்களிலும்கூட இதைச் செய்ய வேண்டும். கோழி வளர்க்கக்கூடியவர்கள் கோழி வளர்க்க வேண்டும். உணவு பொருள்களை வீணாக்கக் கூடாது. நம் எச்சில் சோற்றை பொரிக்கித் தின்று கோழிகள் சுலபமாய் வளரும். பிரிட்டிஷ் சர்க்காருடன் நாம் பேசிய பேச்சுகள் சரியாக முடிந்து ஒப்பந்தம் ஏற்படவில்லை. இதற்காக ஜனங்கள் கலவரப்பட வேண்டாம். எல்லாக் கஷ்டங்களுக்கும் ஓர் முடிவு உண்டு. நாட்டில் கலகம் கலவரம் இல்லாமல் கிராம பெரிய தனிகர்களும் ஊர் பஞ்சாயத்துகளும் பார்த்துக்கொள்ள வேண்டும்.



டில்லியில் நடந்த காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டத்திற்கு ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் வருகிறார்.


## இலவசம்

லண்டன் நியூ கோல்ட் ஏஜன்ஸியை இன்றே பெறுங்கள். மாதம் ரூ 525. சம்பாதியுங்கள். இதன் நிறம், பள பளப்பு மாறாது. உரைக்கல்லில் உண்மை தங்கத்தைப் போலிருப்பதுடன் தங்கத்துடன் கலக்கலாம். திறமையான தட்டான்கூட, வித்தியாசத்தைக் கண்டு பிடிக்க முடியாது. இரண்டு ஜதை காது தொங்கட்டான்கள, 2 ஜதை அழகிய வளையல்கள், 2 சமீப மோஸ்தர் மோதிரம், 6 தோலா லண்டன் நியூ கோல்ட் சாம்பிளாக அனுப்பப்படும். பூரா காட்லாகும், ஏஜன்ஸி நிபந்தனைகளும் இலவசம்.

LONDON COMMERCIAL CO.,
P. B. 165, LAHORE. (India)
(EAB)

FREE



ART PHOTO ALBUM

French Art Photos of beautiful young girls in charming poses are sent against -/5/- postage stamps with one album free. Limited albums left Order now lest you be disappointed

LONDON COMMERCIAL CO.
P. B. 165 (S. M. M.) LAHORE (INDIA)
(E. A. B.)


## ருஷ்யாவில் நாஸி அக்ரமம்

★

ருஷ்யாவில் ஜெர்மானியரால் கொல்லப்பட்டவர்களின் ப்ரேதங்களை அப்புறப்படுத்தும் பரிதாபக் காட்சி.

★





## ருஷ்யர் கைப்பற்றியவை

★

சிகப்புப் படையினரின் மத்ய ஸ்தாபனத்தில் காட்சியில் வைக்கப்பட்டிருக்கும், கைப்பற்றப்பட்ட ஜெர்மன் விமானம் முதலின.

★

## நாஸிகள் திரும்புகின்றனர்

★

மாஸ்கோவிலிருந்து ஜெர்மனியப் படை திரும்புகிறது. ஒரு கிராமத்தில் வெற்றி கொண்ட சிகப்பு படைக்கு வரவேற்பு.

★



# நவயுகப்பிரசுராலய

## வெளியீடுகள்

| | ரூ.அ. | | ரூ.அ. |
|---|---|---|---|
| வானொலியும் ஒளிபரப்பும் | 2 0 | வெற்றி யாருக்கு ? | 0 12 |
| புதுமைப்பித்தன் கதைகள் | 2 0 | சீதா கல்யாணம் | 0 12 |
| தமிழ்க் குமரி | 1 12 | மாதவி | 0 12 |
| திருச்சி ஜெயில் | 1 12 | முப்பெருந் தலைவர் | 0 10 |
| பெண் | 1 12 | சிந்தனையும் மின்னொளியும் | 0 10 |
| கிரஹதாகம் (பாகம் 1) | 1 12 | பாரதியார் படம் | 0 8 |
| ஷை (பாகம் 2) | 1 12 | தேய்ந்த கனவு | 0 8 |
| மின்சாரத்தின் விந்தை | 1 12 | எல்லோரும் ஓர் குலம் | 0 8 |
| மகாராஷ்டிர ஜீவன் உதயம் | 1 12 | ஸப்த நதிகள் | 0 8 |
| தற்காலத் தமிழ் இலக்கியம் | 1 8 | மேஹர் உன்னிஸா | 0 8 |
| இந்தியாவும் பொதுநல சமுதாயமும் | 1 8 | வார்தா திட்டம் | 0 8 |
| கட்ட பொம்மு | 1 8 | வாழ்க்கைச் சிற்பம் | 0 6 |
| வின்ஸ்டன் சர்ச்சில் | 1 8 | திரிபுரி காங்கிரஸ் | 0 6 |
| பேஸிஸ்ட் ஜடாமுனி | 1 8 | அடிவானத்துக்கு அப்பால் | 0 6 |
| ஆரம்ப அரசியல் நூல் | 1 8 | நிர்மாணம் | 0 4 |
| நடைச் சித்திரம் | 1 8 | மதனி | 0 4 |
| மழையும் புயலும் | 1 8 | ஆறு கதைகள் | 0 4 |
| உலகம் புலவிதம் | 1 4 | விவாகமானவர்களுக்கு ஒரு யோசனை | 0 4 |
| ஸ்டாலின் | 1 4 | சைவ உணவு எது ? | 0 4 |
| பாதுகா பட்டாபிஷேகம் | 1 4 | அவன் அமரன் | 0 4 |
| ஆங்கிலக் கவிதை மலர்கள் | 1 0 | தளபதி டிகால் | 0 4 |
| ஷை பரிசுப் பதிப்பு | 1 8 | அடிமைத் தாய் | 0 3 |
| அருள் மொழிகள் | 1 0 | பக்த குசேலா | 0 3 |
| தமிழ் அறிஞர் முதலியார் | 1 0 | நாசகாரக் கும்பல் | 0 3 |
| அற்புத உலகம் | 1 0 | வ. ரா. சரிதம் | 0 2 |
| உலகத்துச் சிறுகதைகள் | 1 0 | மந்தரை சூழ்ச்சி | 0 2 |
| தேவதாஸ் | 1 0 | ஆர்க்கிமிடீஸ் | 0 2 |
| பாகிஸ்தான் | 1 0 | | |
| கோயரிங் | 0 12 | சுகாதாரச் சட்ட விளக்கம் | 0 1 |

தபாற்செலவு, ரயில் செலவு பிரத்யேகம்.

எமது எல்லா ரயில்வே புத்தகசாலைகளிலும், ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

இவைகள் தவிர வியாபாரிகளுக்கும், வாசக சாலைகளுக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும் கோர்வையான அகப்படக்கூடிய நாவல்கள் முதலியன ஆர்டரின் பேரில் அனுப்பப்படும்.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

Printed and Published by T S Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras.- Editor, C.R. Srinivasan, B





# 'ஒன்றை நினைக்கின்...'

★

ஸ்ரீ வி. ஸி. கோபாலரத்னம்

ஆத்ம:—அதிருக்கட்டும் அந்த Bodi nayakanur zamindari partition matter (போடி நாயகனூர் ஜெமீன்தாரி பாக விஷயத்)லே நான் Opinion (அபிப்பிராயம்) கொடுத்தேனே அதை அனுப்பிட்டியா என்ன?

வரதா:—இல்லே. இப்பதான் Fair type (நன்னு டைப்) ஆச்சு.

ஆத்ம:—நான் சொல்ற வரைக்கும் அனுப்பாதே, அந்த Fellows (பையல்கள்) ஏதோ Fees (பீஸ்) விஷயத்திலே தகரார் பண்ணுவா போலிருக்கு!

வர:—All right sir (சரிதான், ஸார்)

ஆத்ம:—Note (குறிப்பு) பண்ணிக்கோ ...Other wise you will forget (இல்லாவிட்டால் நீ மறந்துடுவே)

வரத:—இதோ Note (குறிப்பு) பண்ணிண்டுட்டேன்!

ஆத்ம:—Cause list (வழக்கு ஜாபிதா) வந்துட்டுதா?

வரத:—ஆஹா......

ஆத்மா:—Venkatagiri appeal (வெங்கடகிரி அப்பீல்)போட்ருக்கா இன்னிக்கி?

வரதா:—இல்லே. இந்த வாரமே போடமாட்டான்னு தோன்றது.

ஆத்ம:—நாம் யாருக்கு? Respondent (பிரதிவாதி)க்கு தானே appear (ஆஜர்) ஆரோம்...ஸரி...என்ன ஸார், அவன் Fees balance (பீஸ் பாக்கி) குடுத்துட்டானு?

வரதா:—இல்லே.

ஆத்ம:—என்ன இல்லே? How much is it sir? (அது எவ்வளவு ஸார்?) 2500 என்னமோ இல்லே? ஓங்களுக்கு எப்பவும் Carelessness (அஜாக்ரதை) தானே. எத்தனை தரம் சொல்றது ஓங்களுக்கு? சே சே, சே. சே.

வரதா:—Fees (பீஸ்) பத்தி பயமில்லே,

ஆத்ம:—I dont care (எனக்கு லக்ஷியமில்லே) பயமென்னு ஸார் பயம்? Nonsense (அபத்தம்), அது எவனுயிருந்தா எனக்கு என்ன ஸார்? எந்த மஹாராஜாவா இருந்தாலும் Full fees (முழுப் பீஸ்) கைக்கு வந்து சேராப் போனு நான் Appear (ஆஜர்) ஆகமாட்டேன். ஒரே Rule (விதி) தெரியுமா. Send wire at once...(உடனே தந்தி அனுப்பு) appeal hearing certain next week Balance fees not received will not appear unless whole balance paid forthwith wire reply (அப்பீல் அடுத்த வாரம் வருவது நிச்சயம் பாக்கி பீஸ் வரவில்லை உடனே பாக்கி வந்தால் தான் ஆஜர் ஆவேன். பதில் தந்தி யனுப்பவும்)

வரதா:—Finished Sir (முடிஞ்சு போச்சு ஸார்)

ஆத்ம:—எந்த Bench லே வரும் அது.

வரதா:—ஜஸ்டிஸ் க்ரனேட், ஜஸ்டிஸ் வளவள அய்யர்.

ஆதமா:—Very good (ரொம்ப நல்லது) நல்ல சரியான Bench (ஜட்ஜ்கள்), எதிர் ஸைட்லே ஏதாவது trick (சூழ்ச்சி) பண்ணி மாத்திடப் போரா... Posting clerk (போஸ்டிங் க்ளார்க்)கைப் பாத்து சரிப்படுத்திக்கோ, தெரியுமா?

வரதா:—Certainly (நிச்சயமா!) அதுக்கென்ன?

ஆத்மா:—அடேடேடே! Thank god. I just now remembered. அடாடா, நல்ல வேளையாய் இப்போதான் ஞாபகம் வந்தது, (டெலிபோனில்) ஹல்லோ, ஹல்லோ! யாரது? ஜஸ்டிஸ் குண்டுராவ் வீடா...... யாரது பேசரது...Oh I see...good morning? (ஓ, அப்படியா குட்மார்னிங்) Good morning (குட்மார்னிங்) ஆமாம்...ஆத்மாராம்தான்...என்ன? ஆமாம்...I had to go to the Government house (நான் கவர்ன்மெண்ட் ஹவுசுக்குப் போவேண்டியிருந்தது) அதா அந்த Travancore rubber estates owners have all engaged me to interview the Governor (அந்த திருவாங்கர் ரப்பர் எஸ்டேட்களுக்காக கவர்னரிடம் போனேன்) Beg your Pardon? (கொஞ்சம் மண்ணிக்கனும்) Fat fees (ரொம்ப பீஸ்) ஆ... Well (சரி)... So...so...not bad (அப்படி...அப்படி... மோசமில்லே)........ஓங்களப் போலையா மாஸம்பறந்தா 4000... I say by the way (அதிருக்கட்டும்) அந்த Succession certificate matter (வார்சு மனு வழக்கு)லே சந்தேகமாயிருக்குன்னு சொன்னையே... Yes yes...(ஆமாம்! ஆமாம்!) I have looked it up (அதைப்பார்த்தூட்டேன்) You may safely decide in favour of the applicant......(மனுதார் பக்கமே தீர்ப்பு சொல்லிவிடலாம்) என்ன? என்ன? ஓ! ஓ! You lazy (என்ன, சோம்பேறித்தனம்) ஆகட்டும்.........Dont worry, Monday you will have it (விசாரம் வேண்டாம். திங்கட் கிழமை கிடைக்கும்)... சரி! வரதாச்சாரி! இது ஒரு Nuisanse (உபத்திரவம்) ராத்திரி Eight (எட்டு)க்கு வந்தூடு...அந்த Judgment dictate (தீர்ப்பு) பண்ணிட்ரேன்.... இப்ப கூட Remind (ஞாபகம்) பண்ணுன். Monday deliver (திங்கட் கிழமை தீர்ப்பு)பண்ணனுமாம்.

வரதா:—ஆஹா அப்படியே.

ஆத்ம:—Come on (வா சீக்கிரம்) Look sharp. அவர் காத்துண்டிருக்கார். By the

வக்கீல் ஆத்மாராம ராவுக்கு பொழுது ரொம்ப நன்றாக விடிந்தது! தூங்கியெழுந்தது தான் தாமதம்; உபத்திரவமும் உடனேயே ஆரம்பித்தது. எடுத்ததெல்லாம் விபரீதம்! பாவம்! வேலைக்கார நாதமுனியை பலமாகக் கோபிக்கிறர்: சம்பளம் சரிவர கிடைக்காமலிருந்தும் சேவை செய்து வந்த அவன் இதுதான் சந்தர்ப்பம் என்று வக்கீல் வீட்டைவிட்டு ஓடிவிடுகிறன்: அடுத்தபடி பெண்டாட்டி புருஷனைப் பலமாகக் கண்டிக்கிறள்: அவர் பண்ணிய அசட்டுத்தனத்தை எல்லாம் குத்திக் காட்டுகிறள்: பத்தினியால் நேர்ந்த பரிபவம் ஒருபுற மிருக்க குமாஸ்தா வரதாச்சாரி வந்து விபரீதத்தைப் பெரிதாக்குகிறன்: அவனும் கக்ஷிக்கார செட்டியாருமாகச் சேர்ந்தது ஆத்மாராம ராவை மிக்கவும் சங்கடப்படுத்திவிடுகின்றனர்! அறியாமல் நடந்த "சூழ்ச்சி" இதுமட்டுமா? இரண்டு தேசசேவிகைகள் வக்கீலிடம் வருகின்றனர்: அவர்களிடமிருந்து தப்ப முயற்சிக்கிறர்: வழி விட்டால் தானே அது சாத்தியம்! கையில் இருந்த கைகடிகாரத்தை கௌரவமாகப் பறிகொடுக்கிறர்: கடிகாரத்தை கடன் கொடுத்த சாவுகார் இந்த சமயத்தில் வந்து சேருகிறன்: எப்படி அவனை நேரில் பார்ப்பது ? ஒளிகிறர் அவர்! பெரிய வாக்ஜாலம் பண்ணி ஜகன்மோஹன நாயுடு வக்கீலிடமிருந்த சில்லரையையும் பிடுங்கிக்கொண்டு போகிறன்! இவ்வளவு மட்டுமல்ல! கடைசியில் வந்த குஞ்சிதபாதமய்யரும் பலே பேர்வழி: வக்கீல் பண்ணும் ஆர்ப்பாட்டத்தை யெல்லாம் மிகவும் பொறுமையுடனேயே பார்த்து வருகிறர்: அந்த வருமான வரி உத்யோகஸ்தருக்கு தான் வந்த காரியம் சித்திக்கிறது! வந்தவர் யார் என்பதை கடைசியில் அறிந்த ஆத்மாராம ராவ் விஷயத்தில் யார்தான் அனுதாபம் கொள்ளமாட்டார்கள் ?